சுறா மீன்கள்

சிவசங்கரி

4346337

சுறா மீன்கள்

1

வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. படுக்கையில் இரண்டு தலையணைகளை அடுக்கி, சாய்ந்து படுத்திருந்தாள் மாயா.

கையில் புத்தகம்— மார்பில் வைத்திருந்த தட்டில் இருந்த பக்கவடாத்தை ஒன்றொன்றாக வாயில் போட்டுக்கொண்டு புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினாள் அவள்.

'ஜாஸ்' புத்தகம் அது.

இந்தப் புத்தகத்தின் பரபரப்பான விற்பனை பற்றியும், யுனிவர்ஸல் கம்பெனியார் மில்லியன் டாலர்கள் செலவழித்து இக்கதையைத் திகிலூட்டும் வண்ணப் படமாக எடுத்திருப்பதும் மாயாவுக்குத் தெரியும்.

ரொம்ப நாளாய்ப் படிக்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்த புத்தகம்.

எதேச்சையாய் அரைமணிக்கு முன்பு தம்பி தியாகு கொணர்ந்து கொடுத்தது.

முதல் பக்கத்திலேயே கதை சூடு பிடித்துவிட்டது.

தனிமையான கடற்கரைப் பகுதி. அமைதியான இரவு நேரம். கடலில் குளிக்க ஆசைகொண்ட பெண்ணொருத்தி வருகிறாள். உடைகளைக் களைந்து விட்டுத் தண்ணீரில் இறங்குகிறாள். கைகளை வீசிப்போட்டு நீந்துகிறாள். கரையை விட்டுச் சற்றுத் தொலைவு வந்தபிறகு

நிதானிக்கிறான். குப்புறப் படுத்து மிதக்கிறான். நிர்மல ஆகாயமும், அந்த இரவும் அவனுக்கு இன்பமாக இருக்கின்றன.

எங்கோ கடலுக்கடியில் உலாத்திக் கொண்டிருக்கும் ஒரு பொல்லாத சுறாமீனுக்கு மனித வாசனை அடிக்கிறது.

சப்தமில்லாமல் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு மோப்பம் எடுத்த வண்ணம் அது இவனை நெருங்குகிறது.

தண்ணீருக்கு மேல் அதன் வாள் போன்ற செதிள் மட்டும் தெரிகிறது.

சுறாமீன் தன் இரையைப் பார்த்துவிடுகிறது. கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாமே என்ற எக்களிப்பில் பெண்ணைத் தாண்டி இப்படியும் அப்படியுமாய் சப்தமில்லாமல் நீந்துகிறது.

பையப் பைய தன்னை வளைத்துக் கொண்டிருக்கும் சுறாமீனை, பெண் பார்க்கவில்லை.

ஆனால், நிம்மதியாய்க் குளித்துக் கொண்டிருந்தவனுக்கு காரணமில்லாமல் அமானுஷ்ய பயம் எழுகிறது.

'ஏன் இப்படி?' என்று யோசித்துச் செயல்படுவதற்குள் அவனைச் சுறாமீன் தாக்குகிறது.

என்னவென்றே அந்தப் பெண்ணுக்குப் புரியவில்லை. வலியைக்கூட உணர மறுக்கிறான்.

அமானுஷ்ய பயம் மட்டும் அவனை விரட்டுகிறது.

நீந்திக் கரைக்கே போக நினைப்பவன் காலைப் பார்க்கிறான்,

முழங்காலுக்குக் கீழ் காலே இல்லை; ரத்தம்—ரத்தம்.

'ஹே'என அலறிக்கொண்டு கரையை நோக்கி நீந்தியவனைத் துரத்தித்துரத்திச் சுறாமீன் கடித்துச் சின்னாபின்னமாக்குகிறது.

மாயாவால் மேலே தொடர்ந்து கதையைப் படிக்க முடியவில்லை.

இது என்ன அநியாயம்!

தனித்து, நாதியில்லாமல் இருக்கும் பெண்ணை—நிராதரவான நிலையில் இருப்பவனை, இந்த சுறாமீன் இப்படிப் பயங்கரமாய்க் கொன்றுவிட்டதே!

சே—!

புத்தகத்தை மூடி வைத்துவிட்டாள்.

எதற்காகத்தான் இப்படியெல்லாம் பீதியைக்கொடுக்கும் விதத்தில் கதை எழுதுகிறார்களோ!

இன்று ராத்திரி தூக்கம் அவ்வளவுதான்.

மாயா ஒரு வேடிக்கையான மனுஷி. எட்டு ஊருக்கு கேட்கப் பேசுவாள். ஆண்களுக்குச் சவால்விடும் திறனில் திறமையாய் வேலை பார்ப்பாள். எல்லாம் சரி, ஆனால் இப்படிப் பயம்தரும்சமாசாரங்களைப் படித்தாலோபார்த்தாலோ கதைதானே என்று விடமாட்டாள்.

திரும்பித் திரும்பி அதையே நினைத்துக்கொண்டு இரவில் தூக்கம் வராமல் அல்லல் படுவாள்.

இப்படித்தான்—இரண்டாம் வருஷம்-மாயா ஹோம் ஸயன்ஸ் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருக்கையில் 'ஹவுஸ் ஆஃப் வேக்ஸ்' திரைப்படம் காலைக் காட்சியில் ஒரு கொட்டகையில் திரையிடப்பட்டது.

ரொம்ப உயர்ந்த படம் என்று சினேகிதிகளெல்லாம் பேசிக்கொண்டு படத்துக்குப் போனார்கள்.

மெழுகு பொம்மைகள் செய்யும் சிற்பியின் கண்ணெதிரிலேயே அவன் கலைக்கூடம் கொளுத்தப்படுகிறது. தலை திருகி உருகி விழும் பொம்மைகள் சிற்பியின் வெறியைத் தூண்டி விடுகின்றன. கொதிக்கும் மெழுகு கொட்டி அவன் முகமும் விகாரமாகிவிடுகிறது எப்படியோ உயிர் தப்பும்

அவன், அழகான பெண்களைக்கொன்று அவர்களின் உடல்களை மெழுகில் முக்கி பொம்மைகளாக்கி விடுகிறான். கதாநாயகியைக் கொல்ல அவன் எப்படியெல்லாம் பாடுபடுகிறான் என்பதுதான் கதை.

இதைப் பார்த்துவிட்டு வந்த மாயா பல நாட்கள் தூங்கவே இல்லை.

வெளிச்சம்போய் இருட்டியபிறகு படத்தின் கொலையாளி வெளியே பெண்களைக் கொல்லக் கிளம்புவான். அதையே நினைத்துக்கொண்டு கதவுமூலைகளிலும், கட்டில் அடியிலும் பார்த்துவிட்டுப் படுப்பாள் மாயா.

இது அசட்டுத்தனம் என்று எவ்வளவோ தனக்குத் தானே சொல்லிக் கொண்டாலும் அவளுடைய பயம் போக சில நாட்களாயின.

அம்மா கூட கேலி பண்ணுவதுண்டு.

'வயசு இருபது ஆனால் என்ன? காலேஜில் முதலாவதாக தேறினால் என்ன? உனக்குள் நீ இன்னும் குழந்தையாக தானே இருக்கிறாய்?' என்று.

அம்மா இப்படிக் கேலி செய்தாலும் அதில் நிறைய பெருமையும் சேர்ந்திருக்கும்.

மாயா எல்லாப் பெண்களையும் போன்றவள் இல்லை.

அழகி—நல்ல அழகி.

வெகுளி—கெட்டிக்காரி, புத்திசாலி.

ஒரு நிமிஷம் சும்மா இருக்கமாட்டாள். துருதுருவென்று சதா அலையும் குணம். வாய் வளவளவென்று பேசிக்கொண்டே இருக்கும்.

மாயா இருந்தால் இந்த வீட்டில் பத்துப் பேர் இருப்பதற்கு சமம் என்று அவளை நன்கு அறிந்தவர்கள் சொல்வதுண்டு.

மாயாவின் அழகைக் காட்டிலும் அவளது சுபாவம் பிறரை இன்னும் சுலபமாய் கவரக்கூடியது. ஒரே நிமிஷம் தான்— தன் கண்களை விரித்துக்கொண்டு, சிரித்த முகத்துடன் அவள் கலகலப்பாய்ப் பேசத் தொடங்கி விட்டால் அவளின் நட்பை விரும்பாத நபர் இல்லை.

யாராயிருந்தாலும் வலியப் போய் பேசுவாள். ஏழை, பணக்காரி என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. ஒருத்தர் 'உதவி' என்று கேட்கும்வரை காத்திருக்க மாட்டாள். இளகின மனசு.

மாயா பிறந்து வளர்ந்தது எல்லாம் கோயமுத்தூரில் தான். அப்பா கோபாலன் டாக்டர். ஜெயில் ரோடில் க்ளினிக் ஊரில் நல்ல வரும்படி உள்ள டாக்டர்களில் இவரும் ஒருத்தர்.

ஆசைக்கொரு பெண், ஆஸ்திக்கொரு பிள்ளை என்று கோபாலனுக்கு மாயாவும், தியாகராஜனும் இருந்தார்கள்.

தியாகு காரைக்குடி என்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கிறான்; இவன் மாயாவைவிட இரண்டு ஆண்டுகள் சின்னவன்.

கோபாலன் பழமையான சம்பிரதாயங்களில் ஊறியவர் என்றே சொல்லலாம். அதற்காகக் கட்டுக் குடுமியும், பஞ்சகச்சமும் கட்டிக்கொள்ளும் வைதிகமான பிராமணர் இல்லை. நாகரிகத்துக்கேற்ப நாடு மாறினாலும், சில அடிப்படைப் பழக்க வழக்கங்கள் மாறக்கூடாது என்று நம்புபவர்.

பெண்களுக்குப் படிப்பு அவசியம்தான். ஆனால்கூடும் பத்தை ஆணும் ஆண் மாதிரி படிக்கத் தேவையில்லையென்று நினைப்பவர்.

மாயா ஹோம் ஸயன்ஸ் படித்துவிட்டு, கல்லூரியில் முதலாவதாகத் தேறியபோது 'வெரிகுட்' என்று சந்தோஷப்பட்டாரே தவிர, மேலே படிக்க ஒப்புக்கொள்ளவில்லை.

'ப்ளீஸ் படிக்கறேனப்பா; என் லெக்சரர் எனக்கு எம். எஸ்ஸி ஸீட் நிச்சயமாய்க் கிடைக்கும் என்கிறாரப்பா.'

'ம்...? எனக்கு உன்னை மேலே படிக்க வைக்க இஷ்டமில்லை. நீ படித்துவிட்டு என்ன பண்ணப் போகிறாய்? உனக்கு கண்டிப்பாய் அடுத்த வருஷம் கல்யாணம். ஸோ.. நீ எம்.எஸ்ஸி சேர்ந்தாலும் ஒரு வருஷம்தான் படிக்க முடியும். பாலாயில்லையா? யூ வோண்ட் பி ஏபில் டு கம்ப்ளீட் இட்..., இதற்குச் சம்மதமென்றால் படி....'

இது எப்படி சாத்தியம்?

ஆக, மாயா பி. எஸ்ஸியோடு நின்றாள்.

ஆனால் பெண் வீட்டில் சும்மா இருக்கக்கூடாது என்று ஆசைப்பட்ட கோபாலன் மாயாவுக்கு ஆயில் பெயிண்டிங்கில் உள்ள ஆர்வத்தை அறிந்தவராய் ஊரில் பிரசித்திபெற்ற ஓவியக்கலைஞரை அழைத்து, பெண்ணின் ஓவியக் கலையை வளர்த்தார்.

மாயாவுக்கு நடனம், பாட்டு இதிலெல்லாம் என்றுமே ரொம்ப ஈடுபாடு கிடையாது.

'நாளைக்கு ஒருத்தர் வீட்டுக்குப் போகப் போகிற பெண் — நாலு பாட்டு தெரியாவிட்டால் எப்படி?' என்று மனைவி சதா முணுமுணுத்ததால் மாயா பி.யூ.சி. படித்த ஆண்டு அவளைக் கூப்பிட்டு, பாட்டு கற்றுக் கொள்கிறாயா என்று கோபாலன் கேட்டார்.

'எனக்குப் பாட்டுக் கேட்கத்தான் பிடிக்கிறது அப்பா பாட இல்லை' என்றாள் மகள்.

கட்டாயப்படுத்த விரும்பவில்லை கோபாலன்.

'அவளுக்கு இஷ்டம் இல்லை விடு—செல்லம்' என்று மனைவியின் ஆசையையும் கத்தரித்து விட்டார்.

'பெண்ணை, போற்றி வைத்துக் கொள்ளணும் — நாகரீகம் அசிங்கமாய்ப் பரவிப்போகும் இந்தக்காலத்தில்

பெண்களை நினைத்தால் மனசுக்குக்கஷ்டமாக இருக்கிறது என்பார் அடிக்கடி.

மனைவி, பெண் மேல் தூசி பட்டால் பொறுக்க மாட்டார். தலை போனாலும் ஆறு மணிக்குப்பிறகு எந்த வேலையும் பார்க்கமாட்டார். குடும்பத்தோடு சினிமா நாடகம், கச்சேரியென்று போவார். நண்பர்கள் பலர், க்ளப் அங்கே இங்கே என்று போகும்போது இவர் அந்தப் பக்கமெல்லாம் தலையை வைத்துக் கூடப் படுத்தவில்லை.

சீட்டு ஆடுவது, ஸோஷியல் ஸ்டேடஸ் என்று சொல்லிக் குடிப்பது, பெண்களும் ஆண்களும் கண்டபடி பழகுவது எல்லாம் அவருக்கு அறவே பிடிக்காது.

'ப்ரெண்ட்ஸ் சினிமாவுக்குப் போகலாம் என்கிறார்கள்—நானும் போகட்டுமா?' என்றால், 'எதுக்கும்மா பஸ்ஸிலேயும் கிஸ்ஸிலேயும் போகணும் கண்டவன் மேலே இடித்துக் கொண்டு? எத்தனை பேர் போகப் போகிறீர்கள்?' என்பார்.

'நாலு...'

அன்று மதியம் கார் கல்லூரிக்கு வரும் டிரைவர் நாலு டிக்கெட்டுகளைக் கொடுத்து, 'ஐயா உங்க சிநேகிதிகளோட வண்டியில் போய்ப் படம் பார்த்து விட்டு வரச் சொன்னாங்க' என்பான்.

பெண் ஆசைப்பட்டதைத் தன் கண்டிப்பான வழியில் கோபாலன் நிறைவேற்றி வைப்பார்.

அவர் 'ஓஹோ' என்ற பணக்காரர் இல்லை என்றாலும் ஓரளவுக்கு வசதிகள் இருந்ததால் தன் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல், பெண்ணின் தேவைகளைப்பூர்த்தி செய்ய அவருக்கு தகுதி இருந்தது.

சின்னக் குழந்தையாய் இருக்கும்போதுகூட மாயா ப்ராக், கவுன் அணிந்தவளில்லை. அப்பாவுக்குப்பிடிக்காது.

ஆனால் இதுக இதுசாய் மற்ற குழந்தைகளிடம் இல்லாத அளவுக்கு நிலவிடம் பாவாடைகளும், சட்டைகளும், நகைகளும் இருந்தன.

தாவணியைச் சற்று அஜாக்கிரதையாகப் போட்டுக் கொண்டால் கோபாலுக்குப் பிடிக்காது.

'மாரை மூடாமல் போடாதே' என்பார். கழுத்து கைகள் மொட்டையாய் நின்றாலும் பிடிக்காது. அதற்காக இரட்டை வடம் சங்கிலியும், முழங்கை முழங்காய் வளைகளும் போட்டுக்கொள்ள வேண்டும் என்பவரும் இல்லை.

மெல்லிசாய் செயின், இடது கையில் வாட்ச், வலது கையில் ஒற்றை வளை, காதுகளில் சின்னதாய் தோடு இருந்தால் கூட போதும்.

அப்பாவின் அன்பும் அலாதி, அவர் கண்டிப்பும் அலாதி என்று உணர்ந்துவிட்டதாலும், வாழ்க்கையில் குறிப்பாக எதற்கு ஆசைப்பட்டாலும் அது உடனடியாய் கிடைத்து விட்டதாலும், குறை என்று எதுவும் இல்லாத கன்னிப் பருவத்தையே மாயா அனுபவித்தாள்.

2

'மாயா!'

'.....'

நதியில் இறங்கி விளையாடும் இரண்டு குதிரைகள் தண்ணீரின் சிலுசிலுப்பில் பிடரி மயிர்களெல்லாம் விரைத்து நிற்க, முன்னங் கால்களைச் சற்றே தூக்கி, கண்களில் திமிர் கூத்தாட, காதுகள் குத்திட்டுப் போக, விரித்த உதடுகளோடு ஒரு குதிரை நீரில் முக்கால் பங்கு அமுங்கி செல்லவே தாவத் தயாராக நிற்கிறது. இன்னொன்று—

காலைச் சூரியனின் கிரணங்கள் படுவதால் நீலமும், நுனியில் வெள்ளை நுரையுமாகத் தண்ணீர் ஜொலித்தது. பின்னால் களங்கமில்லாத ஆகாயம்.

குதிரையின் கண்களில் வெள்ளை நிறத்தை லேசாய்க் கூட்டி, பளபளப்பை அதிகரித்துக் கொண்டிருந்தாள் மாயா.

'மாயா!'

பெயின்டிங் ஜோராய் அமைந்து விட்ட திருப்தியில் அம்மா கூப்பிடுவது கூட அவளுக்குக் கேட்கவில்லை.

எப்போதோ பல வருஷங்களுக்கு முன்னால், ரீடர்ஸ் டய்ஜஸ்ட் அட்டையில் வெளியான அந்த ஓவியத்தைத் தேடி எடுத்து நான்கு நாட்களாகப் பாடுபட்டு இரண்டடிக்கு ஒன்றரை அடி கான்வாஸில் அழகாய் உருவாக்கி விட்டாள் மாயா.

மாடியில் இருந்த அறையை ஒட்டி இருந்த வராந்தா தான் மாயாவின் ஸ்டுடியோ.

வண்ணங்களைக் கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் அவள் இந்த உலகத்தை மறந்து போவாள்.

தலையைச் சாய்த்து, இப்படியும் அப்படியும் திரும்பியும், பத்தடி தள்ளிச் சென்றும் தான் உருவாக்கியதை ரசித்தாள் மாயா.

கூப்பிட்ட குரலுக்கு மகள் ஏன் என்று கேட்காததால் மாடி ஏறி வந்தாள் செல்லம்.

'கூப்பிடுவது காதில் விழவில்லையா?'

'ம்... என்னம்மா?'

'சரியா போயிற்று போ—அப்பா உன்னோடு என்னவோ பேசணுமாம் கூப்பிடுகிறார்.'

'அப்பா கூப்பிடுகிறாரா? இதோ வந்துவிட்டேம்மா!'

கையில் இருந்த ப்ரஷ்களை, மண்ணெண்ணெயை நிரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்த புட்டியில் போட்டாள். கைகளை ஒரு பக்கமாய் போட்டு வைத்திருந்தப் பழந்துணியில் துடைத்துக் கொண்டாள்.

திறந்திருந்த ட்யூப்களை மூடினாள்.

'வாம்மா' என்று கிளம்பினாள்.

சின்ன வயசு முதற்கொண்டே மாயாவுக்குக் கற்பனை அதிகம். உடைந்த முட்டைத் துண்டுகளை பலகையில் ஒட்டி ஓவியம் தீட்டுவாள்; கண்ணாடித் துண்டுகளை வெட்டி மண்பானைகளில் ஒட்டி அழகான பூ ஜாடிகளை உருவாக்குவாள்.

ஒரு கட்டுப் பேப்பரை வெந்தியத்துடன் சேர்த்து நான்கு நாட்கள் ஊறப் போட்டு, மொழு மொழு என்று அரைத்து, பொம்மைகளை நேர்த்தியாய் வெறும் கையாலேயே செய்வாள்.

தான் வரைந்த ஓவியங்களை, கை வேலைகளை வீட்டின் எந்த இடத்தில் மாட்டினால் எடுப்பாக இருக்கும் என்று யோசித்துச் செயல்படுவாள்.

தோட்டத்துப் பூக்களையும், காய்ந்த குச்சிகளையும் கொணர்ந்து வித விதமாய் அடுக்கி, 'இது சகபானா— இது சென்டர் டேபிள் அரேஞ்ச்மெண்ட்' என்று விவரிப்பாள்.

பத்தகங்களைப் படித்து தான் பார்க்காத தேசங்களில் இன்றைய நாகரிகம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வாள்.

அவள் விரும்பியே கல்லூரியில் ஹோம் ஸயன்ஸ் படிப்பைப் படித்தாள்.

புத்தியும் கற்பனையும் இருந்ததால் கல்லூரியில் அவள் தான் முதல்.

கண் பார்த்தால் கை செய்யும் என்பார்களே அந்த ரகம் மாயா.

கோபாலன் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்.

மாயா தடதட வென்று மாடிப்படிகளைக் கடந்து அவர் முன் வந்து நின்றாள்.

'என்னம்மா—பெயின்டிங்கை முடித்தாயிற்றா?'

'ம். ஓ. யெஸ்... வந்து பார்க்கிறீர்களாப்பா...?'

'வரேன்... நீ கொஞ்சம் உட்காரேன்!'

மாயா உட்கார்ந்தாள்

இவளுக்குப் பிறகு மாடியிலிருந்து இறங்கி வந்த செல்லம் கணவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

'துரை லெட்டர் போட்டிருக்கார் மாயா...'

அப்பா மேற்கொண்டு என்ன பேசப் போகிறார் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது.

இவளுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டு சில நாட்களாய் அப்பாவும் அம்மாவும் குசுகுசுப்பது என்னவென்று இவள் அறிவாள்.

'சத்யா யு. எஸ் ஸிலிருந்து வந்து மெட்ராஸில் ரிசர்ச் டைரக்டராக வேலை ஒப்புக் கொண்டு விட்டான். தெரியுமா?'

'ம்—அம்மா சொன்னாள்.'

'சத்யா நல்ல பையன். புத்திசாலி. நமக்கு உறவு வேறு. உன்னை அவனுக்குக்கேட்டு எழுதியிருக்கார் துரை. கொடுக்கலாம் என்று அம்மாவும் நானும் நினைக்கிறோம். உன் அபிப்ராயம் தெரிந்த பிறகு அவர்களுக்கு எழுத உத்தேசம்— என்ன மாயா சொல்கிறாய்!'

ஒரு நிமிஷத்தில் தடக்கென்று பதில் சொல்லக்கூடிய விஷயமா என்ன?

அவள் பேசாமல் இருந்தாள்.

'யோசித்துப் பாரும்மா...அப்புறமாகச் சொல்...'

'யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? அவனைத் தெரியாதா, இல்லை இவளைத்தான் அவனுக்குத் தெரியாதா?

சத்யா—சத்யகுமார்.

மாயாவின் ஒன்றுவிட்ட மாமாவின் பையன் சின்ன வயசு முதற்கொண்டு நெருக்கமாய் பழக்கம் இல்லாவிட்டாலும் சில தடவைகள் பார்த்துப் பழகினவன்.

சத்யாவின் அப்பா துரைசாமி திருச்சியில் மிராசுதாரர் அவருக்கு இரண்டு பிள்ளைகள் சதயகுமார், உதயகுமார், உதயாவுக்கு ஐந்து அல்லது ஆறு வயசிருக்கும் போது அகாலமாய் இறந்து போனான். சத்யாவின் தாய் அதன் பின் நோய் வாய்ப்பட்டுப் போனாள். சதயா கெட்டிக்காரன். நன்றாய்ப் படித்தான். எம். எஸ்ஸி படித்து விட்டு அமெரிக்கா ஸ்காலர்ஷிப் கொடுத்து அழைத்ததால அங்கு போனான். நான்கு வருஷங்களில் பி. எச். டி ஆராய்ச்சிப் பிரிவில் வேலை பார்த்து வந்தவன் போன மாதம் தாய் நாடு திரும்பி இருக்கிறான்.

அமெரிக்காவில் கம்பெனிகள் லட்ச லட்சமாய் சம்பளம் கொடுக்கத் தயாராயிருந்தும் இவன் 'என் நாடு எனக்கு முக்கியம்' என்று வந்தது ஒரு காரணம். திடுதிப்பென்று அம்மா காலமாகி விட்டதால் அப்பாவை கிட்டத்திலிருந்து கவனித்துக் கொள்ளுவது இன்னொரு காரணமாம்; அம்மா சொன்னாள்.

சத்யாவை மனசுக்குள் நினைத்துப் பார்த்தாள் மாயா.

சத்யா நல்ல உயரம். திட்டமான பருமன். மாநிறத்துக்கும் மேலே, அப்பட்டமான ஆண்பிள்ளை. உடம்பின் ஒவ்வொரு அங்குலமும் 'நான் ஆண்' என்று பறைசாற்ற கம்பீரமாய் இருப்பான்.

உருவத்தில்தான் சத்யா இப்படியே தவிர, குணத்தில் ரொம்ப சங்கோஜி. சின்ன வயசில் தாத்தா வீட்டில் விசேஷத்துக்காக எல்லாரும் கூடும்போது சத்யா ஆண் பிள்ளைகள் மத்தியிலேயே இருப்பான். அதிகமாய் பேசி, பழகி, சிரித்து யாரும் பார்த்ததில்லை.

'சத்யா ரொம்ப அடக்கமான பிள்ளை' என்று பெயர் வாங்கினவன்.

சின்ன வயசு சங்கோஜம் இன்னும் இருக்குமா? கடைசியாய் சத்யாவைப் பார்த்து ஐந்து வருஷங்கள் இருக்காது?

மஹா புத்திசாலி என்று பேர் வாங்கி இருக்கிறாரே! மெட்ராசில் வேலையாம்! மாசம் மூவாயிரம் சம்பளமாம்!

சத்யா இப்போது எப்படி இருப்பார்?

அமெரிக்கா போய்விட்டு வந்ததில் மாறி இருக்க மாட்டாரா?

சதயா—மாயா, பெயர்ப் பொருத்தம் புதுமையாக இருக்கிறது. யாரோ முன்னேற்பாடாய்ச் சொல்லி வைத்த மாதிரி.

மாயாவுக்குச் சத்யாவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.

3

சத்யா மாறவேயில்லை. சின்ன வயசில் இருந்தது போல அதிகம் பேசாதவனாய், ரிசர்வ்டாக இருந்தான்.

அமெரிக்காவில் ஐந்து வருஷங்கள் இருந்ததற்கு அடையாளமாய் ஒரு ஆர்ப்பாட்டத்தையும் காணோம்.

சாதாரணப் பேச்சு—அதைவிடச் சாதாரண நடை, உடை என்று இருந்தான். மீசை, கிருதா, நீள முடி?—ம்ஹூம், ஒன்றும் இல்லை.

கல்யாண சம்பந்தமாய்ப் பேச்சுக்கள் எழுந்ததும் ஐந்து வருஷமாய் சந்திக்காதவர்கள் சந்தித்தார்கள்.

காலையில் திருச்சியிலிருந்து வந்தவன் மாலையிலே திரும்பி விட்டான்.

நான்கு மணிக்கு டிபன் ஆன பிறகு மாயாவும் சத்யாவும் தோட்டத்தில் சந்தித்துக் கொண்டனர்.

மகிழ மரத்தடி மேடையில் உட்கார்ந்து பேசினர்.

சுற்றி வளைக்காமல் முதலிலேயே கேட்டுவிட்டான் சத்யா.

'என்னை மணக்க ஆட்சேபணை இல்லையே.'

மாயா 'இல்லை' என்றாள்.

'அம்மா ரொம்ப நாளாய்ப் படுத்த படுக்கையாய் இருந்தால், இப்படி நான் அமெரிக்காவில் இருந்து வருவதற்குள் இறந்து போவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அப்பாவைப் பார்த்தால் கஷ்டமாக இருக்கிறது; 'என்னோடு வந்துவிடுங்கள்' என்றேன். மறுத்துவிட்டார். அப்பா தனியாகத்தான் இருப்பார். ஆனால் பல சமயங்கள் நம்மோடு வந்து இருக்கக் கூடும். அவருக்கு தம் வீடு இன்னொரு வீடாக இருக்கவேண்டும்—நான்

ஒரு ஹோம்லி டைப் மாயா. வேலையில் ஈடுபாடு அதிகம். வேலை விட்டால் எனக்கு என் வீடுதான் ஸ்வர்க்கம்—'

தான் சொல்ல வேண்டியவைகளை எளிமையாகச் சொன்னான் சத்யா.

அமெரிக்காவில் இருந்தவராயிற்றே தொடுவாரோ, அணைப்பாரோ, முத்தமிடுவாரோ என்றெல்லாம் மாயா எண்ணியது தவறாகிப் போனது. அவன் கிட்டே கூட வரவில்லை.

அவர்கள் பேசி முடித்து வீட்டுக்குள் போனதும் 'முகூர்த்தத்தை எவ்வளவு சீக்கிரம் வைக்க முடியும்? செய்யுங்கள்' என்று சொல்லி அவன் புறப்பட்டுப் போனான்.

அடுத்த பதினைந்தாம் நாள் அவர்கள் திருமணம் நடந்தது.

திருமணத்துக்கு முன் அவனிடமிருந்து அன்புமிக்க கடிதங்கள் வரும் என எதிர்பார்த்த மாயா ஏமாந்து போனாள்.

அமெரிக்கா போய் வந்தவருக்கு இதெல்லாம் தெரியாதா?

பின்னர் ஒரு இரவு இனிமையான சூழ் நிலையில் அவன் தலை முடியை விரலால் கோதியவண்ணம் அவள் தான் ஏமாந்ததைச் சொன்னாள்.

சத்யா ஒன்றும் பேசவில்லை—மெதுவாய்ச் சிரித்தான். அவ்வளவுதான்.

ஆனால் அடுத்த சில நாட்கள் பெசண்ட் நகரில் வீடு பார்த்துக் குடிவந்த அன்று, ஆட்களையெல்லாம் போகச் சொல்லிவிட்டு, படுக்க வந்தபோது 'ஸ்வீட் மாயா' என்றவன் கிட்டே வந்தான்.

ஒரே அலாக்காய் அவளைக் குழந்தை போலத் தூக்கிக் கொண்டு படுக்கை அறைக்குள் நுழைந்து, மெல்லபடுக்கையில் கிடத்தி முத்தமிட்டான்.

'இது என்ன புதுக் காதல்?' சிரித்துக்கொண்டே மாயா வினவிய போது 'ஆமாம், நீ எதையாவது மனசில் நினைத்துக் கொண்டுவிட்டு நான் செய்யவில்லை என்றால் 'அமெரிக்காவில் இருந்துகூடவா இதெல்லாம் தெரியவில்லை' என்பாயோ! அதற்காக இந்த அமெரிக்க காதல்' சத்யா வாய் விட்டுச் சிரித்தான்.

மாயாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.

சத்யாவுக்கு வாய்விட்டுச் சிரிக்கக்கூடத் தெரியுமா என்று.

4

பார்க்கப் பார்க்க மாயாவுக்கு பெருமையாக இருந்தது இது தன்னுடைய வீடுதானா? மேல் நாட்டிலுள்ள ஒரு வீட்டைப்போல அலங்காரத்தில் மின்னுவது தன் வீடு தானா? இதெல்லாம் திட்டமிட்டுச் செய்ததுதானா?

'பரவாயில்லை, ஐ ஆம் ரியலி குட் இன்டீரியர் டெகரேஷன்—' வழக்கமாய் தனக்குத் தானே பாராட்டிக் கொள்வதைப் போல இன்றும் அட்சதை போட்டுக் கொண்டாள்.

அழகான பெசன்ட் நகரில் நாகரிக மோஸ்தரில் கட்டப்பட்ட வீடு.

வாசலில் 'போர்ச்'.

ஏறி வந்தால் சின்ன சிட் அவுட். அதில் நான்கு வெள்ளைக் கம்பி நாற்காலிகள். சிவப்புக் குஷன்கள்.

நடுவில் வெள்ளைக் கம்பிக் கண்ணாடி மேஜை. ஓரத்தில் வெள்ளைக் கம்பி தொட்டிகளில் நூதனமான குரோட்டன்ஸ் செடிகள்.

தாண்டி வந்தால் வலது பக்கம் ட்ராயிங் கம் டைனிங் ரூம். இடது பக்கம் விருந்தாளி படுக்கை அறை.

வரவேற்பு — சாப்பாடு அறையை வேலைப்பாடுகள் செய்யப்பட்ட காஷ்மீர மரத்தட்டி பிரித்துக் கொண்டிருந்தது.

டிராயிங் அறையின் சுவர்களில் மஞ்சளும், ஆலிவ் க்ரீனும் கலந்து வால்பேப்பர் ஒட்டப்பட்டிருந்தது. ரோஸ் உட்டினால் ஆன சோபாக்கள், மஸ்டர்ட் நிற குஷன்கள்; ஆலிவ் பச்சையில் லேஸ் கர்டன்கள். அறையில் தரையை அடைத்துக்கொண்டு கறுப்புக் கோடுகள் ஓடும் மஸ்டர்ட் கார்பெட். கூரையில் பிரும்மாண்டமான கொத்து விளக்கு. ஆங்காங்கே மணி ப்ளாண்ட் கொடி. க்ரோடன்ஸ் செடி. ஒரு சுவரில் தசாவதார மரச் சிற்பம், இன்னொரு பக்கம் மாயா கவனமாய் உருவாக்கிய 'கரக ஆட்டம்' வண்ண ஓவியம்.

சாப்பாட்டு அறை முழுவதும் கண்ணுக்குக் குளுமையான பச்சை நிறத்தில் இருந்தது.

படுக்கை அறை ரோஜா நிறம். பிங்க் ஈஸ் ஹாட் என்று படித்திருந்ததன் விளைவு.

சாப்பாட்டு அறைக்கு ஒரு பக்கச் சுவர் முழுவதும் கண்ணாடி. அதில் கதவுகள். திறந்தால் புல்வெளி, தோட்டம் அடக்கமான அலங்காரங்களோடு ஜொலித்துக் கொண்டிருந்தது அறைக்கு ஒன்றாக மாயா தீட்டியிருந்த ஆயில் பெயின்டிங் தொங்கி வீட்டின் அழகைக் கூட்டியது.

கல்யாணமாகி நான்கு நாட்கள் கோயமுத்தூரிலும், நான்கு நாட்கள் திருச்சியிலும் இருந்துவிட்டு நேரே சென்னைக்கு வந்தார்கள்.

'ஹனிமூன் இல்லை மாயா. நான் இப்போதுதானே வேலையில் சேர்ந்திருக்கிறேன். லீவு எடுத்தால் நன்றாய் இருக்காது.'

டாஜ் கோரமாண்டலில் தங்கிக்கொண்டு வீடு பார்த்தார்கள்.

பணம் இருந்தால் வீட்டுக்கா பஞ்சம்?

மூன்றாம் நாள் பெசண்ட் நகர் வீடு கண்ணில் பட்டுவிட்டது.

சத்யாவுக்கு வீடு ரொம்பப் பிடித்துப் போனது.

'பீச் பக்கமாய் அமைதியாய் இருப்பது எனக்குப் பிடிக்கிறது. உனக்கு?'

மாயாவுக்கும்தான்.

கம்பெனியில் சத்யாவுக்கு ஃபர்னிஷ்ட் ஹவுஸ் தருவதாகப் பேச்சு.

'இன்னும் எனக்கு வீடு தரவில்லை. வந்து ஒரு மாதம் தானே ஆகிறது! நாம் மெட்ராஸுக்குப்போய் பதினைந்து நாட்கள் ஹோட்டலில் இருப்பதற்குள் அவர்கள் வீடு தயார் பண்ணிவிடுவார்கள். சரியா மாயா?' — கல்யாணமானதும் சத்யா சொன்னபோது மாயா எகிறிக் குதித்தாள்.

'ப்ளீஸ்—ப்ளீஸ்—வீட்டைப் பார்த்து நாமே டெகரேட் பண்ணிக்கொள்ளலாமே. நான் ஹோம் ஸயன்ஸ்... தெரியுமா? எனக்கு இன்டீரியர் டெகரேஷனில் ரொம்ப இஷ்டம்! ப்ளீஸ்...'

சத்யா சம்மதித்தான்.

பெசண்ட் நகர் வீடு பிடித்ததும் மறுநாளே 'கம்பெனியில் இருபதாயிரம் கொடுக்கிறார்கள்; உனக்குப் போதுமா?' என்ற சேதியுடன் சத்யா வந்தான்.

மாயாவுக்குத் தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை.

அந்தக்கணமே புறப்பட்டு கன்னிமேரா, யு.எஸ்.ஐ.எஸ். பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகங்கள் மேல் படையெடுத்து வீடு அலங்காரம் சம்பந்தப்பட்ட புஸ்தகங்களாக நிரப்பித் தள்ளிவிட்டாள்.

புத்தி இருக்கிறது
அந்தத் திசையில் ஆர்வமும் இருக்கிறது
பிறகென்ன?

ஒரே மாதம், பெசண்ட் நகர் வீட்டைப் பார்த்து மூக்கில் விரலை வைத்தவர்களுக்கு விரலை எடுப்பது சிரமமாயிருந்தது.

கம்பெனியிலிருந்து படுக்கை அறைக்கு ஏ.ஸி. வேறு மாட்டிச் சென்றுவிட்டார்கள்.

கேட்கவேண்டுமா?

தோட்டக்காரன் ஒருவனை ஏற்பாடு பண்ணித் திட்டமிட்டு பூச்செடிகள், புல்தரை இவைகளையும் அமைத்தாள் மாயா.

ஜனவரியில் கல்யாணம்.

மார்ச்சில் பெசண்ட் நகர் வீடு, பூந்தோட்டமாய் இருந்தது.

ஜீனியா, ஸால்வியா ஒரு பக்கம், ஹாலிஹாக்ஸ் டேலியா இன்னொரு பக்கம், வரிசையாய் க்ரோட்டன்ஸ் தொட்டிகள்.

அழகான மனைவி, அழகான வீடு, நிம்மதியான சூழ்நிலை என்று சத்யாவுக்கு ரொம்பத் திருப்தி.

உடனடியாகக் குழந்தை வேண்டாம் என்று இருவருமே தீர்மானித்திருந்தார்கள். முக்கியமாய் மாயாவுக்குக் குறைந்த பட்சம் இரண்டு வருஷங்களுக்காவது குழந்தை வேண்டாம். நான் இதுநாள் வாழ்ந்த வாழ்க்கை வேறு—இப்போது வாழும் வாழ்க்கை வேறு. இதை ஆசைதீர அனுபவித்து விட்டே குடும்பத்தில் அதிகப்பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்தது.

அப்பா திருச்சியிலிருந்து, 'சமையலுக்கு நல்ல அம்மாள் ஒருத்தி இருக்கிறாள்; அனுப்பவா?' என்று எழுதின போது வேண்டாம் என்று மறுத்துவிட்டான்.

நீயும் நானும் தனியா இருப்பதை விட்டுவிட்டு, சதா கூடக்கூட எதற்கு இன்னொரு ஆள்? என்றான்.

வேலைக்காரி, தோட்டக்காரன் உண்டு. வேலைக்காரி வேலை முடித்து வீட்டுக்குப் போய்விடுவாள். தோட்டக்காரன் பின்னால் ஸர்வன்ட்ஸ் குவார்ட்டர்ஸில் இருப்பான்.

சத்யாவுக்கு தனக்குத்தானே ஐந்து வருஷங்கள் சமைத்துச் சாப்பிட்ட அனுபவம் உண்டு.

மாயா சமைக்க வந்தால் கூடவே நின்று பல உதவிகளைச் செய்து தந்தாலும் தருவான். இல்லாவிட்டால் இடுப்பில் கையை விட்டு அணைத்து ஒரு வேலையும் பண்ணவிடாமல் வம்படிப்பான்.

சத்யாவுக்கு வீடு சுத்தமாக இருப்பது பிடித்தது. சோம்பலாய் புத்தகத்துடன் படுக்கையில் சுருண்டு படுத்திருப்பவரை தனக்குப் பிடிக்காது என்று சொல்லுவான்.

கணவனோடு வாழ்ந்துவிட்ட இந்தச் சில மாதங்களில் அவனது பொறுமை, புரிந்துகொள்ளும் தன்மை மாயாவுக்கு வியப்பூட்டியது.

ஆள் சரியாக வேலை செய்யவில்லை என்றால், மொணுக்கென்று மாயாவுக்கு, கோபம் வந்துவிடும். சத்யா சமாதானம் சொல்லுவான்.

உன் புத்திசாலித்தனத்தை அவளிடம் எதிர்பார்க்கலாமா? உன்னளவுக்கு சமர்த்து இருந்தால் அவள் ஏன் வேலைக்காரியாக இருக்கப் போகிறாள்? அவளும் இன்

னொரு மாயாவாகவோ இல்லை சாயாவாகவோ இருக்க மாட்டாளா?' என்பான் மெல்ல

சொல்லிக் கொடுத்துத்தான் பொறுப்புகள் வர வேண்டும் என்று நினைப்பவனில்லை சத்யா.

சட்டையில் பட்டன் இருக்கிறதா என்று பார்ப்பான்; இல்லையென்றால் தானே ஒரு நிமிஷத்தில் தைத்துக் கொண்டு போய்விடுவான். மாயாவாகப் பார்த்துச் செய்து வைத்தால் அவனுக்குச் சந்தோஷம். இல்லாவிட்டால் மனசில் குறை இருக்குமோ என்னவோ, அவளைக் கடிந்து கொள்ளாமல் தானே எந்த ஒரு காரியத்தையும் செய்து கொண்டு விடுவான்

சத்தியாவுக்குக் கலைகளில் அவ்வளவாக நாட்டம் கிடையாது. கர்னாடக சங்கீதம் மட்டும் அனுபவித்துக் கேட்பான்.

ஓவியம்—அது, இது என்றால் புரியாது. அதனால் ஈடுபாடு இல்லை.

மாயாவின் ஓவியங்களையும், அவள் வீட்டை அலங்கரித்திருக்கும் நேர்த்தியையும் நண்பர்களும், அவர்கள் மனைவிகளும் பாராட்டும்போது புன்னகையுடன் மௌனமாய் இருந்து விட்டுத் 'தாங்க்யூ' என்பான். வேறு தெரிந்தாற் போல் எதையும் பேச மாட்டான்.

நண்பர்கள் நடுவிலும், அலுவலகத்திலும் சத்யாவுக்கு நல்ல பெயர்.

சத்யா ரீசர்ச் டைரக்டராக வேலை பார்ப்பது 'ஆதித்யா இன்டர்நாஷனல்' லில். ஆதித்யா ஒரு ஆக்டபஸ் மாதிரி. இன்னதில்தான் சம்பந்தம் உண்டு என்று இல்லை. டிராக்டர், பஸ் தயாரிப்பதிலிருந்து பயிருக்கு பூச்சிமருந்து தயாரிப்பது வரை ஆதித்யாவின் ஆதிக்கம் இருந்தது. முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் சென்னை

யிலேயே உண்டு. தவிர வெளி மாவட்டங்களில் பல, கிடைக்கும் கச்சா மூலப்பொருள்களுக்கு ஏற்ப.

சமீப காலமாய் ஆதித்யா மருந்துத் தொழிலிலும் தலையை நீட்டி வெற்றி பெறத் தொடங்கி இருந்தது. பென்ஸிலின், ஸ்டேரப்டோமைஸின் போன்ற அத்யாவசியமான ஆன்டி பயாடிக் மருந்துகளை சென்னையில் 'ஆதித்யா டரக் இன்டர்நாஷனல்' லில் உற்பத்தி செய்யத் தொடங்கி, வெளிநாட்டில் இருக்கும் நம் திறமையான விஞ்ஞானிகளை, கண்ணில் விளக்கெண்ணை ஊற்றிக் கொண்டு தேடிப்பார்த்தபோது அமெரிக்காவில் இந்தத் துறையில் பேர் வாங்கியிருந்த சத்யா விழுந்தான்.

சத்யா ஆண்டி ரேபிஸ்—வெறி நாய் கடிக்கு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் அந்தச் சமயம் ஈடுபட்டு ஓரளவுக்கு வெற்றியும் கண்டிருந்தான்

சத்யா யு. எஸ். ஸில் இருந்தபோதே ஆதித்யா இன்டர் நாஷனல்' லின் சேர்மன் அவனைச் சந்தித்துப் பேசி இந்தியாவில் அவன் ஏற்கப் போகும் பொறுப்பைப் பற்றிப் பேசியிருந்தார்.

'என் ஆராய்ச்சியை நான் அங்குத்தொடர வசதி செய்து தரப்படுமானால் நான் வருகிறேன்'' சத்யா பேரம் பேசினான்.

சேர்மன் யோசித்துப் பார்த்தார்.

புது மருந்து கண்டுபிடிக்க ஆராய்ச்சிக்கு உதவினால், அந்த மருந்தையும் நாமே உற்பத்தி செய்யலாம். இந்தியாவில் ஆன்டிரேபிஸுக்கு ஏகக் கிராக்கி.

ஒப்புக் கொண்டார்.

சத்யா தாய்நாட்டுக்கு வந்து சேர்ந்தான்.

ஆரம்ப மூன்று மாதங்களில்தொழிற்சாலையில் வேலை அதிகம் இருக்கவில்லை. ஏப்ரல் மாதம் தாண்டினதும்

மருந்து உற்பத்தி தொடங்கிவிட்டதால் வேலையின் பளுவும் அசாத்தியமாய் ஏறிப்போயிற்று.

முதல் மூன்று மாதங்கள் மாயாவுடன் பொழுதைக் கழித்த மாதிரி சத்யாவால் இப்போதெல்லாம் இருக்க முடிவதில்லை.

காலையில் ஏழரைக்கு வேளச்சேரியில் இருந்த தொழிற்சாலைக்குப் புறப்பட்டுப் போனால், மதியம் உணவுக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதுகூட தவறத்தொடங்கியது. மாலை வீடு திரும்புவதும் இரவு கடந்துதான்.

'இன்று டவுனில் இன்பர்னோ போகலாம் மாயா,' என்றுகாலையில் சொல்லிவிட்டுப் போயிருப்பான் மதியம் 'ஸாரி மாயா—இங்கு டெல்லியிலிருந்து சில விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள். வேலை இருக்கிறது' என்று போன் செய்வான்.

நாட்கள் செல்லச் செல்ல இதுபோல இன்னும் தீவிரமாகி கல்யாணமான நான்கு மாதங்களுக்குள் அவர்கள் வெளியில் போவது, கடற்கரையில் கையை கோர்த்துக்கொண்டு காலாற நடப்பது என்ற பழக்கங்களெல்லாம் வெகுவாகக் குறையத் தொடங்கி விட்டன.

5

அன்றைக்கு அசோக் தாளப்பா வரப்போகிறான். போன வாரமே லெட்டர் வந்துவிட்டது. அசோக்கும் சத்யாவும் அமெரிக்காவில் மூன்று வருஷங்கள் போல ஒரே ஃப்ளாட்டில் இருந்தவர்கள். ரொம்ப தோஸ்த்;

'ஸான் பிரான்ஸிஸ்கோ போய்விட்டு ஹொனலுலு-டோக்கியோ, சிங்கப்பூர் வழியாக சென்னைக்கு வரத்

திட்டம்; உன்னோடு அரைநாள். இரவு பெங்களூருக்குப் புறப்படுவேன்' என்று எழுதி இருந்தான்.

சத்யாவுக்கு சந்தோஷம். அதைவிட மாயாவுக்கு! நிஜமாகவே, சத்யாவின் வேலைகள் அதிகரித்த பிறகு வீட்டுப் பக்கம் நண்பர்கள் என்ன ஈ, காக்கைகூட வருவது குறைந்து விட்டது. எத்தனை நாழிகை பெயின்டிங் பண்ணிக் கொண்டிருக்க முடியும்? தனியாக வெளியில் போகும் மாயாவுக்கு அதிகம் பழக்கம் கிடையாது.

சத்யாகூட வருத்தப் படவே செய்தான்.

'கலகலப்பாக நாலு பேருடன் பழகி வாழ்ந்தவள் நீ. நாள் முழுவதும் தனியாக இருப்பது கஷ்டமாக இருக்கிறதா. நான் ஃபாக்டரியில் இறங்கிக் கொண்டு வண்டி அனுப்புகிறேன். உன் தோழிகள், இல்லை உறவுக்காரர் வீட்டுக்குப் போய் வாயேன்' என்று கூட ஓரிரு முறைகள் சொன்னதுண்டு.

தூரத்து உறவுக்காரர்கள் சிலர் சென்னையில் இருந்த தென்னவோ உண்மைதான். அதற்காகத் தினம் தினம் அவர்கள் வீட்டில் போய் நிற்க முடியுமா, என்ன?

அப்பா, அம்மா நான்கு நாட்களுக்கு வந்து தங்கிச் சென்றார்கள். மாமனார் மாதம் இரண்டு நாட்கள் என்று வந்து தங்கினார்.

ஒரு தடவை அவர்கூட சத்யாவிடம் சொன்னார்; 'புதுசாய்க் கல்யாணமான பெண். பெற்றவர்களைப் பிரிந்து இருப்பது வேதனையாக இருக்கும். வேலை வேலை யென்று இவளைத் தனியாய் விடாதே...சுற்றுப் புறமும் 'ஹோ' வென்று இருக்கிறது.

லைப்ரரிக்கு அதிகமாய்ப் போனாள் மாயா. கதைகள், வீட்டுக் குறிப்பு, சமையல் புத்தகங்கள் என நிறையக் கொணர்ந்து படித்தாள்.

புத்தகங்களை வைத்துக்கொண்டு தினுசு தினுசாய் சமைப்பதில் கேக் முதலியன செய்வதில், கொஞ்ச நாட்கள் பொழுதைக் கழித்தாள்.

தோட்டக்காரனுடன் மன்றாடுவாள். அவனுக்குச் சரியாகக் களைக் கொட்டைக் கையில் ஏந்திப் புல் செதுக்குவாள்.

திடீரென்று நினைத்துக் கொண்டு இரட்டைச் சோபாவை வலது புறம் நகர்த்தி, ஸ்டீரியோ செட்டை இடது பக்கம் தள்ளி, பூந்தொட்டிகளைச் சுவர் சித்திரங்களை இடம் மாற்றி வைத்து 'அறையின் அலங்காரத்தை மாற்றுகிறேன்' என்று பகலைப் போக்குவாள்.

மாலை சத்யா வந்ததும் 'ஹாய், இந்த அமைப்பு பிரமாதம்' என்பான் என்று எதிர்பார்ப்பாள்.

ம்ஹூம்.

சில சமயங்களில் மாயா வலிய கேட்பாள்; 'யூ டோன்ட் லைக் திஸ் அரேஞ்ச்மெண்ட்?'

வாட் அரேஞ்ச்மெண்ட்?' சத்யாவுக்குப் புரியாது.

அவள் பொறுமையுடன் எடுத்துச் சொன்னால்—'ஓ அப்படியா? எனக்கு ஒன்றும் வித்தியாசம் தெரிய வில்லையே!' என்பான் வெகுளியாக.

கேக், புட்டிங் என்று செய்து இரவு உணவில் பரிமாறினால், 'எதற்காகச் சிரமப் படுகிறாய் மாயா?... சாதாரணமாகவே சமைக்கக் கூடாதா? என்பான் கனிவுடன்.

'ஓ! யெஸ் ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆனாலும் எதற்காக வீண் சிரமம்? எனக்கும் தொந்தி போடுகிறது.

ஆக—நாட்கள் இந்தத் தினுசில் போகத் தொடங்கிய சமயத்தில்தான் அசோக் தாஸப்பாவின் கடிதம் வந்தது.

நண்பன் வருகிறான் என்பதால் வேலைகளை ஒதுக்கி விட்டு, முன்னாலேயே சத்யா அன்று வீட்டுக்கு வந்து விட்டான்.

இருவருமாய் ஏர் போர்ட்டிற்குப் போய் அசோக்கை அழைத்து வந்தனர்.

அசோக் சத்யாவின் நண்பன் என்று நம்புவதே கஷ்டமாயிருந்தது.

கட்டம் போட்ட லேட்டஸ்ட் அமெரிக்கன் சூட், கன்னத்தை மறைத்துக் கொண்டு கிருதா, அடர்த்தியாய் வழிந்த மீசை பெரிய கண்ணாடி, பட்டை பெல்ட், குதி உயர்ந்த ஷு, அட்டஹாசமான பேச்சு—சிரிப்பு.

'ஹலோ சத்யா!' அகல கால் வைத்து நெருங்கினவன் ஒரே கட்டாய் கட்டிக் கொண்டான்.

'அசோக், திஸ் ஈஸ் மாயா—'

ஏர்போர்ட் என்பதையும் மறந்து ஒரு கையை மடக்கி இடுப்புக்குக் கீழ் குனிந்து மகாராணிக்கு வணக்கம் செலுத்துவது போல் மாயாவை வணங்கினான்.

பின்னர் சத்யாவின் முதுகில் பட்டென்று தட்டி, 'சரியான தேவதையைப் பிடித்திருக்கிறாய் வாழ்த்துக்கள்' என்றவன், 'புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. நீங்களும் சத்யாவை அடைய பாக்கியம் பண்ணி இருக்க வேண்டும்' என்றான் மாயா பக்கம் திரும்பி.

வீட்டுக்கு வரும் வழியிலும், வந்த பிறகும் சளசள வென்று அசோக் பேசினான். பெரியதாய்ச் சிரித்தான்.

நண்பனா? இவனா? சத்யாவுக்கா?

மாயாவுக்கு நம்புவது கஷ்டமாக இருந்தது.

சாப்பிட்டார்கள்.

'எக்ஸலண்ட், டிலைட் ஃபுலி டேஸ்டி' என்று பதார்த்தத்துக்குப் பதார்த்தம் பாராட்டினான். அனுபவித்துச் சாப்பிட்டான்.

'நீ அதிருஷ்டசாலி சத்யா. அழகான மனைவி, ருசியாய் சமைக்கத் தெரிகிறது. வீட்டைப் பார் அமெரிக்க வீடுகள் கெட்டது! அத்தனை தேர்ந்தியான அலங்காரம். குட்—யூ ஆர் டாம் லக்கி' என்று வெளிப்படையாகப் புகழ்ந்தான்.

மாயாவுக்கு உச்சி குளிர்ந்து போனது. இத்தனை உசத்தியாய், மனம் விட்டு எந்த ஒரு ஆண் மகனும் பாராட்டி அறிந்திராததால் வெட்கத்தை மீறிக்கொண்டு மனசெல்லாம் இனித்தது.

பகல் மூன்று மணி இருக்கும்.

டெலிபோன் கூப்பிட்டது.

மாயா எடுத்துப் பேசினாள்.

அசோகிற்குப் போன்.

'மஸ்ட் பீ ராம். நான் இங்கு இருப்பதை அவனுக்கு மட்டும் எழுதியிருந்தேன்' என்று சொல்லிய வண்ணம் எழுந்து போய்ப் பேசினான்.

அவன் நண்பன் ராம்நாத் சென்னையில் வளரும் ஆர்கிடெக்ட் — இவனைப் பார்க்க வருகிறானாம்.

'ராம்நாத் தெரியுமில்லையா? அப் கமிங் ஆர்கிடெக்ட்'

சத்யா தெரியும் என்றான். 'லாணிக்ரூப் ஆஃப் தியேட்டர்ஸி'ன் அமைப்பாளன்; யாருக்குத் தெரியாது.

'ராம், புதிதாக சொந்த அலுவலகக் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறான். நான் அதைப் பார்க்க வேண்டும் என்கிறான். அவனோடு போய்விட்டு, அப்படியே ஏர் போர்ட்டிற்குப் போய்விடுகிறேன். யூ டோண்ட் பாதர்' என்றான் அசோக்.

ராம்நாத் வந்துவிட்டான்.

'ராம் திஸ் ஈஸ் டாக்டர் சத்யகுமார்; சத்யா-அண்டு தட் ஈஸ் மிஸஸ் சத்யகுமார்—மாயா.'

புகழையும், பேரையும் மனதில் வைத்துக்கொண்டு ராம்நாத் கொஞ்சம் வயசானவனாக இருப்பான் என்று மாயா நினைத்திருந்தாள்.

இல்லை.

நாற்பது இருந்தால் அதிகம்.

ராம்நாத் பங்களூரைச் சேர்ந்தவன். அதனால் இவன் குடும்பத்துக்கும், அசோக் குடும்பத்துக்கும் ரொம்ப வருஷப் பழக்கமாம்.

ராம்நாத் வீட்டைப் பார்த்து மகிழ்ந்து போனான்.

'யார் இதற்கு இன்டீரியர் டெகோரேடர்? என்ற போது சத்யாவை முந்திக்கொண்டு அசோக், 'மாயாவின் சொந்த கற்பனையப்பா' என்றான்.

'ஓ! நீங்கள் எந்தக் கல்லூரி மாணவி?'

மாயா சொன்னாள்.

'வெறும் ஹோம் ஸயன்ஸ் படித்துவிட்டா இத்தனை அழகாகக் கற்பனை செய்திருக்கிறீர்கள்! ப்ரில்லியண்ட். இதை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதர்வொய்ஸ் இட் ஈஸ் எ வேஸ்ட்...'

மாயாவின் சரக ஆட்ட ஓவியத்தை அருகில் சென்று பார்த்தவன், அதில் மாயா என்ற பெயரைக் கண்டுவிட்டு 'குட்னஸ், இதையும் நீங்களா வரைந்தீர்கள்?' என்று வியந்து போனான்.

ராமின் குஷியைக் கண்ட அசோக், 'இதற்கே அசந்து போனால் எப்படி? உள்ளே வந்து பார்' என்று சொல்லி சாப்பாட்டு அறையில் இருந்த குதிரைகளையும், மற்ற அறை ஓவியங்களையும் கொண்டு காட்டினான்.

மாயாவுக்கு மூச்சு முட்டிப் போகும் அளவுக்கு அன்றைக்குப் பாராட்டுகள் கிடைத்தன.

சாதாரண ஆள் ஒருத்தர் விமர்சிப்பது எப்படி? விஷயம் அறிந்த, அந்தத் துறையில் ஈடுபாடுள்ளவர் விமர்சிப்பது எப்படி!

அசோக் நண்பனுடன் புறப்பட்டான்.

'உங்களைச் சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம் டாக்டர். மிஸஸ் சத்யகுமார் டாலண்டட் பெர்ஸன். அதை வீணாக விடக்கூடாது'' என்று சொல்லிவிட்டு ராம்நாத் போய்ச் சேர்ந்தான்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு அன்று சத்யாவும், மாயாவும் இரவு உணவு ஆனதும் எலியட் பீச்சில் காலாற நடந்து போனார்கள்.

மாயாவின் இடையில் கையைவிட்டுத் தன்னோடு நெருக்கி அணைத்துக்கொண்டு நடந்தான் சத்யா.

''என்ன; ஐயா மூடில் இருக்கிறார் போலத் தெரிகிறது.''

இரண்டு விரல்களால் இடையில் சதையைக் கிள்ளினான் சத்யா.

''ஆ! வலிக்கிறது சத்யா. என்ன நண்பனைப் பார்த்த குஷியா?''

''ம்—அதுமட்டுமில்லை; உன்னை அசோக் ராம்நாத் எல்லாரும் பாராட்டினது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது மாயா...''

''நிஜம்மா?''

''ம்... ராம்நாத் சொன்னது போல உன் திறமையை வளர்த்துக் கொள்ளணும் மாயா. எனக்கு இந்த பெயின்டிங் அது இது எல்லாம் ஒன்றும் தெரியாது, புரியாது. பட், அதற்காகச் சும்மா இருந்தால் எப்படி?—''

இத்தனை நாட்களில் சத்யா இந்த தினுசில் பேசினது கிடையாது.

''எனக்கும் ஆசைதான் சத்யா...ஆனால் என்ன செய் லாம் என்றுதான் புரியவில்லை...சின்ன வயசிலிருந் ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸில் சேர்ந்து படிக்க வேணும் என ஆசை—அப்பா சம்மதிக்கவில்லை—கோ-எஜுகேஷன் அதெல்லாம் எனக்குப் பழக்கமில்லையே...''

''ஸில்லி கேர்ல். கோ-எஜுகேஷனாக இருந்தா என்ன?ம்?..இப்போது நீ சேர்ந்து படிக்க வேணுமென்றா செய் கல்யாணமான பிறகும் அதென்ன தயக்கம் மாயா சில சமயங்களில் உன்னை உன்னால் சரியாகப் புரிந் கொள்ள முடிவதில்லை; எல்லோரிடமும் கலகலப்பா பேசி, நல்ல சிநேகிதத்தை உடனடியாக உண்டாக்கி கொள்ளும் உனக்கு கோ-எஜுகேஷன் பற்றித் தயக்கம ரியலி-திஸ் ஈஸ் ஸில்லி...முதலில் கஷ்டமாக இருக்கலா ஆனால் இரண்டு நாளில் பழகிவிடும் மாயா.'

'யோசிக்கிறேன்' என்று சொன்ன மாயா பேச்சை திசை திருப்பினாள்.

'அசோக், உங்கள் நண்பன் என்று என்னா நம்புவது கஷ்டமாக இருக்கிறது சத்யா.'

'வொய்?'

'உங்கள் இரண்டு பேர் குணங்களும் ரொம்ப வித்தி சமாக இருக்கிறதால் சொன்னேன்.'

'அசோக் நல்ல மனசு கொண்டவன் மாயா. கலகல பானவன். உன்னே குழந்தை சுபாவம். உன்னை மாதி

'என்னை மாதிரியா?'

'ம்...காதுக்குக் காது உனக்கு வாய் இருக்கிற சாமர்த்தியம் இருக்கிறது! பிறரை வசீகரிக்கும் ஸ்மார் னஸ் இருக்கிறது. இருந்தாலும் நீ பல விஷயங்கள் குழந்தைதானே—'

'பெரிய சைக்கியாட்ரிஸ்ட் என்று நினைப்பா? குணங்களை அலசியாகிறது!'

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

6

பத்து நாட்கள் போலச் சென்றிருக்கும்.

மாயா ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸுக்குச் சென்று வகுப்புக்களைப்பற்றி விசாரித்துவிட்டு வந்தாள்.

பகுதி நேர வகுப்புக்கள், குடும்பத்தில் உள்ளவர்களுக்கு, வேலை பார்ப்பவர்களுக்கு, ஏற்ற விதத்தில் இருக்கின்றன என்று தெரிய வந்தது.

சேருவதாக மாயா தீர்மானித்துவிட்டாள்.

அடுத்த வாரத் துவக்கத்திலிருந்து பள்ளிக்குப் போக ஏற்பாடுகளைக்கூடச் செய்துவிட்ட சமயத்தில், அன்று ராம்நாத்தின் போன் வந்தது.

ரிஸீவரை எடுத்து, 'ஹலோ' என்றாள் மாயா.

'கான் ஐ ஸ்பீக் டு மிஸஸ் சத்தியகுமார்?' ஒரு பெண்ணின் குரல் குசுகுசுத்தது

'ஸ்பீக்கிங்'

'நான் ராம்நாத் அண்ட் அஸோஸியேட்ஸிலிருந்து பேசுகிறேன். மிஸ்டர் ராம்நாத் உங்களோடு பேச விரும்புகிறார். ஒரு நிமிஷம்—'

சில கணங்களில் ராம்நாத்தின் குரல் கேட்டது.

'மிஸஸ் சத்தியகுமார்?'

'எஸ்.'

'குட் மார்னிங். நான் ராம்நாத்—நினைவிருக்கிறதா? அசோக வந்திருந்தேனே!'

'ஓ! உங்களை மறக்க முடியுமா?'

'உங்களோடு சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும். மாலை நாலு மணி அளவில் வீட்டில் இருப்பீர்களா? நான் அங்கு வரலாமா?'

'சத்யா வருவதற்கு நேரமாகும். அவர் நாலு மணிக்கு இருக்க மாட்டாரே!'

'எனக்கு டாக்டரோடு பேச வேண்டாம். உங்களோடு தான்.'

'என்னோடா? எதற்கு?'

வரச் சொன்னாள் மாயா.

நாலு மணிக்கு ராம்நாத் வந்துவிட்டான்.

'உங்கள் வீட்டையும், ஓவியம், மற்ற கலைகளில் உங்களுக்கு ஈடுபாடு உள்ளதையும் பற்றி நான் யோசித்துப் பார்த்தேன். நீங்கள் திறமை உள்ளவர் என்று புரிந்தது. நாங்களும் வளரும் கம்பெனிதான். உங்கள் திறமையை உபயோகப்படுத்திக்கொண்டால் என்ன என்று தோன்றியது...'

இவன் என்ன சொல்கிறான்?

'ராம்நாத் அண்ட் அஸோஸியேட்ஸில் நாங்கள் மொத்தம் மூன்று டைரக்டர்கள்; பாஸ்கர், தாமஸ், நான் —அவர்களிடமும் கேட்டுவிட்டேன். நாங்கள் இப்போது கட்டி முடித்திருக்கும் எங்கள் அலுவலகத்தை ஜோடிக்க வேண்டும். வழக்கமான பெரிய இன்டீரியர் டெகோரேட்டர்களைத் தவிர்த்துவிட்டு உங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன என்று நினைக்கிறேன்...என்ன சொல்கிறீர்கள்?'

மாயா இப்படி ஒரு அழைப்பைச் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

நகரின் பெரிய ஆர்கிடெக்ட் தன்னைப் பாராட்டின போது ஓரளவுக்குப் புகழ்ச்சிக்காகப் பேசுகிறார் என்றே நினைத்திருந்தாள்.

ஆனால் — இப்போது?

'தாங்க்யூ மிஸ்டர் ராம்நாத். ஆனால்—எனக்கு...'

'உங்களுக்குத் தன்னம்பிக்கை வரவழைப்பதற்காகத் தான் இந்தச் சின்ன வேலையைக் கொடுக்கிறேன் மிஸஸ் சத்யகுமார்.'

'சத்யாவிடம் பேசிவிட்டு உங்களுக்குப் போன் பண்ணட்டுமா?'

'தேவையில்லை. நாளை காலை பத்து மணிக்கு என் அலுவலகத்துக்கு வந்துவிடுங்கள். டாக்டர் மறுப்புச் சொல்லக் கூடியவர் என்று எனக்குத் தோன்றவில்லை. தன் அலுவலக முகவரியைக் கூறிவிட்டு ராம்நாத் புறப்பட்டுப் போனான்.

பத்து நிமிஷ காலத்துக்கு உட்கார்ந்த இடத்தை விட்டு மாயா எழுந்திருக்கவில்லை. மனதின் ஆர்ப்பாட்டம் கொஞ்சம் அடங்கினதும் உடனடியாக சத்யாவுக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னாள்.

'வெரி குட்! உனக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் மாயா. ராம்நாத் உன்னை நினைப்பில் வைத்துக்கொண்டு கூப்பிட்டிருக்கிறானே! நைஸ் ஆப் ஹிம்—'

'அவ்வளவு பெரிய ஆர்கிடெக்டிடம் வேலை பண்ணுகிற மாதிரி எனக்குத் திறமை இருக்கிறதா சத்யா?'

'ஓய்-நாட்? திறமை இருப்பதால்தானே அவனே வலிய கூப்பிட்டிருக்கிறான்? மாயா - எனக்கு இந்த 'லைன்' பற்றி ஒன்றும் தெரியாது. பட் ராம்நாத்திற்குத் தெரியாதா?''

'எனக்குத் தயக்கமாய் இருக்கிறது, சத்யா!'

'சமர்த்து, புத்திசாலியான நீ ஏன் இப்படிக் குழந்தைத்தனமாய் பேசுகிறாய் என்று புரியவில்லை. மாயா, சந்தர்ப்பம் வாழ்க்கையில் இரண்டு தடவை வராது என்று சொல்வார்கள் தெரியுமா?'

மனசு நிறைய ஆசைகள் இருந்தாலும் இத்தனை வருஷங்களாக அவள் வளர்ந்துவிட்ட சூழ்நிலையின் பழக்கத்தால் மனசில் பயம், தயக்கம் உண்டானதை அவளால் தடுக்க இயலவில்லை.

அவள் கெட்டிக்காரி. மனிதர்களிடம் சுலபமாய்ப் பேசி, பழக அவளால் முடியும். என்றாலும் எதற்கும் பழக்கம் வேண்டாமா?

ஆண்களுக்குச் சரியாக புத்திசாலித்தனத்துடன், திறமையுடன் தன்னால் நடந்துகொள்ள முடியுமா என்று அவள் பயந்ததெல்லாம் வீண்; மனிதர்களை இனிமையான சுபாவத்தால் கவருவது; புத்தி சாமர்த்தியத்தால் பிரமிக்க வைப்பது என்பதெல்லாம் தன் ரத்தத்தில் ஊறி இருப்பவை. சரியான கால நேரம் அமைந்தால் இக்குணங்கள் வெளியே பீறிட்டு அவளை லட்சத்தில் ஒரு அபூர்வப் பெண்ணாக்கும் என்பதெல்லாம் அன்றைக்கு மாயாவுக்குத் தெரிய நியாயமில்லாததால் அவள் தயங்கினாள்; பயந்தாள்.

7

மாயாவுக்கு பெயின்டிங் பிரஷ்ஷைக்கையால் தொட்டு மாதக் கணக்காகிவிட்டது.

எங்கே நேரம்?

காலையில் புறப்பட்டுப் போனால் பாதி சமயங்கள் மாலையில் இருட்டிவிடும் — வீடு திரும்ப. அதன் பிறகு ஏதாவது பார்ட்டி இருக்கும். இல்லாவிட்டால் பேப்பரையும் ஃபெல்ட் பென்களையும் வைத்துக்கொண்டு அடுத்த வேலைக்கு வரைபடம் வரைந்து பார்ப்பதில் நேரம் ஓடி விடும்.

ராம்நாத்தைச் சந்தித்து ஒன்பது மாதங்கள் இருக்குமா?

அவள் கணக்குப் போட்டாள்.

மே, ஜூன்......ஜனவரி...

பேஷ்! நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றன!

அவளுக்குக் கல்யாணமாகி ஒரு வருஷம் பூர்த்தியாகி விட்டது!

ராம்நாத் அண்ட் அஸோஸியேட்ஸ் பகுதி நேர வேலை பார்க்கத் தொடங்கி நான்கு வேலைகளை முடித்து விட்டாள். இன்று கையில் சின்னதும் பெரிசுமாய் ஆறு வேலைகள்.

ஒரு வருஷ காலத்தில் தன் வாழ்க்கையில் இவ்வளவு மாற்றங்கள் இருக்கப் போகின்றன எனப் போன வருஷம் யாராவது சொல்லி இருந்தால், 'உங்களுக்குப் பைத்தியமா?' என்று கேட்டிருப்பாள்.

அவளுக்கு நம்பிக்கை தராத தினுசில் என்னென்ன மாறுதல்கள்.

ராம்நாத் அழைத்து, மாயா அவன் அலுவலகத்துக்குப் போன நேரம் நல்ல நேரமாக இருந்திருக்க வேண்டும்.

பத்து மணிக்கு அவள் மவுண்ட்ரோடிலிருந்து 'ராம்நாத்' அண்ட் அஸோஸியேட்ஸ் அலுவலகத்தை அடையும்போது ராம்நாத் தன் அறையில் காத்திருந்தான்.

அவன் செய்யப் போகும் வேலையை எடுத்துச் சொன்னான்.

'இந்த இடம் கட்டி முடியும் நிலையில் இருக்கிறது. ஆங்காங்கு வேலைகள் நடப்பதைப் பார்த்திருப்பீர்களே; திரும்பத் திரும்பப் பழைய டெகரேட்டர்களை அழைப்பதற்குப் பதில் இளம் கலைஞர்களுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். ஐ வாண்ட் டு டிரை யூ...'

மாயா பதில் பேசவில்லை.

'ரைட்' இந்த அறை என்னுடையது, வாசலில் இருப்பது வரவேற்பு அறை; என் அஸோஸியேட்ஸ் அறைகளின் அலங்காரங்களை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். என் அறை, வரவேற்பறை இரண்டையும் நீங்கள் தயார் பண்ணவேண்டும் என்று நினைக்கிறேன், முடியுமா?'

மாயாவுக்குப் பயம் எழுந்தது.

எனக்கு என்ன தெரியும் என்று இங்கு தைரியமாய் வந்து உட்கார்ந்திருக்கிறேன்?

'உங்களுக்கு இந்தத் தொழில் புதிது. ஐ நோ இட், அதனால் சில விஷயங்களில் நான் உதவியாக இருப்பேன். உங்கள் ரசனை எப்படி என்று எனக்குத் தெரிந்தால் கூடப் போதுமானது. எனக்கு என்னமோ உங்களால் முடியும் என்றே தோன்றுகிறது...'

இவருக்கு என் மேல் இருக்கும் நம்பிக்கை எனக்கு இல்லையே!

மனசில் தோன்றிய சந்தேகங்களை ஒதுக்கிவிட்டு 'நீங்கள் இவ்வளவு சொல்லுவது எனக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது மிஸ்டர் ராம்நாத்! ஐ வில் டு மை பெஸ்ட்' என்றாள்.

'முதலில் இந்த 'மிஸ்டர் ராம்நாத்' எல்லாம் வேண்டாம் ஐ' ராம்.'

'தென் 'ஐ'ம், மாயா.'

ராமிடம் அந்த இரண்டு அறைகளின் அகல நீளங்களைக் கேட்டாள். என்ன மாதிரி வாடிக்கைக்காரர்கள் வருகிறார்கள் என்று கேட்டாள். எத்தனை ரூபாய்க்குள் செலவு இருக்க வேண்டும் என்று கேட்டாள்.

ராம் சொன்னான். இன்னும் ஒரு அலுவலகத்திற்குச் சாதாரணமாய் எந்தெந்த நிறங்களில் அறைகள் அமைய வேண்டும், என்னென்ன சௌகரியங்கள் இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னான்.

'இரண்டு நாளில் என் ஐடியாக்களைச் சொல்கிறேன் ராம். எப்படி இருக்கிறது என்று நீங்கள் சொன்ன பிறகு வேலையைத் தொடங்கலாம்.'

மாயாவுக்கு அலுவலகத்தைச் சுற்றிக் காண்பித்தான் ராம்நாத்.

வரவேற்பு அறையில் ரிஸப்ஷனிஸ்ட் இருந்தாள். உள் கூடத்தில் இரண்டு க்ளார்க்குகள், ஒரு அக்கவுண்டன்ட், ஒரு ப்யூன்.

வலது பக்கம் வரிசையாய் மூன்று அறைகள், ராம்நாத் அஸோஸியேட்ஸின் மூன்று டைரக்டர்களின் அறைகள்.

தாமஸ் ஊரில் இல்லை.

பாஸ்கர் வெளியில் போயிருக்கிறான், வந்து விடுவான் என்றான் ராம்நாத்.

அரை மணியில் மாயா புறப்படுவதற்குள் பாஸ்கர் வந்து சேர்ந்தான்.

அறிமுகம் நடந்தது.

எடுத்த எடுப்பிலேயே உரிமையுடன் பேசத் தொடங்கினான் பாஸ்கர், 'மிஸஸ் சத்யகுமார். உங்களைப் பற்றி

ராம் நிறையப் பேசுகிறான். உங்களிடமிருந்து நான் நிறைய எதிர்பார்க்கிறேன்.'

செயற்கையான கட்டுப்பாடு இல்லாமல் அங்குள்ள அனைவரும் பேசிப் பழகினதால் வீடு திரும்பிய மாயாவுக்கு அவர்கள் எதிர்பார்ப்புக்கு மேலேயே நாம் பெயர் எடுக்க வேண்டும் என்று தோன்றியது.

சத்யாவிடம் எல்லாவற்றையும் சொன்னாள்.

'புது இடத்தில் வேலைக்குப் போகிற மாதிரியே இல்லை சத்யா. எல்லோரும் அவ்வளவு சகஜமாக இருந்தார்கள் யங் சாப்ஸ். துருதுரு வென்று வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து சிரத்தையுடன் வேலை பார்க்கிறார்கள். ராம்நாத் அண்ட் அஸோஸியேட்ஸ் ஆரம்பித்துப் பன்னிரெண்டு வருஷங்கள் ஆகிறதாம். அதற்குள் ரொம்ப நல்ல பெயர். அவர்களுக்குச் சரியாக என்னால் இருக்க முடியுமா, சத்யா?"

தானே கேள்வி கேட்டுத் தானே பதிலும் சொல்லிக் கொண்ட மாயா, அடுத்த இரண்டு நாட்களும் ஓயாமல் சிந்தித்தாள், பல புத்தகங்களைப் பார்த்தாள்.

கடைசியில் சில தீர்மானங்கள் செய்தவளாய் ராம்நாத்தைச் சந்தித்தாள்.

அவள் அறைகளின் அலங்காரங்களைக் குதூகலத்துடன், தன் சொந்த அறையை அழகு படுத்துவது போன்ற ஆர்வத்துடன் விவரிப்பதை ராம்நாத் உன்னிப்பாகக் கேட்டான்.

மாயாவின் திட்டங்கள் ராம்நாத்திற்குப் பிடித்துப் போயின.

பாஸ்கருக்கும், ஊரில் இருந்து வந்துவிட்ட தாஸுக்கும் கூடத் திருப்தியே. அன்றே தேவையான பர்னிச்சர் கிட்டங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்ட சுவரில்

இணைக்கப்படுவதற்கான மரங்களைப் போய்த் தேர்ந்தெடுத்தனர். ஆட்கள் வந்தனர். சரியாக மூன்றாவது வார முடிவில் அறைகள் தயார்.

திட்டங்கள் மட்டுமே திட்டத் தெரிந்த மாயா இந்தச் சொற்ப நாட்களில் அவைகளைச் செயலாக்கும் விதங்களையும் கூடவே இருந்து கற்றுக் கொண்டாள்.

முதல் நாள் மாயாவைப் பார்த்து விட்டு, 'பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறாள்; புத்திசாலியாய்ப் பேசுகிறாள். ஆனால் இவைகள் மட்டும் போதுமா? அனுபவம் வேண்டாமா? என்று ராமனிடம் முணுமுணுத்த பாஸ்கர், மாயாவின் கற்பனை நிஜமான பிறகு, தான் அவசரப் புத்திக்காரனாக இருந்ததற்கு வருந்தினான்.

'பெரிய டெக்ரேட்டருக்கு நிறையப் பணம் கொடுக்க வேண்டி வரும்; அதனால்கத்துக்குட்டி ஒன்றைப் பிடித்துத் தன் சொந்த யோசனைகளுடன் அவளுடைய கற்பனையையும் சேர்த்து ராம் ஆபீஸைத் தயார் பண்ணப்போகிறான். பணம் மிச்சமாகலாம். ஆனாலும் நம் ஆபீஸிற்கு வருபவர்களின் மதிப்பைப் பெறத் தவறிவிடுவோமோ!' என்று தனக்குள்ளேயே சந்தேகம் கொண்டிருந்த தாமஸ் மனதை மாற்றிக்கொண்டான்.

கொடுத்த வேலைகளை மாயா முடித்ததும், மற்றவர்களின் அறைகளைச் சிங்காரிக்கும் பொறுப்பும் அவளுக்கே அளிக்கப்பட்டது.

மூன்றாம் மாசம் ஆயிரம் ரூபாய்க்கு மாயாவுக்கு ராமநாத் 'செக்' எழுதித் தந்தான்.

'நோ நோ' நான் வாங்க மாட்டேன் என்னை நம்பி இந்த மாதிரி வாய்ப்பைக் கொடுத்ததே பெரிய சமாச்சாரம். இதற்குக் கூலி கண்டிப்பாக வாங்க மாட்டேன் ராம். ப்ளீஸ் டோண்ட் சீப்பன் மீ.'

மாயா மறுத்துவிட்டாள்.

'வேறு டெகரேட்டரை வைத்துச் செய்திருந்தால் ஐயாயிரமாவது அவுட்டாயிருக்கும். இது எங்களுக்கு சேமிப்புத்தானே?' எத்தனையோ விவாதித்தும் மாயா பிடிவாதமாய் இருந்துவிட்டாள்.

அன்று இரவு சத்யாவும் மாயாவும் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது வாசலில் மணி பாடியது.

பார்த்தால், ராம்—பாஸ்கர்—தாமஸ். கையில் ஒரு பெரிய பெட்டி.

'எங்கள் புது இன்டீரியர் டெகரேட்டர் மாயாவுக்கு' என்று அட்டையில் எழுதி இருந்தது.

'என்ன ராம்?'

'பாருங்களேன்.'

பிரித்துப் பார்த்தால், வெள்ளியில் அழகான டீ செட்.

'எதற்கு ராம்? பாருங்கள் சத்யா—' கணவனைத் தன் பக்கத்துக்கு இழுத்தாள் மாயா.

'எதற்கு ராம்?' என்றான் சத்யாவும்.

'எங்கள் திருப்திக்கு. பெரிய பெரிய டெகரேட்டர்களை விட அழகாய்க் கற்பனை பண்ணுகிறார் மாயா; இது நிஜம். இனி தொடர்ந்து எங்கள் கம்பெனியின் மூலம் செய்ய வேண்டிய வேலைகளை அவர் செய்ய வேண்டும் டாக்டர்' என்றான் ராம்.

வெளியில் விசாரித்திருந்ததில் இன்டீரியர் டெகரேட்டர்கள் இருபத்தைந்து பெர்சென்ட்டிலிருந்து மேல் நோக்கிக் கமிஷன் வாங்குவதாய் மாயா அறிந்திருந்தாள். அவளை அமர்த்திக் கொள்வதன் மூலம் ராம்நாத் கம்பெனிக்கு லாபம்தான் என்றாலும் அவர்களுடைய தொடர்பினால் உலக அனுபவமே இல்லாத அவளுக்கு இன்றைய நாகரிக உலகுடன்நேர் சம்பந்தம் கிடைக்குமே?

வேலையில் தீவிரமாகப் புகுந்த கொஞ்ச நாட்களிலேயே எந்த ஆண் மகனுக்கும் சரியாக, புத்திசாலித்தனத்துடன் தன்னால் பேசவும், எத்தனை மனிதர்கள் கூடி இருக்கும் கூட்டத்திலும் ராணி போலத் தன்னால் தனித்திருக்கவும் முடியும் என்றும், பிறப்பிலேயே தனக்கு அப்படி ஒரு கவர்ச்சியான குணம், அழகு, பழகும் தன்மை இருக்கிறது என்றும் மாயா உணர்ந்துகொண்டு விட்டதால், வெற்றிகளும் புகழாரங்களும் நிறைந்துபோன உலகில் அவள் வேகமாய்ச் சஞ்சரிக்கத் தொடங்கினாள்.

8

சத்யா எதிர்பார்த்த வேகத்தில் அவனது திட்டங்கள் நிறைவேறவில்லை.

ஆன்ட்டி ரேபிஸ்—நாய்க்கடி மருந்தை தன் அமெரிக்க ஆராய்ச்சிகளின் உதவியோடு இன்னும் சக்தி வாய்ந்ததாகத் தயாரித்துக் குறைந்த காலத்திற்குள் மார்க்கெட்டில் நடமாட விடவேண்டும் என்று தீர்மானித்திருந்தது நடக்கவில்லை.

ஒன்று மாற்றி ஒன்றாகத் தடங்கல்கள்.

முதலில் சோதனைச் சாலைகளின் அமைப்பு இவனுக்குத் திருப்தியைத் தரவில்லை. அதை மாற்றி அமைத்தான்.

அமெரிக்காவில் செய்து பார்த்திருந்த ஒரு பரிசோதனையை இங்கு மீண்டும் முயற்சித்துவிட்டு, பிறகு அதில் ஆழமாக இறங்கலாம் என்று மனசில நினைத்துச் செயல்பட்டான்.

பரிசோதனை அமெரிக்காவில் தந்த வெற்றியைத் தரவில்லை. மீண்டும் செய்து பார்க்கலாம் என்று எண்ணி இருந்தபோது, நாடு கண்டறியாத மின்சாரப் பற்றாக்குறை பிசாசு போலப் புறப்பட்டு, அவன் கைகளைக் கட்டிப்போட்டுவிட்டது.

ஏற்கனவே நாட்டின் அத்தியாவசிய உபயோகத்துக்கென உற்பத்தி செய்து கொண்டிருந்த ஸ்ட்ரெப்டோமைஸின், பெனிஸிலின் போன்ற ஆன்ட்டிபயாடிக் மருந்துகளைக் குறைக்க முடியாததால், மின்சாரப் பற்றாக் குறையின் காரணமாக ஆராய்ச்சியும் புதுத் தொழிற்சாலை இயங்குவதும் ஒத்திப்போடப்பட்டன.

இப்போதைக்கு ஆன்ட்டிரேபிஸ் மருந்தில் தீவிரக் கவனம் செலுத்த முடியாது என்று புரிந்து போனதும், ஆன்ட்டிபயாடிக் உற்பத்தியை இன்னும் சிறப்பாக எப்படியெல்லாம் செய்யலாம் என்று ஆராயத் தொடங்கினான் சத்யா.

இதன் காரணமாக நினைத்தபோது கிளம்பி, பூனா ரிஷிகேஷ் முதலிய இடங்களில் இருந்த அரசாங்க ஆன்ட்டிபயாடிக் தொழிற்சாலைகளுக்குப் போய் அதன் சம்பந்தப்பட்ட விவாதங்களில் கலந்துகொண்டான். ஸி. எஸ். ஐ. ஆர். விஞ்ஞானிகள் கூட்டங்களிலும் அடிக்கடி பங்கு கொண்டு, நாட்டின் மருந்து தயாரிக்கும் நிலையை எப்படியெல்லாம் உயர்த்தலாம் என உழைக்கலானான்.

வேலைக்குச் சேர்ந்த புதிதில் மாயாவோடு அதிக நேரம் இருக்க முடியாதது குறித்து அவன் எவ்வளவோ முறைகள் வருந்தி இருக்கிறான்.

ஆனால், மாயா தனக்கென ஒரு வேலையைத் தேடிக் கொண்டதும் அல்லாமல், விஷயம் தெரிந்தவர் மத்தியில் கெட்டிக்காரி என்று பெயர் வாங்கினபோதும் அவனுக்குத் தன் வேலை பிடித்துப்போய் அதிலேயே அதிக ஆர்வத்து

டன் மேன் மேலும் ஈடுபட்டபோதும் சத்யா உண்மையிலேயே சந்தோஷப்பட்டான்.

சமையற்கட்டே பெண்களின் உலகம் என்ற பழைய காலம் மாறிவிட்டது. ஆண்களுக்குச் சமமாய் வாழ்க்கையில் பங்கு கொள்ளப் பெண்களுக்கும் சந்தர்ப்பங்கள் தர வேண்டும் என்று நம்புபவன் சத்யா.

வேலைக்குப் போகாமல் குடும்பமே உலகமாய் ஒரு பெண் வாழத் தயாராக இருந்தால் அது அவள் இஷ்டம்.

ஆனால் மாயாவைப் போன்ற திறமையுள்ள பெண் புத்திசாலி, 'குழந்தை இன்னும் இரண்டு வருஷங்களுக்கு வேண்டாம் என்று எண்ணுபவள், தன் திறமை வெளியில் பரவும்போது அதனால் பூரிப்பவள். சிறு வயசு முதல் கொண்டு வெளி உலகத்தாரோடு கலந்து பழகாமல் இருந்துவிட்ட ஒரே காரணத்திற்காக வீட்டில் உட்கார்ந்திருப்பது சத்யாவுக்கு விருப்பம் இல்லை.

நான் டாக்டருக்குப் படித்து, விஞ்ஞானி ஆகி, என் இஷ்டப்பட்ட வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லையா? இந்த உரிமை என் மனைவியான மாலாவுக்கு நான் இல்லை என்று சொன்னால் எப்படி? என்று நினைப்பவன் சத்யா.

மாயா சாதாரணப் பெண்களைப் போன்றவள் இல்லை என்பது அவனுக்குச் சின்ன வயசிலே தெரியும்.

பத்துக் குழந்தைகள் கூடி விளையாடும் நேரத்தில் மாயாவின் புத்திசாலித்தனம், சூட்டிகை விஷயங்களை பிளாட்டிங் பேப்பர் போல கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் எல்லாம் அவன் கவனித்ததுண்டு.

மாயாவின் திறமைகள் குடத்திலிட்ட விளக்காக இருக்கிறதே என்று அவன் நினைத்திருந்த சமயத்தில்தான் ராம்நாத்தின் வேலை அழைப்பு வந்தது.

முதல் சில மாதங்கள் தான் செய்யப்போகும் வேலையை சத்யாவிடம் சுவாரசியமாக எடுத்துச்சொல்லுவாள். மாயா உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டே இருக்கையில் என்ன முயன்றாலும் தடுக்க முடியாமல் அவன் கவனம் வேறு எங்காவது, முக்கியமாக அவனுடைய ஆராய்ச்சிக்குத் தாவிவிடும்.

சத்யா கலையுணர்வு கொண்டவனில்லை.

மாயா கலையே நெஞ்சாகக் கொண்டவள். மென்மையான உணர்வுகள் அவளிடம் நிறைய உண்டு; பேச்சிலும் கற்பனையிலும் சிறந்து விளங்கினாள். அவள் யதார்த்தவாதி இல்லை.

'அந்த பால்கனியில் ஒரு ஆடும் ஊஞ்சல்... பெரிய பெரிய தொட்டிகளில் பச்சைநிறக் குஷனையான குரோட்டன்ஸ், வட்ட வடிவில் பல நிறங்கள் கொண்ட கார்ப்பெட். ஒரு பக்கமாய் அழகான ஸ்டாண்டிங் லைட், மடங்கும் அலுமினிய ஈஸிச்சேர்கள், கொளுத்தும் சம்மரில்கூட வெயில்தெரியாதபடி இதமாய்இருக்கும்படியான அமைப்பு இருக்கவேண்டும். எப்படி சத்யா? நன்றாக இருக்காது?'

மெட்ராஸ் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் வீட்டை அலங்கரிக்கும் பொறுப்பை மாயாவுக்கு தந்திருந்தான் ராம்நாத். வீடு கட்ட ஆகும் செலவு இரண்டரை லட்சம் அலங்காரத்துக்கு மட்டும் ஒரு லட்சம். மாயாவுக்கு பரம சந்தோஷம்.

இரவு இல்லை பகல் இல்லை என்று உட்கார்ந்துவரை படம் வரைந்தாள். தன் கற்பனை தனக்கேசந்தோஷத்தை அளித்ததாய் அதைச் சத்யாவிடம் விவரித்தாள்.

படுக்கை அறையை விவரித்துவிட்டு அதை ஒட்டி இருந்த பால்கனியின் ஜோடனையை மாயா சொன்ன போது யதார்த்தவாதியான சத்யாவுக்கு மாயா மாதிரி

கற்பனையில் அந்த அறையின் அலங்காரங்களைப் பார்க்கத் தெரியவில்லை.

பெட் ரூம் என்ற அறையையும், மொட்டையாய் ஒரு பால்கனியையும் அவனுக்குக் கற்பனை செய்ய முடிந்ததே தவிர அதில் ஆடும் ஊஞ்சலையும் பச்சைக் கொடிகளையும், குஷனையான நாற்காலிகளையும், ஈஸிச்சேரையும் பார்க்கத் தெரியவில்லை.

'பால்கனிக்கு எதற்கு அத்தனை அலங்காரம் மாயா?'

கண்களில் இருந்த பளபளப்பு மாயாவுக்கு அணைந்து போனது.

'ஏனா! ஒரு பெரிய கம்பெனியின் சேர்மன் ரிலாக்ஸ் பண்ணுவதற்கு இடம் வேண்டாமா சத்யா?'

'ஏன் பெட்ரூமில் ரிலாக்ஸ் பண்ண முடியாதா?'

கணவன் தன்னிடம் ஆர்வமாகக் கேட்கவில்லை என்பது மாயாவுக்குப் புரிந்தது. சத்யாவுக்கு அவ்வளவு தான் கற்பனை பண்ண முடியும்! சத்யா இன்ன சிம்பிள் மேன். எல்லோரும் அவர் மாதிரி இருப்பார்களா?

சத்யா மேலே பேசினான். 'சரி—சரி அவருக்குப் பணம் நிறைய இருக்கிறது. வராண்டா என்ன பாத்ரூமைக்கூட லட்சக் கணக்கில் செலவழித்து அலங்கரிக்கட்டும், நமக்கென்ன? ஆக உனக்கு வேலை கிடைத்திருக்கிறது-ஜமாய்.'

அதோடு அன்று பேச்சு முடிந்துவிட்டது.

ஊரிலிருந்து அவர்களுடன் நான்கு நாட்கள் தங்கிப் போக வந்திருந்த துரைசாமி—சத்யாவின் தந்தை—இந்த சம்பாஷணையைக் கேட்டார்.

உற்சாகமாய்ப் பேசும் பெண்ணிடம், புரிகிறதோ, இல்லையோ இரண்டு வார்த்தைகள் தட்டிக் கொடுக்கிற மாதிரி பேசினால் என்ன?' என்றே அவருக்குத் தோன்றியது.

மறுநாள் சத்யா தொழிற்சாலைக்குப் போன பிறகு மாயாவிடம் வந்தார்.

'என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்?' என்றார்.

மாயா மெட்ராஸ் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மனின் வீட்டுக்கு வரவேற்பறை தயார் செய்து கொண்டிருந்தாள்.

சொன்னாள்.

'அடடே! எங்கே எனக்குக் கொஞ்சம் எக்ஸ்ப்ளெயின் பண்ணேன்?'

திருச்சியில் பிராகதாராக இருக்கும் மாமனாருக்கு இதில் எல்லாம் ஈடுபாடு இருக்கும் என்று மாயா நினைக்கவில்லை என்றாலும் விளக்கினாள்.

'வீட்டினுள் போக வராந்தாவில நுழைந்ததும் இடது பக்கம் இந்த அறை வரும். பூமியில் இருந்து நான்கு அடிகள் கீழே இதை அமைக்கத் திட்டம். நான்கு பக்கமும் செங்கல் சுவர்கள் இல்லை. மூன்று பக்கம் கண்ணாடிச் சுவர்கள், ஒரு பக்கம் மட்டும்தான் செங்கல் சுவர். அறையைச் சுற்றி வெளியே செடிகள் வைத்து, அழகாய்த் தோட்டம் போட வேண்டும். அறைக்குள் திட்டமாய் அலங்காரம் பண்ணி ஏ.ஸி. போட்டு விட்டால் ஜிலுஜிலுவென்று, பச்சைத் தோட்டத்துக்குள் உட்கார்ந்திருக்கும் ஒரு ஜோரான அனுபவம் இருக்கும்ப்பா...''

பூமியின் கீழ் நாலு அடியில் அறையா? அண்டர் கிரவுண்ட் மாதிரியா? அது எப்படி இருக்கும்? சுற்றிலும் கண்ணாடிச் சுவர்களா? தோட்டத்தில் உட்கார்ந்திருப்பது போல ஜிலுஜிலு என்று இருக்குமா? எப்படி? துரைசாமியால் கற்பனையில் இத்தனை அழகான அறையைச் சிருஷ்டிக்க இயலவில்லை. சத்யா என் பிள்ளைதானே; எனக்கு இருக்கும் கற்பனா சக்திதானே

அவனுக்கும் இருக்கும்? என மனசுக்குள் ஜொலித்தவர், மருமகள் மனசு நோகக் கூடாது என்பதால் 'அடேயப்பா! என்னமோ ஆலிஸ் இன் வொண்டர்லாண்ட் கதையில் வரும் வீடு மாதிரி இருக்கிறதே!' என்று வர்ணித்தார்.

மாயா மலர்ந்து போனாள்.

'ரொம்ப கரெக்டாகச் சொல்லி விட்டீர்கள் அப்பா. உண்மையில் இது பூராவும் என் ஐடியா இல்லை. ஒரு அமெரிக்கப் புத்தகத்தில் இருந்ததுடன் என் கற்பனையைக் கலந்திருக்கிறேன். புது திணுசில் வீடு அமைய வேண்டும் என்று சேர்மன் நினைக்கிறார். இந்த ஐடியாவைச் சொன்னேன். ராமுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. சேர்மன் பிரமாதம் என்றார். இதற்காக ஏற்கனவே கட்டி முடியப் போகும் வீட்டில் புதிதாக இடது பக்கத் தோட்டத்தில் இந்த அறையைக் கட்டியிருக்கிறார். இன்னும் சில மாதங்களில் வீடு தயாராகி விடும். அப்புறம் ராம்நாத் அஸோஸியேட்ஸுக்கு நிறைய புது வேலைகள் வரலாம்.'

27856
4346337

9

லலிதா வரதனுக்கு வாரத்தில் மூன்று தடவையாவது ஜிம்கானா கிளப்புக்கு வந்து சீட்டு விளையாடா விட்டால் தலை வெடித்து விடும். 'வரதன் குரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீ'ஸின் சொந்தக்காரர் வரதன். அப்பா ஆரம்பித்து ஓஹோ என்று நடந்ததை, அப்படியே வியாபாரம் மங்காமல் நடத்தி வருகிறார். அதற்கும் ஒரு திறமை வேண்டுமே!

காலையிலிருந்து பகல் ஒன்றுவரை தொழிற்சாலைகளில் இருக்கும் வரதன், சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவார். பிற்பகல் மூன்று மணி அளவில் லலிதா கிளப்புக்குப் போவாள். ஆறு மணிக்கு கிளம்பி டென்னிஸ் ஒரு செட் ஆடிவிட்டு வரதனும் கிளப்புக்கு வருவார்.

மாடியில் சீட்டு அறையில் மனைவி.

கீழே பாரில் கணவன்.

இரண்டு பேரும் வம்பு பேசுவதில் ஒருவருக்கொருவர் சளைத்தவரில்லை. ஊரில் இருக்கிற அத்தனை பேர்களின் தலைகளையும் உருட்டிவிட்டு, திருப்தியாய் இரவு பத்து மணி அளவில் வீட்டுக்குத் திரும்புவார்கள். இருவருக்கும் தனித் தனி படுக்கை அறை. தினமும் வெளியே சுற்றிவிட்டு வரதன் பொழுது விடியும்போது வருவார். அவனைப் பற்றியும் பல கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. நமக்கெதற்கு அதெல்லாம்? விடுங்கள்.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள், தப்பாமல் பெற்றோரைக் கொண்டு பிறந்திருந்தனர். மூத்தவன் ராஜேஷ். பி.யூ.ஸி. தாண்டவில்லை. அவ்வளவுதான். இப்போது அப்பாவின் கம்பெனியில் டைரக்டர். சின்னவன் காமேஷ். கொஞ்சம் தேவலை. பி.ஏ. யை முற்றுகை இட்டுக் கொண்டிருக்கிறான். இரண்டுக்கும் அத்தனை பழக்கங்களும் அத்துபடி.

லலிதாவும் வரதனும் ஊரைப்பற்றி வாய்கிழித்தாலும், முகத்துக்கெதிரில ஒருவர் நாக்கு பல்லில் படத் தங்கள் குடும்பத்தாரைப் பற்றிப் பேச அனுமதிக்க மாட்டார்கள். தப்பித் தவறிப் பேசினால் அந்த ஆள் மூஞ்சி மூகரை இருக்காது.

வழக்கம் போல் அன்றும் சீட்டுக் கச்சேரி களைகட்டி விட்டது. லலிதாவுக்கு இதற்குள் எண்ணூறு ரூபாய் அவுட்.

அவளோடு இருந்த மற்ற மூவர்-மிஸஸ் மூல்சாந்தினி, மிஸ்டர் கோபால், மிஸஸ் வசுமதி ராஜு.

04425550

'நேற்று சுதர்சன் வீட்டில் எங்களுக்கு டின்னர் கம் வார்மிங் பார்ட்டி. உங்களுக்கு அவரைத் தெரியா...' லலிதா பேச்சைத் தொடங்கினாள்.

'எந்த சுதர்சன்?'

'வாட்? எந்த சுதர்ஸனா? எத்தனை லட்சாதிபதி சுதர்ஸன்களைச் சென்னையில் உனக்குத் தெரியும்? தி ஒன் அண்ட் ஒன்லி மெட்ராஸ் ஷிப்பிங் சேர்மன்?'

'ஓ! அவர்கள் வீட்டு பார்ட்டியா? வீடு ரொம்ப அழகாக இருக்கிறதாமே! நிஜமாவா லலிதா?'

லலிதா பதில் சொல்வதற்குள் கோபால் முந்திக் கொண்டார்.

'அழகாகவா? ப்ஷ்? ப்யூடிஃபுல் அந்த மாதிரி வீட்டை நான் பார்த்ததில்லை. நான் போன வாரமே வீட்டைப் போய் பார்த்தேன். சுதர்ஸன் விட்டால்தானே? அவருக்கு ஏகப்பட்ட பிரண்ட்ஸ். அதனால் பாட்ச் பாட்சாகக் கூப்பிடப்போவதாக என்னிடம் சொன்னார். தான்முதல்நாள விருந்துக்கு வராததற்குக் காரணம்சொன்னார் கோபால்.

'அந்த வீட்டு ட்ராயிங் ஹால் மாதிரி நான் பார்த்ததில்லை வசு...கிரவுண்ட் லெவலிலிருந்து, நான்கு படிகள் கீழே அறையைக் கண்ணாடிகளைக் கொண்டே அமைத்திருக்கிறார்கள், அறை அலங்காரம் ஏன்—அந்த வீட்டின் இன்ட்டீரியர் டெகரேடர் யார் தெரியுமா? மிஸஸ் மாயா சத்யகுமார். நேற்று வந்திருப்பாளே.. நீங்கள் பார்க்கவில்லையா லலிதா?' கோபால் தொடர்ந்து உற்சாகத்துடன் பேசினான்.

'ஓ மிஸஸ் சத்யகுமாரா? நான்கூட அவளைப் பற்றிக் கேள்விப்பட்டேன்!' இது மிஸஸ் மூல் சந்தானி.

'போன மாதம் அவளைச் சந்தித்தவன். ப்ரில்லியன்ட் கேர்ல்!' பாராட்டினார் கோபால்.

'கேர்ல் என்ன கேர்ல்? ஷி ஈஸ் எ வுமன்' கோபாவிடம் சண்டைக்கு வந்தாள் லலிதா.

'இத்தனை நாளாய்க் கேள்விப்படாமல் திடீரென்று எங்கே இருந்து குதித்தாள்?'

'ராம்நாத் அஸோஸியேட்ஸில் இரண்டு வருஷங்களுக்கும் மேலாய் இருக்கிறாளாம். அழகாய் இருக்கிறாள், சின்ன வயசுக்காரி. ராம்நாத் தூக்கி விடுகிறான்—'

'ரியலி?'

'பின்னே என்ன? நேற்று அவள் பெண்கள் பக்கமே போகவில்லை. ஃபெமினிஸ்ட் ஆக இருப்பாள் போல இருக்கிறது—'

'ரியலி?...வசுமதிக்கு வியக்கவே பொழுது சரியாக இருக்கிறது.

'ஹர் ஹஸ்பெண்ட் இஸ் ஸயன்டிஸ்ட்... ஆதித்யாவில் ரிசர்ச் டைரக்டர்—அவன் நேற்று வரவில்லை... கான்பரன்ஸுக்காக லக்னோ போயிருக்கிறானாம்...இவள் பாடு குஷிதான்.'

லலிதாவின் மூத்த மகன் ராஜேஷ் கார்ட்ஸ் ரூமிற்குள் வந்தான்.

'அம்மா அப்பா புறப்படலாமா என்று கேட்கிறார்.' ஆட்டம் பாதியில் இருப்பதைப் புரிந்து கொண்டு அருகிலேயே உட்கார்ந்தான்.

'அவளுக்கு என்ன வயசிருக்கும்?' மிஸஸ் மூல்சந்தானி கேட்டாள்.

'என்ன இருபத்தைந்து இருக்கலாம்.'

'ரியலி! இந்தச் சின்ன வயசுக்குள் இவ்வளவு திறமையா? தாட் பேட்?' வசுமதி மீண்டும் வியந்தாள்.

'என்ன பெ—ரி...ய திறமை! ராம்நாத் உதவி பண்ணியிருப்பான். இவள் பெயரைப் போட்டுக் கொண்டிருப்பான். எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது—'

'யாரைச் சொல்லுகிறாய் அம்மா?' ராஜேஷ் சம்பாஷணையில் புகுந்தான்.

'மாயா சத்யகுமார்.'

'ஜீஸஸ்! அவளுக்கா திறமை இல்லை என்கிறாய். ஐ ஆர் ராய்—நான் நேற்று அவளுடன் பேசினபோது புரிந்து கொண்டேனே. அவளுக்கு உடம்பு பூராவும் மூளை. அண்ட் ஷி இஸ் நாட் டிவெண்ட்டி ஃபைவ். இருபத்து மூன்று வயசுதானாம். சொன்னார்கள். உனக்கு அவளைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறதா?' முதல் நாள் பார்ட்டிக்கு ராஜேஷும் போயிருந்தான்.

'எனக்கு எதுக்குடா பொறாமை? ஒரு பெண் சிரிக்கச் சிரிக்கப் பேசினால் உங்களுக்கெல்லாம் 'ஐஸ்' வைத்த மாதிரி தானே ஆகும்?'

அப்பாவுக்குக் கூட அவள் வேலை ரொம்பப் பிடித்து விட்டதும்மா. ஆபீஸ் வேலை ஏதாவது கொடுத்தாலும் கொடுப்பார். என்னிடம் அவரே சொன்னார்.'

தான் இது நாழிகை வரை உருட்டின மாயாவின் புத்திக்கும் அழகுக்கும் தன் கணவனும் பிள்ளையுமே பலியாகி இருப்பதை உணர்ந்த லலிதாவுக்கு ஆத்திரம் வெட்டிக் கொண்டு எழுந்தது.

'ஐ ஸ்கூட்' என்று சீட்டுக்களைக் கீழே போட்டான். கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு, 'குட் நைட் ப்ரெண்ட்ஸ்' எனப் புறப்பட்டு விட்டான்.

'இவள் ரொம்ப யோக்கியம். இவள் புருஷனையும் பிள்ளையையும் சொல்லி ஊரே சிரிக்கிறது—புதிசாய் ஒரு பெண் பேர் வாங்கினால் வருகிற கோபத்தைப் பார்!'

அவள் தலை மறைந்ததும் வசு முணுமுணுத்தாள். தான் அந்தப் பக்கம் போனதும் பாக்கி இருவர் தன்னைப் பற்றிப் பேசுவார்கள் என்பது—வசு அறிந்ததுதான்.

தம்மைப்பற்றி ஒருவர் வம்பு பேசுகிறார்கள் என்பதற்காக நாம் மற்றவரைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியுமா?

'இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சமாசாரம் தெரியுமா?'

கோபால் கிசுகிசுக்கவும், மற்ற இருவரும் டேபிள் மேல் கவிந்து கிட்ட வந்தார்கள்.

'வரதனுக்குத்தான் எத்தனையோ இடத்தில் தொடர்பு உண்டே! முந்தா நாள் ஒருத்தியிடம், ஷி இஸ் எக்ஸ்ரா இன் ஃபிலிம்ஸ் போயிருக்கிறான். வாசலில் இவன் பையனின் கார் இருந்ததாம். எப்படி வேடிக்கை! மூஞ்சியை எங்கு கொண்டு வைத்துக்கொள்வது என்று தெரியாமல் மதன்லாலிடம் வந்து அழுததை மதன் என்னிடம் சொன்னான்.'

'ஆ' என்று பிளந்த வாயுடன் மற்ற இருவரும் அமர்ந்திருக்கையில் இன்னொரு குடும்பத்தின் அவலத்தை ஆரம்பித்தார் கோபால்.

10

போன் அழைத்தது—

'ஹலோ'

'மாயா?'

'எஸ்—ஸ்பீக்கிங்'

'நான் பாஸ்கர் மாயா—வேலையாயிருக்கிறாயா?'

அன்று மாயா எங்கும் வெளியில் போகவில்லை; உடம்புக்கு லேசாக முடியவில்லை.

'இல்லை பாஸு; என்ன விஷயம்!'

பாஸ்கரை அலுவலகத்திலும் தெரிந்தவர்களும் பாஸு என்றே கூப்பிடுவதால் வேலையில் சேர்ந்த சில நாட்களில் மாயாவும் அப்படியே கூப்பிடவும், அவர்கள் எல்லாம் ஒருவர்க்கொருவர் 'நீ' என்று உரிமையுடன் அழைத்துப் பழகவும் தொடங்கிவிட்டனர்.

ராம்நாத் அண்ட் அஸோஸியேட்ஸில் எல்லோரும் ஒரு குடும்பம் மாதிரி பழகுவார்கள்.

ராம்நாத்தான் பார்ட்னர்களில் பெரியவன். நாற்பத்தி நான்கு வயசு. மனைவி இரு பெண் குழந்தைகளுடன் நுங்கம்பாக்கத்தில் வசிக்கிறான். நல்லவன். இளம் கலைஞர்களையும் உழைப்பாளிகளையும் தூக்கிவிடும் சுபாவம். அவன் மனைவி ஜெயாவும் பழக இனிமையானவள். அவர்கள் வீட்டுக்கு மாயா பல முறைகள் போனதுண்டு.

பாஸ்கருக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். ஆஜானுபாகு. மூவரில் ரொம்ப கலகலப்பானவன். கல்யாணம் வேண்டாம் என்று வாழ்க்கையை ரசிக்கும் பிரும்மச்சாரி.

தாமஸ் சின்னவன். இருபத்தி ஒன்பதோ, இருபத்தி எட்டோ தானாம். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்; லண்டனில் ஆர்கிடெக்ட் பட்டம் வாங்கினவன். தெரிந்தோ தெரியாமலோ இந்தச் சின்ன வயசிலேயே குடிப் பழக்கத்துக்கு அடிமை ஆனவன் ஆனால் வெகுளி. கல்யாணமாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. காதலித்து மணம் செய்து கொண்ட இல்வாழ்க்கை அவ்வளவாகத் திருப்தி இல்லை என்றே மாயா நினைப்பாள்.

மாயா கமிஷன் அடிப்படையில் இவர்களோடு வேலை பார்த்ததால் தினம் மற்றவர் ஆபீஸ் வரும் கணக்கெல்லாம் இவளுக்குக் கிடையாது. கொடுத்த வேலையைக் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும்; அவ்வளவே!

ராம்நாத் அஸோஸியேட்ஸ் கம்பெனிக்கு, நிரந்தர ஸ்டாஃப் என்று அதிகம் பேர் கிடையாது. இருக்கும் வேலையைப் பொறுத்து காண்ட்ராக்டர்கள், கூலி ஆட்கள், தச்சர்கள், எலெக்ட்ரீஷியன், பெயிண்ட் அடிப்பவர்கள் என்று அவ்வப்போது மொத்தப் பணத்துக்கும் பேசி வேலைக்கு அமர்த்திக் கொள்வார்கள். இல்லையென்றால் இப்போது மாயாவை கமிஷன் அடிப்படையில் சேர்த்துக் கொள்வது போலத் தாங்கள் செய்யும் வேலையை ஸப்-காண்ட்ராக்ட் வேலைக்குத் தரம் அறிந்து விட்டுவிடுவார்கள்.

சுதர்சனின் வீட்டை மாயா அலங்கரித்த பிறகு ஊரின் பெரிய மனிதர்கள் வீடு இரண்டும், கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் வேலை ஒன்றும் வந்து அதில் மாயா கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள். மூன்றிலுமே வேலைகள் தொடங்கி முக்கால்வாசி ரெடி ஆகிவிட்டது.

'கொஞ்ச நேரத்திற்கு முன் சுதர்ஸன் போன் பண்ணி இருந்தார் மாயா'— பேச்சைத் தொடர்ந்தான் பாஸ்கர்.

'ரெவ்லான் கம்பெனி தெரியுமில்லையா?'

'யூ மீன் தி ரெவ்லான் கம்பெனி?'

'ம்...அவர்கள் சமீபத்தில் பம்பாயில் ஒரு ஆபீஸ் திறந்திருக்கிறார்களே, தெரியுமா?'

'தெரியாதே!'

'போன மாசம்தான் திறந்தார்கள். அவர்களின் ஜெனரல் மானேஜர் ஃபார் இண்டியா, நேற்று சென்னைக்கு வந்திருக்கிறாராம்...நாளைக்கு பரத்பூஷன் இல்லை டெக்ஸ்டைல் மாக்னெட்...அவர்தான்...அவர் வீட்டில், இரவு டின்னர்...எங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. நீயும் வருகிறாயா மாயா.

'நானா? அழைப்பு இல்லாமல் எப்படி பாஸ்?'

சோழியன் குடுமி சும்மா ஆடாது; ராம்நாத் அஸோஸியேட்ஸுக்கு ஆதாயம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏன் இந்த இன்ட்ரஸ்ட்?

சுதர்ஸன் போன் பண்ணினார் என்றேனே. நேற்று ரெவ்லான் ஜி. எம். சுதர்ஸன் வீட்டுக்கு வந்திருந்தாராம்—

'அதனாலே?'

ரெவ்லான் கம்பெனி மெட்ராஸில் ஆபீஸ் ஆரம்பிக்கலாம் என்று ரூமர் இருக்கிறது மாயா. முதலில் ஸ்பென்ஸர் பில்டிங்கில் ஒரு ஷோ ரூம் அமைக்கப் போகிறார்களாம்... ஆப்டர் ஸம் டைம் ஆபீஸ் கட்டத் தொடங்கலாமாம். புரிகிறதோ?'

மாயாவுக்குப் புரிந்தது.

ஷோ ரூம் அமைக்கும் பணியைத் தனக்கு வாங்கிக் கொடுத்து, நல்ல பேர் சம்பாதித்துவிட்டால் ஆபீஸ் கட்டிடம் கட்டுவது ராம்நாத் அஸோஸியேட்ஸுக்கு சுலபமாய்க் கிடைக்கலாம்.

'ரெவ்லான் கம்பெனி என்றால் எத்தனை போட்டா போட்டி இருக்கும் பாஸ்? மலை விழுங்கி மஹாதேவன்கள் மாதிரி எத்தனையோ அனுபவப்பட்ட, பேர் எடுத்த டெகரேட்டர்கள் இருக்கும்போது... என்னால் முடியுமா பாஸ்?'

முயற்சி பண்ணுவதில் என்ன தப்பு மாயா—'

அதுவும் சரிதான்.

'நாளைக்கு ராம் ஊரில் இருக்க மாட்டான்; நான் தான் பார்ட்டிக்குப் போகிறேன்... என்ன நீ வருவது நிச்சயம் தானே?'

'நாளைக்கா?'

சத்யா ஊரில் இல்லை. கான்பரன்ஸ் ஒன்றுக்காக டெல்லி போயிருக்கிறார். நாளை இரவு வருகிறார். தனியாகப் பார்ட்டிக்குப் போனால் சத்யா ஒன்றும் சொன்னதில்லை. அவசியம் போக நேர்ந்தபோது நான் இல்லாவிட்டால் என்ன மாயா? உன் வேலை சம்பந்தமாக நீ தானே போக வேண்டும்? நான் எதற்கு?' என்று சொல்லி இருக்கிறார்...நாளை போனால் ஒன்றும் சொல்ல மாட்டார். ஆனால் அவர் வரும் நேரத்தில் தான் வீட்டில் இல்லாவிட்டால் எப்படி?

இதையே பாஸ்கரிடம் சொன்னாள்.

'ரொம்ப நாழிகை நீ இருக்க வேண்டாம் மாயா! அறிமுகம் ஆன பிறகு கொஞ்சம் இருந்துவிட்டுத் திரும்பி விடலாம்.

மாயா ஒப்புக் கொண்டாள்.

மறுநாள் மாலை ஏழு மணிக்கு வருவதாகச் சொல்லி விட்டுப் பாஸ்கர் போனை வைத்தான்.

11

மாயா கவனமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

வயலெட் நிற ஷிபான் புடவை. அதில் சின்னச் சின்ன வெள்ளி நட்சத்திரங்கள். அதே கலர் ரவிக்கை. தத்தை மூக்குத் தோடுகள். முத்து வளை, கழுத்தில் மூன்று சரம் முத்துக்கள். வெள்ளைக் கைப் பை, வெள்ளைக் குதி கால் உயர்ந்த ஷு.

'மாஃபெட்' எனப்படும் நவீனக் கொண்டை.

யில்லாக இருந்த மெல்லிய புருவங்களின் மேழ வயலெட் ஐ ஷேடோவை மெல்லத் தீட்டினாள். இதழ்கள் ஆழ்ந்த நிற லிப்ஸ்டிக். அதே நிறப் பொட்டு.

புருவத்தைப் பியூட்டி பார்லருக்குப் போய் சீர்படுத்தி வந்த முதல் நாள் மாயாவுக்கு ஞாபகம். அடர்த்தியான புருவத்தை மெல்லியதாக குறைத்திருந்தது, அவள் முகத்தில் நல்ல மாற்றத்தை உண்டாக்கி இருந்தது.

ஆபீசில் வெளியே வேலை நிமித்தமாகப் போன இடங்களில் ஒருவர் விடாமல் கவனித்தார்கள்.

'யூ லுக் ஸ்மார்ட்' என்றான் ராம்.

''ப்ரிட்டி' என்றான் தாமஸ்.

மெலியதாய் விசில் அடித்து 'ஜீஸஸ்' என்றான் பால்.

இந்த மாதிரியான ரசிப்புகளை எல்லாம் ரசிக்கக் கற்றுக் கொண்டு விட்டதால், மாயாவுக்கு அன்று சந்தோஷமாக இருந்தது.

வீட்டுக்கு வந்தாள்—

சத்யா ஏதாவது சொல்லுவார் என்று எதிர் பார்த்தாள்.

தூங்க எத்தனிக்கும் சமயத்தில் மாயா பொறுக்காமல் கேட்டாள்.

'என் முகத்தில் மாறுதல் இருக்கிறதா?'

சத்யா பார்த்தானே.

'எப்போதும் போல அழகாய்த்தானே இருக்கிறாய்?' என்றார்.

'சரியாய்ப் பாருங்கள்.'

ம்ஹூம்...ஒன்றும் இல்லையே!

மாயா சொன்னாள்.

'நீயுமா? அப்படி ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை மாயா.'

கணவனுடன் வாழ்ந்த இந்த ஆண்டுகளில் அவனுடைய குணம் மாயாவுக்குப் புரியாத புதிர்.

இரண்டு நாட்களுக்கு முன் அவனைக் கடைக்கு இழுத்துக் கொண்டு போய் புடவை வாங்கினதைக் கட்டிக் கொண்டு வந்தால் 'புதுசா? இதுவா?' என்பான்.

அரை பழசை உடுத்தின அன்று, 'இது புதுசா மாயா? நன்றாய் இருக்கிறதே!' என்பான்.

சத்யாவுக்கு இதிலெல்லாம் ஈடுபாடு கிடையாது. அவனுக்கு மருந்து, தொழிற்சாலை, ஆராய்ச்சி இதில் தான் ஆர்வம், கவனம் எல்லாம்.

மாயா தயாராகி விட்டாள். ரெல்லான் ஜி.எம். மைச் சந்திக்கப் போவதால் ரெல்லான் இன்டிமேட்டைத் தாராளமாய்த் தெளித்துக் கொண்டாள்.

பாஸ்கர் வந்து விட்டான்.

கதவை இவள் திறந்ததுமே மூச்சு நின்று விடுவது போல நடித்து, மார்பில் கையை வைத்தவன், 'நாளைக்கே ஷோ ரூம் வேலைகளைத் தொடங்க ஆர்டர் வருவது நிச்சயம்' என்றான்.

'தாங்க்யூ'—மாயாவுக்குத் திருப்தி.

'மணி' என்று கூப்பிட்டாள்.

மாயாவுக்கு வேலைகள் அதிகரித்த பிறகு சமையலுக்கு மணியை அமர்த்தியிருந்தாள்.

'நான் வெளியில் போகிறேன். ஒன்பது மணிக்கு வந்து விடுவேன்; அதற்குள் ஐயா வந்து விட்டால் சாப்பாடு போடு; என்ன?'

அவர்கள் புறப்பட்டார்கள்.

இருபதுக்கும் மேற்பட்டவர்கள் அன்றைய பார்ட்டியில் இருந்தார்கள். ரொம்ப ரொம்ப பெரிய புள்ளிகள்—சுதர்ஸன் கூட இருந்தார்.

பரத் பூஷணுக்கும், ரெல்லான் ஜி.எம். முக்கும் மாயாவை அறிமுகம் செய்து வைத்தார்.

'அஜீஸ்—நேற்று என் வீட்டைப் பார்த்துப் பாராட்டினதெல்லாம் மிஸஸ் சத்யகுமாருக்குத்தான் சொந்தம்' என்றார்.

ஒரு மணி நேரம் போனது தெரியவில்லை. தனித் தனியாக ஒவ்வொரு நபரும் மாயாவுடன் பேசுவதில் இன்பம் கொண்டனர்.

மாயா குடிக்க மாட்டாள் என்று அறிந்திருந்த பாஸ்கர் அவளுக்கு அன்னாசி ரசத்தைக் கொணர்ந்து கொடுத்தான். ரெல்லான் ஜி.எம். மாயாவிடம் மனம் விட்டுப் பேசினார். தங்கள் கம்பெனியின் திட்டங்கள் என்ன என்று எடுத்துரைத்தார்.

கேட்க வேண்டியவிதத்தில் தலையை ஆட்டிக் கேட்டு, கண்களை விரித்து, தோள்களைக் குலுக்கி, சொல்ல வேண்டிய சரியான வார்த்தையைச் சொன்ன மாயாவின் திறமையில் அவருக்கு நம்பிக்கை பிறந்தது.

'நீங்கள் ரொம்ப புத்திசாலி மாயா' என்றார் அவர்.

'புத்திசாலி மட்டுமில்லை, அழகி, நன்றாய் பழகத் தெரிந்தவள், இனிமையானவள், எல்லாம்...எல்லாம்' என்றார் சுதர்ஸன்.

மாயா ஆகாசத்துக்கே போய் விட்டாள்.

மணி ஒன்பதை நெருங்குகையில், 'என் கணவர் டெல்லியிலிருந்து திரும்புகிறார். நான் போக வேண்டும்' என்று விடை பெற்றுக் கொண்டு மாயா பாஸ்கருடன் கிளம்பினாள்.

காரில் கொஞ்ச நாழிகை பாஸ்கர் பேசவேயில்லை.

'நமக்கு அந்தக் காண்ட்ராக்ட் கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா, பாஸ்?' மாயா கேட்டாள்.

சாலையிலிருந்து கண்களை எடுத்து மாயாவை உற்றுப் பார்த்துவிட்டு மெல்லச் சொன்னான் பாஸ்கர்.

'சந்தேகம் இருக்கிறதா?'

மாயாவுக்குப் பெருமையாக இருந்தது.

'இன்று அந்தப் பார்ட்டியில் வேறு சில பெண்களும் இருக்கத்தான் செய்தார்கள் ஆனால் உன் கிட்டே கூட ஒருவராலும் நெருங்க முடியவில்லை, தெரியுமா?'

மாயா சிரித்தாள்.

'சுதர்ஸன் சொன்னது நிஜம் அழகில், புத்தியில் குணத்தில் யாரும் உன்னைத் தொட முடியாது—தெரியுமா?'

பாஸ்கர் பாராட்டுவது இது முதல் தடவை அல்ல என்றாலும் தனிப்பட்ட முறையில் பாராட்டுகள் அமைந்ததாக மாயா நினைத்தாள்.

'தேங்க்யூ பாஸ். இவ்வளவு புகழ்ச்சிக்கு எனக்குத் தகுதி இல்லை...நான் என்ன அப்படி நீங்களெல்லாம் பண்ணாத அற்புத வேலைகளைச் செய்துவிட்டேன் ம்...?

'வேலை திறமை மட்டும் இல்லை மாயா, கலகலப்பான சிரிப்பு, பேச்சு, கனிவான பார்வை, அண்டர்ஸ்டாண்டிங் அவுட்லுக்... எல்லாம்தான்... எத்தனை பெண்கள் இப்படி எல்லாம் அமைந்திருப்பார்கள்? இடியட்!'

'என்னைப் போல ஆயிரம் பெண்கள் இருப்பார்கள் பாஸ், வீணாக என்னைப் புகழாதீர்கள்...'

மாயாவின் வீடு நெருங்கி விட்டது.

'நிஜமாகச் சொல்லுகிறேன் மாயா. உன்னை மாதிரி ஒரு பெண் கிடைத்தால் மறுகணமே திருமணத்துக்கு நான் ரெடி...என்ன பெண் பார்க்கிறாயா?'

மாயாவுக்கு சிரிப்பு தாங்கவில்லை. பாஸ்கர் பெரிய 'ஜோக்' சொன்ன மாதிரி பெருமையுடன் சிரித்தான்.

வீட்டின் முன் வண்டியை நிறுத்தி, அவள் இறங்குவதற்காகக் கதவைத் திறந்து பிடித்தான் பாஸ்கர். பிறகு 'ம்... சத்யா அதிர்ஷ்டக்காரன்' என்றான் மெல்ல.

இதற்கும் சிரிப்பையே பதிலாக்கி விடை பெற்றுக் கொண்டு வீட்டினுள் நுழைந்தாள் மாயா.

சத்யா டெல்லியிலிருந்து வந்து விட்டிருந்தான்.

'ஹலோ மாயா? என்ன பார்ட்டி நன்றாய் இருந்ததா? யூ ஹேட் எ குட் டைம்...?'

மாயா சுருக்கமாய் விவரங்களைச் சொன்னாள்...

'குட் ரியலி குட்...' என்ற சத்யா சிறிது நேரத்தில் அவசர வேலை இருந்ததைக் கவனிக்க பைலை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

அவளைப் பார்த்த ஆண்களெல்லாம் அன்றைக்கு மாயாவின் அழகை விமர்சித்து, பாராட்டியிருந்தபோது சத்யா மட்டும் ஒன்றுமே சொல்லாமல் இருந்தது மாயாவுக்கு வருத்தமாக இருந்தது.

வேலைகளை முடித்துக் கொண்டு சத்யா வந்தபோது மாயா படுக்கையில் கொட்டு கொட்டென்று விழித்த வண்ணம் படுத்திருந்தாள்.

கையை நீட்டி சோம்பல் முறித்தான் சத்யா.

'டெல்லியில் சரியாகத் தூக்கமே இல்லை மாயா. செம்மை வேலை' என்றவன், மாயாவை இழுத்து அணைத்து 'குட்நைட் டார்லிங்' என அதரத்தில் முத்தமிட்டுவிட்டு, ஐந்தே நிமிஷத்தில் தூங்கிப் போனான்.

நான்கு நாட்களாக ஊரில் இல்லாத கணவனிடமிருந்து கடல் ஃபோன்கால் கூட எதிர்பார்க்கவில்லை...

ஆனால், யார் யாரோ சொன்ன பாராட்டு வார்த்தைகளில் ஒன்றைக்கூடவா சொல்லத் தெரியாது? இவன் கண்ணுக்கு மட்டும்தான் அழகாக இல்லையா.

மாயா கண்களை மூடிக் கொண்டாள்.

மூடின கண்களிலிருந்து கண்ணீர் கோடு போலக் கன்னத்தில் வழிந்தது. அன்று சந்தித்த ஆண்களின் பாராட்டுகளெல்லாம் மீண்டும் தலையெடுத்து புண்பட்டுப் போன மனசை வருடிக்கொடுத்த பிறகே அவள் தூங்கலானாள்.

12

இண்டர்காம் ஒலித்தது.

'எஸ்' என்றாள் மாயா.

'பிஸியா, மாயா?' என்றான் தாமஸ்.

'என்ன விஷயம், தாமஸ்.'

'மணி ஒன்றடிக்கப் போகிறது. வெளியே போய் சாப்பிடலாமா, மாயா?'

'கஷ்டம் தாமஸ். ரெல்லான் வேலை வரைபடம் நான்கு நாட்களில் தயாராகி அப்ருவலுக்கு அனுப்ப வேண்டும்.'

'ப்ளீஸ், மாயா, மனசு சரியில்லை. உன்னோடு பேசினால் தேவலை போலிருக்கிறது. டு கம்—'

தாமஸ் கொஞ்ச நாளாகப் பறிகொடுத்த மாதிரி இருப்பது மாயாவுக்குத் தெரிந்ததுதான்.

கண்களின் கீழ் கறுப்பு வட்டம்.

முகத்தில் சோர்வு.

பார்ட்டிகளில் அறிமுகம். குடித்துவிட்டு... 'சே! என்ன வாழ்க்கை' என்று அழுகிறான்.

'ஆல்ரைட்! நான் ரெடி.'

தாமஸுடன் புறப்பட்டுப் போனாள் மாயா.

உணவுப் பதார்த்தங்களுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருக்கும் நாழிகையில் தாமஸ் பேசினான்.

'என் வாழ்க்கை நாசமாகிவிட்டது மாயா. காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டவள் என்னை ஏமாற்றிவிட்டாள்...'

அவனே பேசட்டும் என்று ஆதுரத்துடன் பேசாமல் கவனித்தாள் மாயா.

'மூன்று மாதங்களுக்கு முன் ஸில்வியாவுக்கு குழந்தை பிறந்து இறந்து போனது உனக்குத் தெரியும் இல்லையா?'

'ம்—'

அதிலிருந்து முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு பிணம் மாதிரி வீட்டை வலம் வருகிறாள் ஸில்வியா. பேச்சு,சிரிப்பு ஒன்றும் இல்லை. சதா அழுகை. நான் தொட வந்தால் கத்துகிறாள். தொட்டதெற்கெல்லாம் ஆர்குமெண்ட்; சண்டை! ஐ ஆம் நாட் ஏபிள்டு அண்டர்ஸ்டாண்ட் ஹர்.'

'ரியலி?... ஸில்வியா நல்ல பெண்ணாயிற்றே...ஏன் இப்படி இருக்கிறாள்?''

'பார்ட்டிக்குக் கூப்பிட்டால் வருவதில்லை. ஷாப் பண்ணிக்கொள்வதில்லை...... என்னைக் கண்டாலேயே ஆவதில்லை.'

'கேட்கக் கஷ்டமாயிருக்கிறது தாமஸ்.'

கொஞ்ச நாழிகை தன் மேல் உண்டான பச்சாதாபத்தை அனுபவிப்பது போலத் தாமஸ் சும்மா இருந்தான். பிறகு,

'குடித்தால் என்ன தப்பு மாயா? குடிக்கக்கூடாது என்று எப்போதுமே ஸில்வியா சண்டை பிடிப்பாள், ஜஸ்ட் ஃபார் பன் குடிக்கிறேன்: இது தப்பா?...சத்யா கூடத்தான் குடிக்கிறார்... நீ ஒன்றுமே சொல்வதில்லையே மாயா... இன்ஃபாக்ட் உங்கள் வீட்டில் பார்ட்டி நடந்தால் இரவு ஒன்றோ இரண்டோ எத்தனை மணி ஆனாலும் நீ சிரித்த முகத்துடன் விருந்தாளிகளுடன் பேசிப் பார்த்திருக்கிறேன்—ஸில்வியா இப்படி இல்லை...என்னுடைய வீட்டுக்குள் விருந்தாளிகள் வந்தால் ஆகாதே முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு வந்தவர்களுக்கு ஏன் வந்தோம் என்ற எண்ணத்தை தோன்றச் செய்து விடுவாள் மாயா உன்னை மாதிரி மனைவி கிடைப்பதற்கு தவம் பண்ணி இருக்கவேண்டும். என்ன பாவம் செய்தேனோ ஒரு பிசாசு வந்திருக்கிறது. எனக்கு மனசில் சந்தோஷமே இல்லை மாயா...வீட்டுக்குப் போகக் கூடப் பிடிப்பதில்லை... பேசாமல் டிவோர்ஸ் பண்ணினால் என்ன மாயா?'

தாமஸ் அழுது விடுவான் போலிருந்தது.

பாவம்!

அவன் மனைவி ஏன் இப்படி இருக்கிறாள்?

குடிப்பதிலும் நண்பர்களுடன் பேசிப் பொழுதைக் கழிப்பதிலும் என்ன தவறு?

மனைவியைத் தாமஸ் குறை சொல்லும் அதேசமயத்தில் தன்னை உயர்வாகப் பேசியது மாயாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

தாமஸின் பாராட்டில் மயக்கம் கண்டவளுக்கு அடிப்படைக் கோளாறு தாமஸிடமா, இல்லை அவன் மனைவி

யிடமா என்று யோசித்துப் பார்க்கக்கூடத் தெரியாதபடி மூளை மந்தித்துப்போனதால்...

'எனக்கு கேட்கக் கஷ்டமாக இருக்கிறது. தாமஸ், தேற்றிக்கொள், எல்லாம் சரியாகிவிடும், ஸில்வியா ஒரு நாள் தன் தவறை உணருவாள், சியர் அப்' என்று மட்டுமே ஆறுதல் சொன்னாள்.

13

எதிரில் நின்ற மனிதனை நிமிர்ந்து பார்த்தாள் மாயா. வேலைகள் நடக்கும் இடத்தில் அன்னிய நபரின் தொந்தரவு இருந்தால் அவளுக்குப் பிடிக்காது.

ரெஸ்லான் ஷோரூம் திறக்க இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. கடைசி சில்லறை வேலைகளில் கவனமாய் இருந்தவளிடம் 'குட்மார்னிங்' என்று சொல்லித் தன் கையிலிருந்த கார்டை நீட்டினான் அவன்.

பெயர் கார்த்திக்.

சென்னையின் பிரபல பத்திரிகையின் உதவிஆசிரியன்.

'என்னால் என்ன ஆக வேண்டும்?' என்பது போல மாயா அவனைப் பார்த்தாள்.

'இந்த ஷோ ரூமை நேற்றுப் பார்வையிட்டேன், அற்புதமாக அமைத்திருக்கிறீர்கள். இது மாதிரி சென்னையில் இன்னொரு ஷோ ரூம் கிடையாது. ப்யூடிஃபுல்—இதைப் படங்கள் எடுத்து எங்கள் பத்திரிகையில் போட்டுவிட்டு, உங்கள் படத்தை அட்டையில் போட்டு உங்கள் பேட்டியையும் எழுதலாம் என்று தோன்றியது...என்ன சொல்லுகிறீர்கள்?'

மாயாவின் காதுகள் இரண்டும் சிவந்து போயின.

பாராட்டுரைகள், புகழாரங்கள் அவனுக்குப் புதிதில்லை. ஆனால் இப்படி பத்திரிக்கைக்காரர் அவளைத் தேடிவந்து வானளாவப் பேசி அட்டையில் படத்தைப் போட்டு விளம்பரம் கொடுக்கிறேன் என்றது புதுசு-ரொம்பப் புதுசு.

விளம்பரங்கள் தன்னைத் தேடிவரும் அளவுக்கு தான் திறமைசாலியா?

அட்டையில் போட்டுச் சிறப்பிக்கும்படி தான் அழகியா?

இது பெரிய பத்திரிகை ஆயிற்றே!

இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்கும் பத்திரிகை ஆயிற்றே!

மாயாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

'தாங்ஸ் மிஸ்டர் கார்த்திக். அதற்கென்ன உங்கள் இஷ்டம் போலச் செய்யுங்கள். வாருங்கள். உங்களுக்கு நானே விளக்குகிறேன்.'

இருவரும் ஷோரூம் உள்ளே போனார்கள்.

'இது உலகப்பிரசித்தி பெற்ற ஸ்தாபனம். பெண்களின் அழகு சாதனங்களைத் தயாரிப்பதில் உலகில் முன்னணியில் இருப்பவர்கள் அழகுக்கு அழகு செய்யும் சாதனங்களின் ஷோரூம் ஆதலால் பிரமிக்க வைக்கும் அழகுடன் இது விளங்க வேண்டும் என்று நினைத்தேன்...'

மாயா உற்சாகமாகப் பேசினாள்.

அந்த ஷோ ரூம் மிகவும் அழகாக அமைந்து விட்டது வாஸ்தவம்தான்.

தரை, பக்கச் சுவர்கள் எல்லாம் முகம் பார்க்கும் கண்ணாடிகள். விட்டத்திலிருந்து தொங்கும் கண்ணாடிச் சரவிளக்குகள். ஆங்காங்கே சுழலும் வட்டத் தூண்கள். சுவரில் ரெவ்லான் உற்பத்தி செய்யும் அழகு சாதனங்களின் கலர்ப்படங்கள் தூண்களுக்குள் மறைவில்

விளக்குகள் இருந்ததால் பளிச்சென்று படங்கள் மெதுவாகச் சுழன்றன. பெண்களின் கவர்ச்சிப்படங்கள் சில கோணத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. இங்கும் அங்குமாய் கொடிகள்-வண்ண பூதாகாரமான ரோஜாக்கள். நிஜம் போலவே ஓரத்தில் சின்ன நீரூற்று.

தரை, சுவர்கள் முகம் பார்க்கும் கண்ணாடியாதலால் ஆயிரமாயிரம் சர விளக்கு. பெண். நீரூற்றின் பிரதிபலிப்புகள்.

எல்லாம் ஒரு இந்திர ஜாலமாக இருந்தன.

மதியமே போட்டோகிராபருடன் கார்த்திக மீண்டும் வந்தான்.

ஷோரூமையும் மாயாவையும் கலர்ப்படங்கள் எடுக்க வைத்தான்.

சுவாரஸியமான கேள்விகள் கேட்டுப் பேட்டியை எடுத்தான்.

புறப்படும் முன், 'பாரதி கண்ட புதுமைப் பெண் நீங்களே தான்' என்று அவளைப் பெரிசாய்ப் பாராட்டி விட்டுச் சென்றான்.

14

கார்த்திக் சொன்னபடி செய்துவிட்டான்.

கலர் அட்டைப்படம்.

உள்ளே ஷோ ரூம் படங்கள். இவளுடன் பேட்டி.

எல்லாம் தடபுடல்.

அம்மா எழுதியிருந்தாள். 'உன்னைப்பற்றி பத்திரிகையில் பார்த்தோம். எங்கள் பெண்ணுக்கு இவ்வளவு திறமையா என்று ஆச்சரியமாக இருக்கிறது அடுத்து

உன்னைப் பார்க்கும்போது திருஷ்டி சுற்றிப் போட வேண்டும் என்று.

'என் மருமகளைப் பற்றி பார்த்தவர்களெல்லாம் விசாரிக்கின்றார்கள் எனக்குப் பெருமையாக இருக்கிறது. உன் அம்மா இருந்து இதையெல்லாம் பார்க்கவில்லையே என்று வருத்தமாகவும் இருக்கிறது...'—இது மாமனார்.

'மிஸஸ் சத்யகுமார். உங்கள் பேட்டி பிரமாதம்' என்றும்,

'ஹாய்! மாயா யுஆர் வல்லி தன் தட்' என்றும்,

'இன்னும் எப்படியெல்லாம் உன்னை உயர்வாகப் பத்திரிகைக்காரர்கள் எழுதப் போகிறார்களோ பார்த்துக் கொண்டே இரு' என்றும் தெரிந்தவர்களெல்லாம் பாராட்டினார்கள்.

நண்பர்களின் மனைவிகளில் பலருக்குப் பொறாமை எழுந்தது கூட மாயாவுக்குப் புரிந்தது.

சென்னைப் பட்டணமே ஒருமுகமாய் அவளைப் புகழ்ந்தது போன்ற எண்ணம்.

'தாங்ஸ்' சொல்லி வாய் வலித்துவிட்டது.

'இந்தப் படத்தை ஃப்ரேம் பண்ணி மேஜை மேல் வைத்துக் கொள்ளப் போகிறேன்' என்று பாஸ்கர் சொன்ன போதும்,

'இங்கே பார், என் பர்ஸில், உன் போட்டோ!' என்று கார்த்திக் காண்பித்தபோதும், 'இவனெல்லாம் எதற்காக என் புகைப்படத்தை வைத்துக்கொள்ள வேண்டும்?' என்று ஆத்திரம் எழாமல், 'ஆஹா! ஆண்கள் என்னை எப்படிக் கொண்டாடுகிறார்கள்' என்று அசட்டு திருப்தியே மாயாவிடம் தோன்றியது.

இந்தத் திருப்தியின் காரணமாகவே சத்யா, 'நீ நேரில் இருப்பது போல இல்லை மாயா. பேட்டியும் உயர்வாக இல்லை இன்னும் நன்றாக எழுதியிருக்கலாம்' என்று சொன்ன போது, 'நீங்கள் என்றைக்கு என்னைப் பாராட்டியிருக்கிறீர்கள், சத்யா?' என்று வெளியில் சொல்லி விட்டு, 'நீங்கள் உயர்வாக சொல்லாவிட்டால் என்ன? ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என் புகழ்பாட' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.

15

கார்த்திக்குடன் பழக்கம் அதிகரித்து விட்டது. 'கார்த்திக் நீ' என்று இவளும், 'மாயா நீ' என்று அவனும் அழைக்கும் படி நெருக்கம் ஏறிவிட்டது.

ஒரு நாள், 'மாயா, நேற்று நீ பச்சை ஸாரி, அதே கலர் ப்ளவுஸ், ஒற்றைப் பின்னல், சரியா?' என்று கேட்ட போது மாயா அசந்து விட்டாள்.

'எங்கே பார்த்தாய் கார்த்திக்? நான் உன்னைப் பார்க்க வில்லையே.'

'இரண்டு நாட்களாக நீ ரொம்ப பிஸி. உன்னைப் பார்த்துப் பேசவே முடியவில்லை. நேற்று பார்க்க வேண்டும் போல இருந்தது. போனில் நீ பதினொரு மணிக்கு ஆபீஸ் வருவேன் என்றாய். காரை ரோடில் நிறுத்திக் கொண்டு உனக்காகக் காத்திருந்தேன். நீ வண்டியிலிருந்து இறங்கி கட்டடத்துக்குள் நுழையும் வரை பார்த்துவிட்டுப் பிறகு போனேன்.'

ப்ஷூ! கார்த்திக் பார்க்காத அழகான பெண்களா? சினிமா நடிகைகளா?

மாயாவுக்குப் பெருமையாக இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல மாயாவின் காரியங்களில் கார்த்திக் விசேஷ கவனத்தைச் செலுத்த முற்பட்டான்.

'உன் ஓவியங்களெல்லாம் உயிர்த் துடிப்பு உள்ளவை மாயா. மாக்ஸ் முல்லர் பவனிலோ, இல்லை சோவியத் கல்சர் கூடத்திலோ, ஒரு தனிநபர் ஓவிய கண்காட்சிக்கு ஏற்பாடு பண்ணப் போகிறேன்' என்று தொணதொணத்து அதில் வெற்றியும் கண்டு விட்டான்.

முப்பதுக்கும் மேற்பட்ட மாயாவின் ஓவியங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டன.

ஐநூறு, ஆயிரம் என்று விலை கொடுத்துத் தன் ஓவியங்களைப் பலர் வாங்கத் தயாராக இருப்பது தெரிந்த போது, மாயாவுக்குள் தலைகால் புரியாத சந்தோஷம் நிறைந்து போனதாலோ என்னவோ, சமூகத்தில் பல ஆண்கள் கண்களாலும் பின்னர் மனசாலும் தன்னை ரசிக்கத் தொடங்கியிருப்பது அவளுக்குப் புரியவே இல்லை.

16

சத்யா மீண்டும 'அண்டி ரேபிஸ்' ஆராய்ச்சியைத் தொடங்கி விட்டான். ஒரு மாதமாக அவனுக்குச் சக்கை வேலை. இன்னும் இரண்டு மாதங்களாவது ஆனால்தான் பரிசோதனை வெற்றியா, இல்லையா என்றே தெரியுமாம்.

ஓய்ந்து வந்து படுக்கையில் விழுவான். இரவு நடு ஜாமத்துக்கு போன் அலறும். ஆராய்ச்சியில் ஏதோ மாறுதல் என்பார் உதவியாளர்.

ஓடுவான்.

சத்யா இத்தனை பொறுப்பாக இருப்பது மாயாவுக்குச் சந்தோஷமாக இருந்தாலும், 'என்ன வேலை— பெண்டாட்டியை நின்று கூடக் கவனிக்க முடியாமல்?'

என்ற சலிப்பு வரவர ரொம்பத் தோன்றத் தொடங்கி விட்டது. இதனால் கணவனின் கவனிப்பும், நெருக்கமும் கிடைக்காத சமயங்களில் மற்ற நண்பர்களின் அதிக கவனிப்பு அவள் மனசுக்கு ரொம்ப தெம்பைக்கொடுத்தது.

அன்று அதிசயமாய் சத்யாவுக்கும் ஓய்வு கிடைத்திருந்தது. மாயாவுக்கும் ரொம்ப வேலைகள் இல்லை. நான்கு மணி அளவில் சத்யா போன் பண்ணினான்.

'இன்றைக்கு ரொம்ப வேலை இல்லை மாயா. நான் ஆறுக்குள் வீட்டுக்கு வந்து விடுவேன். சுருக்கச் சாப்பிட்டு விட்டு காலார பீச்சில் நடக்கலாமா? அப்புறம் சினிமா! ஓ கே?'

சொன்னபடி வந்து விட்டான்.

சாப்பிட உட்காரப் போகும் முன் போன் அடித்தது.

சிலோனுக்குப் போயிருந்த ராம்நாத் ஒருநாள் முன்னதாகத் திரும்பி வந்து விட்டானாம், சந்திக்கலாமா என்றான்.

மாயாவுக்குச் சற்று யோசிக்க வேண்டும் என்றோ சத்யாவைக் கேட்கவேண்டும் என்றோகூடத் தோன்றவில்லை.

'ஷ்யூர், கண்டிப்பாய் வாருங்கள்' என்றாள்.

அடுத்த அரை மணியில் குடும்பத்துடன் ராம்நாத்தும் தனியாக பாஸ்கரும் வந்து சேர்ந்தார்கள். ஒரு மணி நேரம் கழித்து குடித்துச் சிவந்த கண்களுடன் தாமஸும் சேர்ந்து கொண்டான்.

ராம்நாத் கொணர்ந்திருந்த 'டிம்பிள் ஸ்காட்ச்' காலியானது.

வீடு அதிரச் சிரிப்பு, கும்மாளம்.

சத்யா ஆசைப்பட்ட மாதிரி சுருக்கச் சாப்பாடு— காலார பீச்சில் நடை — சினிமா ஒன்றும் இல்லை.

கூட்டம் கலைந்து போக இரவு ஒன்றரை.

கணவன் விருப்பப்பட்டுத் தன்னிடம் கேட்டதோ, ஆசைகள் நடக்க விடாமல் தானே கொடுத்ததோ, ஒன்றையும் புரிந்து கொள்ளாத மாயாவுக்கு அன்று சத்யா மேல் கோபம்.

படுத்த பிறகு கேட்டாள்—

'என்ன சத்யா—இன்று உங்களுக்கு என்ன வந்தது? யாரோடும் கலகலப்பாய்ப் பேசவில்லையே— அவர்களெல்லாம் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'

சத்யா பதில் சொல்லவில்லை.

'நான் பாட்டுக்குப் பேசிக்கொண்டே இருக்கிறேன், நீங்கள் திரும்பிப் படுத்தால் என்ன அர்த்தம்? உங்கள் மாதிரிதானே ராம்நாத். பெண்டாட்டியை எப்படித் தாங்குகிறார், பார்க்கவில்லை? இத்தனைக்கும் அவளை விட எனக்கு அழகு இல்லையா? திறமை இல்லையா? என்ன சத்யா—எல்லாரும் என்னைப் புகழ்ந்து பேசும் போது வாயைத் திறந்து இரண்டு வார்த்தை சொன்னால் என்ன? உங்களுக்கு என் அருமை என்றைக்குத் தெரியப் போகிறதோ—ஐ டோண்ட் நோ.'

தன் மனைவி நல்லவள்...வெகுளி...கெட்டிக்காரி என்பதெல்லாம் சத்யாவுக்குத் தெரிந்ததுதான். வளர்ந்த விதத்தால் உலக அனுபவம் இல்லாமல் இருக்கிறாளே என்று எண்ணி, அவளை வேலைக்கும் போகும்படி தொந்தரவு பண்ணினவன் அவன்தான். ஆனால் உலக அனுபவம் மாயாவுக்குச் சரியான கோணத்திலிருந்து வரவில்லையே!

சத்யாவுக்கு வருத்தமாக இருந்தது.

எத்தனை புத்திசாலியாக இருந்தாலும் ஒரு நபருக்கு நல்லது எது, கெட்டது எது, தனக்கு நிம்மதியான வாழ்க்கைக்குத் தேவையானது எது, தேவையில்லாதது

எது என்று தெரிய வேண்டும். அது இல்லாவிட்டால் எத்தனை புத்தி இருந்து என்ன பிரயோஜனம்?

சத்யா அதிகமாய் பேச விரும்பவில்லை.

'ராம்நாத் மாதிரி நான் எப்படி இருக்க முடியும் மாயா? அது ராம்நாத்— இது நான்! இப்படித்தான் என்னால் இருக்க முடியும்— இருக்கப் பிடிக்கும். அண்டர்ஸ்டாண்ட்?' அவன் திரும்பிப் படுத்து விட்டான்.

ஊரெல்லாம் பெருமைப் படும்படி நான் இருந்தும் இவருக்கு என் அருமை தெரியவில்லையே என்று ஏற்கனவே வளர்ந்திருந்த எண்ணம் இன்னும் பூதமாய் உயர்ந்தது. மாயா தன் மேலேயே இரக்கம், பச்சாதாபம் போன்ற குணங்களைப் பெருக்கிக் கொள்ளவும் இந்த பூதம் உதவியது. இதனால் மற்றவர்கள் சொல்லும் எந்தப் புகழ்ச்சியும், பாராட்டும் அது தவறாக இருந்த போதிலும் அவளுக்குத் தேனாக இனிக்கத் தொடங்கியது.

மாயாவின் மனசு இப்படிக் குரங்காய் மாறிப்போன ஒரு நாளில் தாமஸ் அவளிடம் வந்தான்

'நேற்று சர்ச்சுக்குப் போயிருந்தேன். மாயா ஃபாதரிடம் கன்ஃபெஷன் எடுத்துக் கொண்டேன் என்னவென்று தெரியுமா?'

'.....'

'ஃபாதர் நான் 'திருமணமானவன். நான் திருமணமான இன்னொரு பெண்ணைக் காதலிக்கிறேன் அவள் வேறு ஜாதிக்காரி; இதற்காகக் கடவுள் என்னை மன்னிக்க வேண்டும்' என்றானாம்.

அவன் யாரைச் சொல்லுகிறான் என்று மாயாவுக்குப் புரிந்தது.

'ச், என்ன பேச்சு இது?' என்று அவனைச் சீறிக் கண்டிக்கவில்லை. மாறாக, மனசில் கானான் அடர்ந்து

பூத்துவிட்ட காரணம், 'வில்லி—தாமஸ் ஆர் வில்லி?' என்று அவனை விளையாட்டாகச் சிறுக்கு ஒதுக்கினாள்.

17

கார் ஓடிக்கொண்டிருந்தது. பாஸ்கர் வண்டியை ஓட்ட அருகில் மாயா அமர்ந்திருந்தாள்.

தாம்பரத்தை தாண்டி, கூடுவாஞ்சேரிக்கு முன் உள்ள பல நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலத்தில் அக்டோபர் மாதத்திலிருந்து 'ஏஷியா 76' ஆரம்பமாகப் போகிறது. டெல்லியில் 'ஏஷியா 72' நடக்கவில்லையா— அதே மாதிரி தான். வெளி நாட்டவர்கள் பங்கெடுக்கப் போகும் இந்தக் கண்காட்சியில் இந்தியாவில் பெரிய தொழிற்சாலைகள், கம்பெனிகள் எல்லாம் கலந்துகொள்ளப் போகின்றனவாம். ஆறு மாதம் முன்பே அந்தக் கம்பெனிகள் ரிஜிஸ்தர் செய்து கொண்ட பிறகு அவரவர் பெவிலியன்களுக்குத் தேவையான இடம் ஒதுக்கப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட பெவிலியன்கள் உண்டாகிப் போகும் இடத்தில் வெவ்வேறு மாநில அரசுகள் தங்கள் பெவிலியன்கள் கட்டக் கூடத் தொடங்கி விட்டார்கள்.

காட்சிக் கூடங்கள் நிர்மாணிப்பதில் இந்தியாவின் பெரிய ஆர்கிடெக்ட் இன்டஸ்ட்ரியல் டெகரேடர் இவர்களுள் போட்டா போட்டியாம்.

ராம்நாத் அஸோஸியேட்ஸுக்கு மூன்று கூடங்கள் அமைக்கும் பொறுப்பு வந்திருக்கிறது.

இண்டியன் வாட்ச் கம்பெனி, ஹெவி என்ஜினியரிங் கார்ப்பரேஷன், ஆகிய உலகப் புகழ் பெற்ற டார்ச் பேட்டரி தயாரிக்கும் டைகர் டார்ச் கம்பெனி.

கட்டிட வேலைகளை இட்டுவிட்டு. வேலைகள் நடக்கப் போகின்றன. உள் அலங்காரங்களுக்கு மாயாவின் உதவியை ராம்நாத் நாடியபோது, 'தொழிலகங்களின் அலங்காரங்களைச் செய்து எனக்குப் பழக்கமில்லையே நான்; இது நான் கடைகள், வீடு, ஆபீஸ் அறை இவைகள் தானே செய்திருக்கிறேன்' என்று மறுத்து வற்புறுத்தினாள்.

ராம்நாத் விடவில்லை, வற்புறுத்தினான்.

'சரி, டைகர் டார்ச் பெவிலியன், நான் முயன்று பார்க்கிறேன். கண்டிப்பாய் மற்ற இரண்டும் என்னால் முடியாது.'

இன்று காலை ராம்நாத் கண்காட்சி நடக்கும் இடத்துக்கு முன்னதாகவே போய்விட்டான்.

தன்னால் பாஸ்கருடன் மாயா போகிறாள்.

இடத்தைப் பார்க்க வேண்டும். ராம்நாத் எந்த மாதிரி கட்டிட அமைப்பில் கூடத்தை நிர்மாணிக்கப் போகிறான் என்று கேட்க வேண்டும், பிறகு திட்டத்தைத் திட்ட ஆரம்பிக்க வேண்டும்.

மாயாவுக்கு மலைப்பாக இருந்தது.

வரவர அவள் வேலைகளைப் பற்றிய பேச்சு சென்னைக்கு அப்பாலும் கேட்கத் தொடங்கிவிட்டன.

இத்தனை சின்ன வயசில் இவ்வளவு குறுகிய காலத்தில் ரொம்ப பேர் எடுத்தவர்கள் கிடையாதாம். பம்பாயில் மட்டும் ஒரு பெண்மணி இருக்கிறாளாம். பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் அலுவலகங்கள் வைத்துக் கொண்டு நடத்தும் பெண்மணிக்கு முப்பது வயது கூட இருக்காதாம். பம்பாய் ஜே...ஜே...ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸில் படித்தவள். வெளி நாடுகளிலிருந்து கூட அவளுக்கு அழைப்புகள் வருகின்றனவாம்.

இந்த எக்ஸிபிஷனில் அவளைச் சந்தித்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று மாயா எண்ணிக் கொண்டாள்.

ஸைட் வந்துவிட்டது. சூடு பிடித்து வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதற்குச் சாட்சியாய் இரும்புக் கர்டர்கள், செங்கல் மலைகள் மணல் குவிப்புகள், நூற்றுக்கணக்கில் லாரிகள், ஆயிரக்கணக்கில் ஆட்கள் என்று கண்ணுக்கு எட்டின வரையில் மாயாவால் பார்க்க முடிந்தது.

கோடிக் கணக்கில் செலவழிக்கப்பட்டு உருவாகும் கண்காட்சி எப்படி இருக்கும்.

ராம்நாத் எடுத்துக் கொண்டிருக்கும் பெவிலியன்களின் வேலைச் செலவு சுமார் ஒன்பது லட்சங்கள் ஆகும். மூன்று மாதம் நடக்கப் போகும் கண்காட்சிக்காக ஏன் சம்பந்தப் பட்ட கம்பெனிக்காரர்கள் இவ்வளவு செலவழிக்க வேண்டும்? காரணமில்லாமலா? சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் யுக்திதான். வெளி நாட்டு உள்நாட்டு ஆர்டர்கள் நிறையக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவரவர் பெவிலியனைச் சிறப்பாக நிர்மாணிக்க முனைகிறார்கள்.

அத்தனை பெரிய இடத்தில் ராம்நாத் எங்கு இருக்கிறான் என்று தெரிந்து கொள்வது சிரமமாதலால், எக்ஸிபிஷன் ஆபீஸை நோக்கி வண்டியை ஓட்டினான் பாஸ்கர்.

இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றை எக்ஸிபிஷன் அலுவலகத்துக்காகவே கட்டியிருந்தார்கள்.

பாஸ்கர் உள்ளே போய் விசாரித்து வந்தான்.

பிளாட் எழுபத்தி இரண்டு, எண்பத்தி நாலு தொண்ணூற்று ஏழு.

ராம்நாத் எண்பத்தி நாலாவதில் இருந்தான்.

காண்ட்ராக்டர், நாலைந்து மேஸ்திரிகள், எல்லோரும் சூழ அவன் நின்றிருந்தான்.

மூவருமாக, பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்தார்கள்.

'டைகர் டார்ச் கம்பெனிக் கூடம் சின்னது; எண்ணூறு சதுர அடிதான். அவர்களுடைய பட்ஜெட் ஒன்றரை லட்சம்—விளக்கு சம்பந்தப் பட்டது என்பதால், பளிச் சென்று பார்க்கும் போது இந்தக் கட்டடத்துக்கும் விளக்குக்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று தெரியும்படி இருக்க வேண்டுமாம்...'

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது எதிர் ப்ளாட்டில் ஒரு மெர்ஸிடிஸ் பென்ஸ் வந்து நின்றது.

'ஹாய்—மாயா— சொல்ல மறந்துவிட்டேன்— எதிர் பிளாட் வரதன் இண்ட்ஸ்ட்ரீஸ் எடுத்திருக்கிறார்கள். இன்னும் யாருக்கும் காண்ட்ராக்ட் விடவில்லையாம்... நானே சாயங்காலம் போய் வரதனைப் பார்க்க வேண்டும் என்று இருந்தேன்...வாயேன் இங்கேயே போய், 'ஹலோ' சொல்லி வரலாம்...'

மூவரும் போனார்கள்—

வரதனுடன், அவர் மகன் ராஜேஷும் வந்திருந்தான்.

'குட் ஆஃப்டர்நூன் மிஸ்டர் வரதன்...'

'ஓ ஹலோ...'

அங்கிருந்த எல்லோருக்கும் ஒருவரை ஒருவர் தெரியும்.

'ஹலோ—மிஸ்டர் சத்யகுமார்—நீங்கள் டைகர் டார்ச் பெவிலியனை டெகரேட் பண்ணப் போகிறீர்களாமே! கேள்விப்பட்டேனே!'

காற்றுக்கு வாய் உண்டா என்ன?

மாயா அழகாய்ச் சிரித்தாள்.

ராஜேஷ் இவளிடம் வந்து நின்று கொண்டான்.

'எங்கள் பெவிலியனைத் தயார் பண்ணுவது பற்றிப் பேச உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன். நீங்களே வலிய வந்துவிட்டீர்களே?'

ராஜேஷ் அசடு வழிந்தான்.

வரதனும் இவளிடம் வந்து என்னென்னவோ கேட்டுச் சிரித்தார்.

இரண்டு பேரிடமிருந்து 'பீர்' நெடி அடித்தது. கிளப்பிலிருந்து நேராக வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

ராம்நாத் அதிகம் பேசினான். எப்படியாவது அந்த காண்ட்ராக்டையும் தாங்கள் வாங்கிவிட வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது.

'ஸோ நாங்கள் கிளம்புகிறோம். அப்புறம் பார்க்கலாமா?'—ராம்நாத் கிளம்பினான்.

'ஷ்யூர்—கண்டிப்பாய் வாருங்கள்.. மிஸஸ் சத்யகுமாரையும் அழைத்து வாருங்களேன், என்ன?—'

இவர்கள் கிளம்பும்போது மணி மூன்றாகிவிட்டது.

ராம்நாத் வந்தது போலவே தனியே போய்விட்டான். கண்காட்சி அலுவலகத்தில் வேலை இருக்கிறதாம். வேலைகள் தொடங்க தண்ணீர், மின்சாரம் எப்போது வரும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமாம்.

'மாயாவை இறக்கிவிட்டு நீ ஆபீஸுக்குப் போ, பாஸு. நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்.'

மாயாவோடு, பாஸ்கர் கிளம்பினான். வண்டி நெடுஞ்சாலையில் வேகமாய்ப் பறக்கத் தொடங்கியதும் நினைத்துக் கொண்டு சிரித்தான்.

'என்ன பாஸு?'

'ஒன்றுமில்லை.'

'அட, சொல்லேன்.'

'இல்லை — வரதன் இண்டஸ்ட்ரீஸ் காண்ட்ராக்ட் வருமோ இல்லையோ என்று ராம்நாத் கவலைப்படுவது எதற்கு? அப்பனும் பிள்ளையும் உன்னிடம் அவுட்—உன்னோடு போய் விஷயம் பேசினால் தீர்ந்தது—' அவன் திரும்பவும் சிரித்தான்.

மாயாவுக்கும் சிரிப்பு வந்தது. ஜன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

'பத்து நிமிஷத்திற்கு இரண்டு பேரும் தவித்துப்போய் விட்டார்கள்—பாவம்...'

'சீ அசிங்கமாய் பேசாதே, பாஸு.' மாயா பொய்க் கோபத்துடன் அவனைக் கண்டித்தாள்.

வீடு வந்து விட்டது.

'உள்ளே வந்து காப்பி சாப்பிட்டுவிட்டுப் போயேன்.'

பாஸ்கர் இறங்கி உள்ளே போனான்,

'மணி, இரண்டு கப் காபி—தின்பதற்கு ஏதாவது இருந்தாலும் கொண்டு வா.'

மின் விசிறியைத் திருகிவிட்டு இருவரும் உட்கார்ந்தார்கள்.

காபி, ஓமப்பொடி வந்தது.

'டாக்டர் ஊரில் இருக்கிறாரா மாயா?'

'ம்?... ஓ! இருக்கிறாரே ஏன்?'

'ஒண்ணுமில்லை, சும்மா.'

சில நிமிஷங்களுக்குப் பிறகு பாஸ்கரே பேசினான்.

''டாக்டர் ரொம்ப பிஸி இல்லையா? அவருக்கு உன்னோடு உட்கார்ந்து பேச நேரம் இருக்குமோ?'

'......'

'ஆல்ரைட், நான் கிளம்புகிறேன். நாழியாகி விட்டது.'

பாஸ்கர் எழுந்துவிட்டான்.

வாசற்படி வரைக்கும் போனவன் நினைத்துக் கொண்டு நின்றான்.

'ஒன்று சொன்னால் கோபிப்பாயா?'

'ம்ஹூம்.'

'நிஜமாய்?'

'இதென்ன பீடிகை? புதுப் பழக்கம்?'

'இல்லை...நேற்று தாமஸும் நானும் ரொம்ப நாழிகை பேசிக்கொண்டிருந்தோம்.'

'வாட்?'

'கடவுளுக்குக் கருணை இல்லை மாயா. வாழ்க்கையை உற்சாகமாக அனுபவிக்கத் துடிக்கும் தாமஸுக்கு ஸில்வியா மாதிரி பொறாமை பிடித்த, நொண்டி மனம் கொண்ட மனைவி; உனக்கு சத்யா எத்தனை தவறான ஜோடி சேர்ப்பு என்று பேசினோம்...'

இவன் இத்தனை அப்பட்டமாக தன் மணவாழ்க்கையைப் பற்றிப் பேசுவான் என்று மாயா எதிர்பார்க்கவில்லை.

'நோ...நோ யூ ஆர் ராங்...சத்யாவுக்கு என்ன குறை?'

மெல்லச் சிரித்தான் பாஸ்—

'சத்யா பெரிய விஞ்ஞானியாக இருக்கலாம்—புத்திசாலியாக இருக்கலாம்...அதற்காக ஒரு நல்ல கணவன் என்று ஒப்புக்கொள்ள முடியுமா? ரசனைகளில் இரண்டு துருவங்களான உங்கள் இரண்டு பேரையும் எத்தனை

தடவைகள் சேர்த்துப் பார்த்திருக்கிறேன். ஸாரி மாயா... உன் மாதிரி ஆல்ரவுண்டருக்கு சத்யா சரியான கணவன் இல்லை என்றே நான் நினைக்கிறேன்...நான் மட்டும் இல்லை... உன்னை அறிந்த எத்தனையோ பேர்கள் பேசி நான் கேட்டு விட்டேன்—எனவே—நாங்கள் வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? பை மாயா.' மாயாவின் தோள்களை ஒரு தரம் அழுத்தப் பிடித்துத் தட்டிக் கொடுத்த பின் பாஸ்கர் புறப்பட்டுப் போனான்.

எனக்கு சத்யா ஏற்றவரில்லையா?

இவர்கள் அப்படி நினைக்கிறார்களா?

என்னை அறிந்தவர்களெல்லாம் அப்படித்தான் பேசுகிறார்களா?

நெஞ்சுக்குள் வளர்ந்திருக்கும் தன் மேலேயே பச்சாதாபப்படும் குணத்துக்கு இன்றைக்குப் பாஸ்கரின் பேச்சால் தீனி கிடைத்ததால் இன்னும் ஒரு பங்கு புஷ்டியுடன் அது வளர்ந்தது.

18

மாயா வருவதற்குள் சத்யா சிற்றுண்டி அருந்தத் தொடங்கி விட்டான்.

அவசரம் அவசரமாக அலங்காரத்தை முடித்துக் கொண்ட மாயா 'ப்ஷூ' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே சத்யாவின் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

'மணி எனக்கு டிபன் வேண்டாம், வெறும் காபி.'

'வொய்?' என்றான் சத்யா.

'இரவெல்லாம் கண் முழித்து பெவிலியனுக்கு டிஸைன் போட்டதில் தலையை வலிக்கிறது.'

'வேணும் போல இல்லை.'

'உன்னோடு முக்கிய விஷயமாய் பேசணும் மாயா. வெளியில் போகப் போகிறாயா?'

'ம்—போகணும்! எக்ஸிபிஷன் சம்பந்தமாய் டிஸ்கஷன்—என்ன சமாசாரம்?'

மௌனமாய் டிபனை முடித்தான் சத்யா.

காபி வந்தது.

'என் வேலையில் சில முக்கிய மாறுதல்களைச் செய்யப் போகிறேன் மாயா. ஆன்டி ரேபிஸ் ஆராய்ச்சி இங்கே வெற்றிகரமாய் நடக்கவில்லை என்று தெரியுமல்லவா? அதற்காக குன்னூர் பாஸ்ச்சர் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போய்ப் பார்த்து வந்தேன் இல்லையா? இது சம்பந்தமாய் சேர்மனிடம் பேசி விட்டேன்...' கொஞ்சம் நிறுத்தின சத்யா தொடர்ந்தான்—

'என் ஆராய்ச்சியைக் குன்னூரில் தொடர்வது என்று தீர்மானம் பண்ணிவிட்டோம். மாயா, சேர்மன் அக்ரீஸ் வித் மீ. இங்கு சீதோஷ்ணத்தாலோ இல்லை எதனால் இந்தத் தோல்வி என்று புரியவில்லை. குன்னூரில் பாஸ்ச்சர் இன்ஸ்டிட்யூடில் ஏற்கனவே இந்த மருந்தின் உற்பத்தி நடக்கிறது. அதனால் ஆராய்ச்சி தொடர முடியும். தெ ஆர் ஆல்ஸோ வெரி ஈகர்—ஊட்டியில் 'ஆதித்யா இன்டர்நாஷனலின்' ட்ரக் தொழிற்சாலை ஒன்று கட்டப்பட்டு முடியும் தருவாயில் இருப்பது உனக்குத் தெரியும். ஆன்டி ரேபிஸ் ஆராய்ச்சியைக் கவனித்தவாறே ஆதித்யா புரொடக்ஷனையும் கவனிப்பது எனக்குச் சுலபம்—வொ இஸ் டிஸிஷன்...'

மாயாவுக்கு விஷயம் அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.

ஒரு மாத காலமிருக்கும் சத்யா ஒரு நாள் ஆராய்ச்சி இங்கு தோல்வியுற்றதை அவளிடம் சொல்லிவிட்டு

'குன்னூர் பாஸ்ச்சர் இன்ஸ்டிட்யூட்டுடன் தொடர்பு கொண்டு சில திட்டங்களை அவர்களுடன் பேசிப் பார்க்கப் போகிறேன்' என்று சொன்னான்.

இரண்டு நாட்களுக்கு குன்னூருக்குப் போய்விட்டும் வந்தான்.

சேர்மனுடன் எப்போது பேசினான்?

இப்போது திடும் என்று குன்னூரில் ஆராய்ச்சி என்றால் எப்படி?

கோபம் தாங்காமல் கேட்டாள்—

'என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே சத்யா, வாட் ஈஸ் ஆல் திஸ்'?

'உனக்கு இப்போதெல்லாம் என்னோடு உட்கார்ந்து பேச நேரம் ஏது மாயா? நானும் பிஸி நீயும் பிஸி. சாயங்காலமானால் உன் நண்பர்கள். குப்பன், சுப்பன் என்று வந்து கும்மாளமிட்டுவிட்டு நடு ஜாமத்துக்குப் போகிறார்கள். எங்கே நேரம்?...இன்ஃபாக்ட் நான் போன மாதமே குன்னூர் பற்றி உன்னிடம் சொன்னேனே...'

சத்யா குதர்க்கமாகப் பேசுகிறாரே என்று நிமிர்ந்து நோக்கினாள் மாயா.

இல்லை...ஆனால் கோபமா, சலிப்பா, சோர்வா என்று சொல்ல முடியாத பாவம்.

'அதற்காக...அதற்காக? நாம் சேர்ந்து எத்தனை மணி நேரங்கள் இருக்கிறோம்...இதைச் சொல்ல முடியாதபடியா?'

சத்யா பதில் சொல்லவில்லை.

'ஆராய்ச்சி எத்தனை நாளைக்கு?'

'ஆராய்ச்சிக்கு மட்டும் இல்லை மாயா, ஆதித்யா மருந்து தொழிற்சாலைக்கும் நான்தானே பொறுப்பு?'

'அப்படியென்றால்?'

'இட் ஈஸ் எ ட்ரான்ஸ்ஃபர்... நிரந்தமாய் ஊட்டியில் இருக்கக் கூடும்...'

மாயாவுக்கு இது இன்னும் பெரிய ஷாக்.

ஊட்டியிலா? நிரந்தரமாகவா?

அவள் வேலை என்னாவது?

மெட்றாஸிலே சிறந்த 'இன்டீரியர் டெகரேடர்' என்று பெயர் வாங்க முயற்சிப்பதெல்லாம் என்னாவது?

'என் வேலைகளைப் பற்றி யோசிக்க வில்லையா சத்யா?'

சத்யாவின் முகத்தில் ஆச்சரியம்.

'அதற்கென்ன வந்தது?'

'நான் எவ்வளவோ பொறுப்புக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஐ ஹாவ் மை ஒன் கேரியர்...எப்படி சத்யா விடுவது?'

'உன் பொழுது போக்குக்காகவே நீ வேலை பார்க்கிறாய் அதனால் எந்த நிமிஷமும் இதை விட்டு விலகுவது உனக்கு சாத்தியம் என்றே நான் நினைத்தேன்—'

'அது எப்படி நீங்களாகவே அப்படி நினைக்கலாம்? என் எண்ணம், என் அபிப்பிராயங்கள், என் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பில்லை? அதை நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லை?'—

சத்யாவின் முகம் இறுகிப் போயிற்று.

'ஐ'ம் ஸாரி. நான் நிஜம்மாகவே இத்தனை சீரியஸாக நீ உன் வேலை விஷயத்தில் இருப்பாய் என்று நம்பவில்லை மாயா.'

ளர் உலகமெல்லாம் என்னை எத்தனை உயர்வாகப் பேசினாலும், உங்களுக்கு நான் செய்வதில் அக்கறை இல்லையா?' மாயாவின் குரல் அதிக வருத்தத்தால், ஆத்திரத்தால் கம்மியது. கண்கள் கலங்கின.

அடக்கிக் கொண்டாள்.

'இந்தத் தீர்மானத்தை மாற்றிவிடுங்கள் சத்யா—இங்கேயே உங்களுக்கு நல்ல பெயர்...இங்கே நமக்கு என்ன குறை—எந்த நிலையிலும் மனத்திருப்தியோடு இருக்க வேண்டும் என்பார்களே...உங்களுக்கு மட்டும் அந்த நியதி இல்லையா!

'ம் ஹூம்' என்பது போல் தலை ஆட்டினான் சத்யா-

'இந்த விஷயத்தில் என்னைக் கட்டாயப் படுத்தாதே மாயா. புதுவித ஆன்டிரேபிஸ் நம் நாட்டுக்கு ரொம்பத் தேவை. ஐ ஹாவ் மேட் மை மைன்ட்...

சத்யா எழுந்து விட்டான்.

'ஆல்ரைட்—என் முடிவையும் சொல்லி விடுகிறேன்... சத்யா, எனக்கு என் வேலை முக்கியம்...எல்லாவற்றையும் விட்டு விட்டு ஊட்டியில் வந்து ஈ ஓட்ட என்னால் முடியாது—நான் இங்கே இருக்கிறேன்—நீங்கள் ஊட்டியில் இருங்கள். எனக்கு வேலை ஒழிந்தால் நான் அங்கு வருகிறேன் உங்களுக்கு ஓய்வு கிடைத்தால் இங்கே வாருங்கள்...வேறு வழி இல்லை—'

மாயா தீர்மானமாகப் பேசினாள்...

19

டைகர் டார்ச் கம்பெனியில் போர்ட் மீட்டிங் அறை.

ராம்நாத் அஸோஸியேட்ஸின் சார்பில் ராம், தாமஸ், மாயா.

டைகர் டார்ச் சார்பில் மேனேஜிங் டைரக்டர், பொது ஜனத் தொடர்பு அதிகாரி, பொருளாதார நிபுணர்.

ராம்நாத் விளக்கினான்.

பிளாட்டின் நடுவில் எண்ணூறு சதுர அடியில் பெவிலியன் இருக்கும். கட்டிடத்தை செங்கல், சிமெண்ட் கொண்டு கெட்டிக் கட்டிடமாய் அமைக்கத் திட்டம் இல்லை. நவீனமாய், புது மாதிரியாகக் கட்டிடம் இருக்க வேண்டும். ஒரு பெரிய திறந்த ஹால், அந்த ஹாலின் நான்கு மூலையிலும் பிரமாண்டமான தூண் விளக்குகள். பழங்காலத்து தெரு விளக்குகள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அதே மாதிரியான தூண் விளக்குகள் ஆறு அடிக்கம்பத்திற்கு மேல், பல வர்ண அக்ரலிக் தகடுகள் கொண்டு விளக்குக் கூண்டை அமைக்க எண்ணம். ஒவ்வொரு கூண்டின் குறுக்களவு ஐந்தடியும், உயரம் எட்டடியுமாய் இருக்கும். இந்த அக்ரலிக் கூண்டினுள் சுழலும் பிரகாசமான விளக்கு. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு பெரிய லஸ்தர் விளக்கு சுடர்களாய் ஜொலிப்பது போலத் தோன்றும். இந்த நான்கு விளக்குக் கம்பங்களையும் இணைத்து நடுவில் 'டோம்' வடிவில் வெள்ளை அக்ரலிக் கூரை அதனுள்ளும் வெள்ளை ட்யூப் விளக்குகள் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு பனிக்கு போன்ற வெள்ளை மண்டபமும், அதைத் தாங்கும் வண்ண தூண்களுமே தெரிந்து, 'இது என்ன அமைப்பு?' என்ற ஆச்சரியத்தை எழுப்பும்— ஹாலினுள் ராட்சத சைஸ் டார்ச் விளக்குகள், பாட்டரி செல்கள், மற்றும் புகைப்படங்கள்.

ஜி.எம்.மின் குரல் பீறிட்டுக் கொண்டு எழுந்தது.

'மார்வலஸ்... இந்த மாதிரிப் பெவிலியனை நான் எங்குமே பார்த்ததில்லை—ராம்...கங்க்ராட்ஸ்—'

'பாராட்டுகளை மிஸஸ் சத்யகுமாரிடம் சொல்லுங்கள். ஐடியா அவருடையது...' ராம் உண்மையைச் சொன்னான்.

'ரியலி—பிரில்லியண்ட் ஐடியா மிஸஸ் சத்யகுமார்...'

'தாங்க்யூ— விளக்கு சம்பந்தப்பட்ட பெவிலியன்— அதை உணர்த்துவதாக இருக்க வேண்டும் என்றீர்கள்... அதன்படியே நான் முயற்சித்தேன்.' பூரிப்புடன் மாயா தொடர்ந்தாள்... 'ராம்—நேற்று இன்னொரு யோசனை தோன்றியது... தூண்கள் கூரை எல்லாம் ஒளி மயமாக இருக்கும் போது தரை மட்டும் 'டல்'லாக இருந்தால் எப்படி என்று யோசித்தேன். தரையில் வெள்ளை ஃபைபர் க்ளாஸ் தகடுகளைப் பொருத்தி—அதனடியிலும் விளக்குகளைக் கொடுத்தால் நன்றாயிருக்காதா? வாட்டு யூ ஸே?'

ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்து கற்பனை செய்து பார்த்தான் ராம்.

'ம்...ம்... ப்யூட்டிஃபுல்— ஆனால் ஃபைபர் க்ளாஸ் ஜனங்களின் கனத்தைத் தாங்குமா? லட்சக்கணக்கில் மக்கள் பெவிலியனுக்குள் வந்து பார்ப்பார்களே?'

'அதை விசாரித்து விட்டேன் ராம்! பம்பாயில் இந்தத் தகடுகளை உற்பத்தி செய்பவர்களிடம் போனில் பேசினேன். கனம் தாங்கும் என்கிறார்கள்—இப்போதே ஆர்டர் கொடுத்தால் ஒரு மாதத்தில் அனுப்புவதாகச் சொல்கிறார்கள்.'

மாயாவின் திறமை அங்கிருந்த அனைவருக்குமே அதிசயமாக இருந்தது.

இத்தனை சின்ன வயசில் என்ன புத்திசாலித்தனம்?

ஜி.எம் பக்கம் திரும்பி ராம் 'இந்த ஐடியா பிரமாத மானது— ஆனால் பட்ஜெட் இன்னும் ஐம்பதினாயிரம் போகக் கூடும்...' என்றான்.

ஜி.எம். பொறுமையாக நிபுணரைப் பார்த்தார்... பிறகு 'ஆல் ரைட்— பட்ஜெட்டை உயர்த்துகிறோம்... ஆனால் இரண்டு லட்சத்துக்குமேல் பைசா போகக் கூடாது...ஐ வாண்ட் யுவர் கியாரண்டி—என்றார்.

மீட்டிங் அத்துடன் முடிந்தது.

20

சத்யா இல்லாமல் இருப்பது இந்த முறை மாயாவுக்கு நன்றாய் உறைத்தது. அடிக்கடி சத்யா 'வெளியூருக்கு போய் வந்தவன்தான் என்றாலும் மிஞ்சிப் போனால் நாலு இல்லை ஐந்து நாட்கள் போவான்; அவ்வளவு தான். அதற்கு மேல் இல்லை. திருமணமானதிலிருந்து இதுதான் முதல் தடவை இத்தனை நாட்கள் பிரிந் திருப்பது.

சத்யா ஊருக்குப் போய்விட்ட இந்த மூன்று மாதங் களில் அவளும் அவனும், சில முறைகள் போனில் பேசிக் கொண்டனர். சத்யா 'ஆதித்யாவின் கெஸ்ட் ஹவுஸில்' இருக்கிறான். ஆள் அறை எல்லாம் சௌகரியமாக இருப் பதாகச் சொன்னான். வேலை தொடங்கிவிட்டதாகவும், சுவாரசியமாக இருப்பதாகவும் போன உடனேயே சொன்னான். 'ஐ ஆம் மிஸ்ஸிங் யூ மாயா' என்றும் சொன்னான்.

தம்பதிகள் நடுவில் இருந்த அன்னியோன்னியம் குறைந்துவிட்டதாக நினைத்திருந்த மாயாவுக்கு இரவு நேரங்களில் சத்யாவின் படுக்கை காலியாக இருப்பதும்

சத்யாவின் உடை அலமாரி வெறிச்சென்று இருப்பதும் அவனது மற்ற பொருட்கள் இருந்து பார்த்துப் பழகி விட்ட இடங்கள் வெறுமையாக இருப்பதும் [illegible] உறுத்தலது விநோதமாக இருந்தது.

முதல் சில நாட்கள் இப்படித் தோன்றவில்லை. இப்போது ஒரு வாரமாய் இந்த உறுத்தல் அதிகமாகவே இருக்கிறது.

'கூடவே இருந்து பழகிவிட்ட காரணத்தால் நான் சத்யா இல்லாததை உணருகிறேனா, இல்லை அவர் மேல் கொண்டுள்ள அன்பால் இந்த மனசு வருத்தமா...?' என்று தனக்குத் தானே ஓரிரு முறைகள் கேட்டுக் கொள்ளவே செய்தாள்.

அன்றைய தபாலில் அம்மாவிடமிருந்து கடிதம் வந்தி ருந்தது.

'கல்யாணமாகி மூன்று வருஷங்கள் ஆகப் போகின் றன. உன்னோடு கல்யாணமான அப்புறவுக்குப் பிள்ளை பிறந்து மாசம் எட்டாகிறது. உன்னிடமிருந்து வரும் ஒவ்வொரு கடிதத்திலும் நாங்கள் இந்த நல்ல சமாசாரத் தையே எதிர் பார்க்கிறோம். உன் மாமனாரும் மனசுக் குள் இந்த ஏக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. ஊட்டி போய் பிள்ளையுடன் தங்கிவிட்டு இங்கே வந்து ஒரு வேளை இருந்த பிறகு திருச்சிக்குப் போனார். உன் எக்ஸிபிஷன் வேலை முடிந்ததும் நீ ஊட்டிக்கு வந்து விடுவாய் என்று மாப்பிள்ளை சொன்னதாகச் சொன்னார். லட்சக் கணக்கான ரூபாய் களுக்குப் பொறுப்பு எடுத்துக்கொண்டிருக்கிறான்... அதை குறையாய் விட்டால் எப்படி?' என்றும் சொன்னாராம். மாப்பிள்ளைக்கு வேலை கெட்டி முடிகிறதாம்... நீ சட்டுப் புட்டென்று அங்கு போய்விட்டால் எங்களுக்கெல்லாம் நிம்மதியாய் இருக்கும். உன் மாமனாரும் இதையே சொன்னார். பேரனைப் பார்க்கவில்லை என்ற குறை

அவருக்கு, தாயுமானவர் சன்னிதியில் வாழைப் பழத் தார் வாங்கிக் கட்டுவதாக வேண்டிக் கொண்டிருக்கிறாராம். பேச்சுவாக்கில் சொன்னார்—'

அம்மாவின் லெட்டரைப் படித்த மாயாவுக்குச் சிரிப்பு வந்தது.

'எங்களுக்கு இல்லாத குழந்தை ஆசை இவர்களுக்கு இருப்பதைப் பாரேன்' என்று நினைத்துக் கொண்டாள்.

முதல் இரண்டு வருஷங்கள் குழந்தை வேண்டாம் என்று நினைத்து மாயா மாத்திரைகள் சாப்பிட்டாலும் கடந்த சில மாதங்களாய் நிறுத்திவிட்டாள். இருந்தும் ஒன்றும் இல்லை.

ஆமாம் குழந்தை என்பது 'சூ' மந்திரக்காளி என்று மந்திரத்தில் உண்டாகுமா என்ன?

சத்யாவுக்கு வேலை; இவளுக்கு வேலை. 'ஹோ' என்று படுக்கையில் தள்ளும் அசதி—மேலும் சத்யா சொன்னதுபோல 'குப்பனும் சுப்பனும்' வந்து இரவு பன்னிரண்டு மணி வரை கொட்டமடித்துவிட்டுப் போனால் கணவன், மனைவியாக நிம்மதியுடன் பொழுதைக் கழிக்க நேரம். எங்கே?

அம்மாவின் கடிதத்தைப் படித்ததாலோ இல்லை சத்யா இல்லாத வீட்டில் வெறுமை உறுத்தியதாலோ தெரியவில்லை? அன்று மாயாவின் கவனம் வேலையில் பொருந்தவில்லை.

தன்னால் நகர முடியாது எக்ஸிபிஷன் வேலை ஜரூராய் நடக்கிறது. சத்யாவுக்குப் போன் பண்ணி வரச் சொல்லலாமா? சத்யாவுக்கும் வேலை நெட்டி முறிக்கிறது என்று அம்மா எழுதியிருந்தாளே.

மாலையில் கோயம்புத்தூருக்குப் போன் செய்து பேசினாள் மாயா.

'இங்கே வாயேன்ம்மா... உன்னைப் பார்த்து நாளாச்சு...'

'என்னாலே அப்பாவை விட்டுட்டு எப்படி வர முடியும் மாயா? அப்பாவுக்கு க்ளினிக்கில் சில முக்கிய ஆபரேஷன் கேஸ் அட்மிட் ஆகியிருக்கிறது. தியாகுவை வேணுமென்றால் அனுப்புகிறேனே...'

அவள் தம்பி தியாகு பி.ஈ. முடித்துவிட்டான். அமெரிக்கா அல்லது கனடாவுக்கு மேல் படிப்புக்குப் போக வேண்டுமாம். ஒற்றைக் காலில் நின்று முயற்சிக்கிறான்.

தியாகு போனை வாங்கிப் பேசினான். 'ஹாய் மாயூ... நான் வரணுமா? உடனடியாக முடியாது. சில கடிதங்களை எதிர்பார்க்கிறேன். ஸோ... வெட்னஸ்டே வருகிறேன்... ஓ.கே'?'

மாயா சம்மதித்தாள்.

21

திங்கள் அன்று மாயாவுக்கு ஊர்ப்பட்ட வேலைகள்.

எக்ஸிபிஷன் கிரவுண்டுக்கு இரண்டு தடவைகள் போய் விட்டு வந்தாள். ஃபைபர் கிளாஸ் தகடுகள் பம்பாயிலிருந்து இன்னும் வரவில்லை. ஒரே மாதத்தில் அனுப்புவதாகச் சொன்னவர்கள் மாசம் இரண்டாகியும் அனுப்பவில்லை. போன் பேசினாள். அனுப்பிவிட்டார்களாம். நாளை கண்டிப்பாக வந்துவிடுமாம்.

மதிய சாப்பாட்டுக்குப் போக நேரமில்லை. எல்லோருக்குமாகச் சேர்த்து ஸாண்ட்விச்சும், காபியும் ஸ்பென்சர் கான்டீனிலிருந்து ராமநாத் வாங்கி வரச் செய்தாள்.

லஞ்ச் முடிந்ததும் வரதன் ஆபீசில் மீட்டிங்.

'நான் எதற்கு? தொழிற்கூட சம்பந்த வேலைகளை நான்தான் செய்வதில்லையே' என்று மறுத்தாள் மாயா.

'கண்டிப்பாக உன்னையும் அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் வரதன். உன்னோடு வேறு விஷயம் பேச வேண்டுமாம். பீ எ ஸ்போர்ட் மாயா...'

கிளம்பினார்கள்.

எக்ஸிபிஷன் வேலைகளைப் பற்றிய பேச்சு முடிந்ததும் 'இப்போது உங்களுக்கு ஒரு வேலை, மிஸஸ் சத்யகுமார்' என்றான் வரதன்.

'எங்கள் போர்ட் ரூமை மாற்றி அமைக்கத் திட்டம்... மற்ற டைரக்டர்கள் சம்மதித்து விட்டார்கள்—உங்களால் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியுமா? எங்கள் பட்ஜெட் நாற்பதினாயிரம் ரூபாய்—?

ப்ஷுக்கென்று எழுந்த சந்தோஷத்தை மாயாவால் திறமையுடன் மறைக்க இயலவில்லை.

இப்போதெல்லாம் அவள் இருபது பர்செண்ட் கமிஷன் வாங்கத் தொடங்கி விட்டாள். நாற்பதினாயிரம் என்றால் எட்டாயிரம் ஈஸி மணி. வலிய வந்து மடியில் விழுகிறது.

அழகாய்ச் சிரித்தாள் மாயா.

'தாங்க்யூ மிஸ்டர் வரதன். கரும்பு திங்க கூலியா?'

'ரைட்... இப்போது எனக்கு வெளியே போக வேண்டிய வேலை இருக்கிறது—மாலை ஏழு மணிக்கு ஆபீஸுக்கு வாருங்கள்; வி வில் டிஸ்கஸ் அபௌட் த டீடெயில்ஸ்'

இது இந்தத் தொழிலில் சகஜம். பகலெல்லாம் பெரிய தொழிலதிபர்கள் வேலையில் மும்முரமாய் இருப்பதால் மாலையில் ஒரு ட்ரிங்கோடோ, இல்லை இரவு உணவோடோ இந்த மாதிரி டிஸ்கஷனை சர்வ சாதாரணமாக

வைத்துக் கொள்வார்கள். மாயா ஏற்கனவே இதற்கு அனுபவப்பட்டவளாதலால் சரி என்று ஒப்புக் கொண்டாள்.

வீட்டிற்குப் போன பிறகுதான் வரதனின் அசடு வழியும் முகம் மனசில் சுத்தி நிற்க, 'அது ட்ரிங்க் பண்ணும் பேர்வழி ஆயிற்றே... ஏடாகூடமாக நடந்து கொண்டால் என்ன பண்ணுவது' என்று யோசித்தாள்.

டிஸ்கஷன் சமயத்தில் கூட யாரையாவது அழைத்துப் போவது அநாகரிகம்.

என்ன செய்யலாம்?

ஆபீஸுக்குப் போன் பண்ணினாள்.

'பாஸ்கர் இருக்கிறாரா?' என்றாள் ரிசப்ஷனிஸ்டிடம்.

'இல்லை மாயா, இப்போதுதான் வெளியே போனார்'

'சரி, தாமஸ்?'

'இருக்கிறார், கனெக்ஷன் கொடுக்கட்டுமா?'

'ம்...'

'ஹலோ—தாமஸ் ஹியர்.'

'தாமஸ், மாயா, எனக்கு உன்னால் ஒரு உபகாரம் ஆக வேண்டுமே! இன்று இரவு ஏழு மணிக்கு வரதன் ஆபீஸில் டிஸ்கஷன். அரை மணிக்குமேல் தேவைப்படாது ...எனக்கு வரதன் மேல் அவ்வளவு நம்பிக்கை இல்லை—சரியாக ஏழரை மணிக்கு அங்கு வந்து எக்ஸிபிஷன் கிரவுண்டில் அவசர வேலை என்று சொல்லி என்னை பிக் அப் செய்து கொள்ள முடியுமா?'

'ஷ்யூர்...சரியாக ஏழரை... ஓ. கே?'

மாயா கடிகாரம் ஏழு அடிக்கும்போது வரதனின் அலுவலகத்தில் இருந்தாள்.

ஆபீஸ் வெறிச்சோடி இருந்தது.

'ஐயா காத்திருக்காங்க' என்று சொல்லி ப்யூன் அழைத்துப் போனான்.

வரதன் அதற்குள் இரண்டு, மூன்று 'பெக்' அடித்திருப்பார் போலிருக்கிறது.

'கம் இன் மிஸஸ் சத்யகுமார்.'

மாயா உட்கார்ந்தாள்.

'என்ன சாப்பிடுகிறீர்கள்? ஹாட் ஆர் கோல்ட்.'

'தாங்க்யூ! ஒன்றும் வேண்டாம்...'

வரதன் கேட்கவில்லை. காலிங் பெல்லை அழுத்தி ப்யூனை அழைத்தார்.

'அம்மாவுக்கு எக்ஸ்ப்ரஸோ காபி வாங்கி வா' என்றார்.

'போர்ட் மீட்டிங் அறையைப் பார்க்கலாமா?'

எழுந்து பக்க அறையைத் திறந்து கொண்டுபோனார்கள்.

'நீங்கள் என் ஆபீஸ் முழுவதும் பார்த்ததில்லையே... இது போர்ட் ரூம்...' அது மை ரெஸ்டிங் ரூம்...' பக்கத்தில் இருந்த அறையில் இரண்டு கட்டில்கள், ப்ரிஜ், பாத்ரூம் இத்யாதி.

ஆள் சௌகரியமாய்த்தான் இருக்கிறான்.

அறைகளெல்லாம்—போர்ட் ரூம் உள்பட அலங்கரிக்கப்பட்டு நன்றாகவே இருந்தன... இன்னும் என்ன டெக்கரேஷன்?

மாயாவுக்கு சந்தேகம் எழுந்தது.

மறுபடி வரதனின் ஆபீஸ் அறைக்கே வந்தார்கள்.

'உங்கள் டைரக்டர்கள் எத்தனை பேர்? நீண்ட சதுர டேபிள் பிடிக்குமா, இல்லை வட்ட மேஜையாக

அமைக்கலாமா? 'பார்' வசதி வேண்டுமா...?' தொழில் சம்பந்தப்பட்ட கேள்விகளை மாயா கேட்டாள்.

சிலவற்றிற்கு வரதன் பதில் சொன்னார். பிறகு 'இந்த விவரங்களெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளலாமே. அறை ரெடியாவதற்கு அவசரம் ஒன்றும் இல்லை... மெதுவாய் தயார் பண்ணிக் கொடுத்தால் போதும்... யூ டோண்ட் மைண்ட் இஃப் ஐ ட்ரிங்க்?' என்றவர் இன்னொரு 'பெக்' ஊற்றிக் கொண்டார். பிறகு, எதற்குச் சொல்கிறேன் என்றால் இன்னும் டைரக்டர்கள் சம்மதம் வாங்கவில்லை... அதனால்தான்...'

சம்மதம் வாங்கவில்லையா? மதியம் பட்ஜெட் கூடச் சொன்னாரே...

'வாங்கி விடுவேன்... என்னை மீறி எவன் செயல்படுவான்? இது என் கம்பெனி, என் இஷ்டம்...'

வரதனுக்கு நல்ல போதை ஏறிவிட்டது.

மாயா மணியைப் பார்த்தாள்.

ஏழே முக்கால்.

அந்தத் தடியன் தாமஸ் என்ன பண்ணுகிறான்?

'உனக்கும், உன் கணவருக்கும் ஏதாவது தகராறா மாயா? கிளப்பில் பேசிக் கொள்கிறார்களே...'

'தடக்' கென்று சொந்த விஷயங்களைப் பேச ஆரம்பித்தார் வரதன்.

மிஸஸ் சத்யகுமார் போய், மாயா—நீங்கள் போய் நீ...

மாயாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பதில் சொல்ல மறுத்தாள்.

'குடும்பம் என்றால் சகஜம் மாயா. எனக்கும் ஒரு மனைவி இருக்கிறாள்—ராட்சசி! குழந்தைகளுக்காகச் சேர்ந்து இருக்கிறோம்—இல்லாவிட்டால் என்றோ தூக்கி எறிந்திருப்பேன். புத்தி கிடையாது. சாமர்த்தியம் கிடையாது. வாய் மட்டும் உண்டு. எல்லோரும் உன்னை மாதிரி இருக்க முடியுமா? என்ன மாயா, நான் சொல்வது?'

மணி எட்டு—இனி இங்கு இருப்பது ஆபத்து.

'வாயேன் மாயா, உடனே போய் சௌகரியமாய்ப் பேசலாம்—நீ புத்திசாலியாக இருக்கிறாய்...என் குடும்ப விஷயத்தையெல்லாம் அலசிப் பேச என் மனைவிக்கு லாயக்கில்லை...நீ புரிந்து கொள்வாய்...வாயேன்...'

எழுந்தாள் மாயா.

'அடடே...மணி எட்டு—டாக்டர் வாசலில் காருடன் காத்திருப்பார். மிஸ்டர் வரதன்—பேசினதில் கவனிக்கவே இல்லையே—' பொய் சரளமாய் வந்தது.

'டாக்டர் சத்யகுமாரா? அவர் ஊட்டியில் இல்லை—?' கணவன் பெயரைக் கேட்டதும் வரதன் சுதாரித்துக் கொள்வது புரிந்தது.

'நோ... இன்று காலையில் வந்தார். நாழியாகி விட்டது. பிறகு பார்க்கிறேன். குட்நைட் மிஸ்டர் வரதன்.'

வரதன் எழுந்து அறைக் கதவிடம் வருவதற்குள் மாயா நாலே எட்டில் வெளியே வந்து, கட்டிடத்தை விட்டு வெளியே சாலைக்கு வந்துவிட்டாள்.

டாக்ஸியை நிறுத்தி வீட்டுக்கு வந்தவளுக்கு காரணமில்லாமல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

ஐம்பது வயது கிழட்டு ராஸ்கல்—என்ன திமிர்—என்ன தைரியம்! என்னிடம்—கௌரவமான குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, கல்யாணமான என்னிடம்—வெளிப்படையாக இப்படி! ராஸ்கல்—

தாமஸ்மேல் அவளுக்குக் கண்மூடித்தனமான கோபம் எழுந்தது.

இர்ரெஸ்பான்ஸிபிள் ஜோக்கர்—இவனெல்லாம் ஒரு மனுஷனா?

வீட்டுக்கு வந்து படுக்கையில் விழுந்த கணத்தில் கணவன் சத்யாவின் நெருக்கத்தைப் பெரிதும் மாயா விரும்பினாள்.

22

தியாகு வந்து விட்டான். மாயா நான்கு நாட்களாக வீட்டில் அதிகப் பொழுதைக் கழித்தாள். தம்பியுடன் குடும்பத்துக் கதையெல்லாம் பல நாட்களுக்குப் பிறகு பேசுவது சுவாரஸியமாக இருந்தது.

வரதன் நிகழ்ச்சி நடந்த மறுநாள் காலை தாமஸ் போன் பண்ணி, 'ஸாரி மாயா—ரொம்ப ஸாரி' என்று கெஞ்சினான்.

முக்கியமான இடத்துக்குப் போக வேண்டியிருந்ததாம். அங்கு மாட்டிக் கொண்டதால் வரமுடியவில்லையாம்.

யாருக்கு காது குத்துகிறான் தாமஸ்?

எங்காவது பார்ட்டிக்குப் போயிருப்பான். குடித்து விட்டு உலகம் தெரியாமல் ஆடிக் கொண்டிருந்திருப்பான்.

27856
4346337

காலையில் ஞாபகம் வந்து பொய் சொல்லுகிறான்—ராஸ்கல்.

'அதனாலென்ன, பரவாயில்லை' என்று சொல்லிய மாயா, ஒரு வாரமாய் அவனுடன் முகம் கொடுத்துப் பேசுவதில்லை.

தம்பி தியாகு வந்து விட்டதால் அவனைக் கூட்டிக் கொண்டு எக்ஸிபிஷன் கிரவுண்டுக்குப் போனாள். வேறு இடங்களுக்கு ராம்நாத்துடனோ இல்லை பாஸ்கருடனோ சென்றாள்.

டெலிலியன் வேலைகளைப் பார்த்து தியாகு அசந்து போனான்.

மாயாவின் கற்பனை வளத்தைப் பார்த்துப் பூரித்துப் போனான்.

'உனக்கு மட்டும் எங்கேயிருந்து இந்த மூளை வந்தது மாயூ?—நம் குடும்பத்தில் யாருமே 'ஆர்ட்டிஸ்ட்' இல்லையே!'

எக்ஸிபிஷன் திறப்பதற்கு இன்னும் ஒரு மாசமே இருந்ததால் இடம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது.

'ஸோ இன்னும் ஒரு மாதத்தில் நீ ஊட்டிக்குப்போய் விடுவாய் என்று சொல்—அங்கு சத்யாவின் கெஸ்ட் ஹவுஸ் ரொம்ப அழகாயிருக்கிறது மாயூ. நீ வந்து விட்டால் வேறு தனி வீடு பார்க்கப் போவதாக சத்யா சொன்னார்... வந்த புதுசில் தியாகு இதைச் சொன்ன போது மாயா திடுக்கிட்டுப் போனாள். மாமனாரிடம் சமாளிப்பதற்காக சத்யா அப்படிச் சொல்லியிருப்பார் என்றே அவள் நம்பியிருந்தாள். 'எதற்காக எல்லாரிடமும் இந்த மாதிரி சொல்லுகிறார்? இரண்டு குடித்தனங்களுடன் நாங்கள் வாழப் போவதுதான் தீர்மானமாகி விட்டதே' என்று தனக்குத்தானே கோபத்துடன் நினைத்துக்கொண்டான்.

பின்னர் மறுபடி மறுபடி பேச்சுவாக்கில் தியாகு இதையே சொன்னபோது மாயா ஒரு தரம் சொல்லி விட்டாள்.

'சத்யா ஊட்டியிலும், நான் சென்னையிலும் இருப்பது என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். தியாகு என் வேலை என்னாவது? எனக்கு இருக்கும் பேரையும் மதிப்பையும் நீதான் பார்க்கிறாயே! எக்ஸிபிஷன் வேலை முடிந்தால் கனையாய் பத்தாயிரம் வரும்... இனிமேல் படிப்படியாய் மேலே போக வேண்டியதுதான். விஷயம் இப்படி இருக்கையில் நான் எப்படி ஊட்டிக்குப் போக முடியும்?... சத்யா எதற்காக இப்படிச் சொல்லுகிறாரோ எனக்குப் புரியவில்லை...'

'தீர்மானம் பண்ணி இருக்கிறீர்களா! இந்த வேலையை விடாமல் நீ தனியாய் மெட்ராஸில் இருப்ப தென்றா! நிஜமாகவா? மாயூ— யூ ஆர் க்ரேஸி...'

தியாகு அதற்கு மேல் அவளிடம் நின்று பேசவில்லை.

23

வெளியே போயிருந்த மாயா உள்ளே வந்தாள். ப்ரிஜ்ஜிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு ஹாலில் பத்திரிகையும் கையுமாய் சோபாவில் சாய்ந்திருந்த தியாகுவின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

'யார் இந்த ராஜேஷ் மாயூ? தினம் தினம் போன் பண்ணுகிறான்? நீ இல்லாத போது இரண்டு தடவைகள் போன் பண்ணிவிட்டான்—' நீங்கள் யார்?' என்று தடவைக்குத் த—வை என்னைக் கேட்கிறானே.'

கூள் கொட்டினாள் மாயா.

'அவன் ஒரு க்ராக் தியாகு. வரதன் க்ரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் வரதனின் பிள்ளை. படிப்பு ஏறவில்லை. அப்பா கம்பெனியில் டைரக்டர். க்ளப், குடி, அசிங்கமான பழக்கங்கள் கொண்ட வடிகட்டின அசடு...'

'அவன் எதற்கு உனக்கு போன் பண்ணுகிறான்?'

'அதான் சொன்னேனே 'க்ராக்' என்று... சும்மா போன் பண்ண வேண்டியது. லஞ்சுக்கு வா. காப்பி சாப்பிட வா என்று தொண தொணப்பான். இப்போது அவர்கள் கம்பெனி போர்ட்ரூமை நான் டெகரேட் பண்ண வேண்டும் என்று புது சாக்கு... நான் செய்ய மாட்டேன் என்று இரண்டு வாரங்கள் முன்பே சொல்லி விட்டேன்...இன்னும் வெட்கம் மானம் இல்லாமல் தொந்தரவு பண்ணுகிறான்...'

மாயாவின் குரலில் பெருமைத் தொனி கலந்திருப்பது போல தியாகுவுக்குத் தோன்றியது.

'இதில் என்ன பெருமை, மாயூ?'

'பின்னே? மாட்டேன் என்று சொல்லச் சொல்ல வலிய வந்து 'நீதான் செய்ய வேண்டும்' என்றால் பெருமை இல்லையா, தியாகு?'

'ஸோ—ஒப்புக்கொள்ளப் போகிறாயா?'

வரதனின் குடிகார முகம் ஒரு கணம் மாயாவுக்கு நினைப்பு வந்தது.

'ஊஹூம். மாட்டேன்...குடிகாரப் பைத்தியங்கள்...'

'உன் நண்பர்கள் எல்லாருமே ஒன்று வெறும் பைத்தியங்கள்; இல்லை குடிகாரப் பைத்தியங்கள்தானா?'

சட்டென்று நிமிர்ந்து தம்பியைப் பார்த்தாள் மாயா. அவன் யாரை மனசில் வைத்துக் கொண்டு பேசுகிறான் என்று புரிந்தது.

நாமன்—

குடித்துவிட்டு நாலைந்து தடவைகள் இரவு ஒன்பது மணிக்கு வந்து மாயாவிடம் 'என் வாழ்க்கை நாசமாகி விட்டது' என்று சொல்லி, பெண் பிள்ளை மாதிரி அழுவதை தியாகு பார்த்ததால் கேட்கிறானா?

'வாழ்க்கை இவனுக்கு நரகமாக இருக்கிறதா? இல்லை இவன் பிறர் வாழ்க்கையை நரகமாக்குகிறானா?' என்று அவன் போனபிறகு தியாகு நேற்று பொறுக்காமல் கேட்டான்.

'சீ, பாவம், அவனுக்கு மனசில் நிம்மதி இல்லை. தவிக்கிறான், நல்லவன்தான்' என்று மாயா பரிந்து பேசியபோது, 'மனசில் இரக்கம் இருக்க வேண்டும் மாயூ. ஆனால் இவன் மாதிரி ஆசாமிகளுக்கு கடுகத்தனை கூட பச்சாதாபம் வேண்டாம்' என்று முள் தைக்கிற மாதிரி தியாகு சொன்னான்.

அதை நினைவில் வைத்துக்கொண்டுதான் 'உன் நண்பர்களெல்லாம் குடிகாரப் பைத்தியங்கள்தானா?' என்றானோ?

24

ஒரு வாரமாய் ஊரில் இல்லாத கார்த்திக் அன்றுதான் திரும்பினான். நேரே மாயாவைப் பார்க்க வீட்டுக்கு வந்தான்.

'உன்னைப் பார்க்காவிட்டால் உலகமே ரசிப்பதில்லை மாயா' என்று என்னென்னவோ சொல்லிவிட்டு 'உனக்காக ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்; தேடித் தேடி வாங்கினேன். பிடித்திருக்கிறதா?' என்றான்.

அழகான பாந்தினி புடவை.

'வெரி நைஸ். ஆனால் இதெல்லாம் எதற்காக கார்த்திக்?'

'எனக்கு ஆசையாக இருந்தது மாயா, அதற்காக!'

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது வெளியில் போயிருந்த தியாகு வந்து விட்டான்.

அவர்களுக்கு ஒருவரை ஒருவர் ஏற்கனவே தெரியும்.

கார்த்திக்குக்கும், தியாகுவுக்கும் அவ்வளவாக ஒத்து வராது.

'என்ன சார்! கலைஞன் ஹோட்டலில் தனி ரூம் எடுத்துக்கொண்டு, ஆயிரக் கணக்கில் பணத்தை விரயம் பண்ணினால்தான் கதை எழுத வருமா? கதைக்காக அறை எடுக்கிறானா, இல்லை புட்டி குட்டிக்காகவா?' என்றும் 'பாரதப் பண்பாடு தமிழ்ப் பண்பாடு என்று வாய் கிழிப்பவர்களெல்லாம், எந்த யோக்கிதையில் இப்படிப் பேசுகிறார்கள்? எல்லாம் ஒரே ஊழல்' என்றும்....

'கதர்ச்சட்டை போட்டு வெற்றிலை மென்று கொண்டு, 'கலைக்காக நான்' என்று பேசிவிட்டால் மட்டும் ஆயிற்றா? பேசுவது ஒன்று. செய்வது ஒன்று' என்றும் கார்த்திக்கைப் பிடித்து விளாசுவான்.

'இதெல்லாம் என்ன விதண்டாவாதம் தியாகு' என மாயா அவனைத் தனிமையில் கண்டித்ததுண்டு.

'கார்த்திக் மாதிரி டபிள் ஸ்டாண்டர்டு ஆசாமிகளை எல்லாம் இப்படித்தான் மடக்கணும்' என்பான் பதிலுக்கு.

இன்றைக்குத் தியாகு வந்ததுமே ரொம்பப் பேச இடம் கொடுக்காமல் கார்த்திக் கிளம்பிவிட்டான்.

அவன் போன பிறகே மேஜையில் கிடந்த புடவையைப் பார்த்தான் தியாகு.

'ஏது புடவை?'

மாயா சொன்னாள்.

'கார்த்திக் வாங்கி வந்தான்? உனக்காக? எதற்கு?'

என்ன சொல்லுவாள் மாயா?

'ஜஸ்ட் லைக் தட்....?'

'ஜஸ்ட் லைக் தட், அவன் எதற்கு உனக்குப் புடவை வாங்கிக் கொடுக்கணும்?'

என்ன தியாகு நண்பர்கள் என்றால் பரிசு கொடுக்கக் கூடாதா? என்ன தொணக்கிறாய்?'

தியாகு நிறுத்தவில்லை.

'அவன் பெண்டாட்டிக்கும் வாங்கி வந்திருக்கிறானாமா?'

'எனக்குத் தெரியாது, நான் கேட்கவில்லை.'

'ஆமாம், இத்தனை தடவைகள் இங்கு வருகிறான். அவன் பெண்டாட்டியை ஏன் ஒரு முறைகூட அழைத்து வந்ததில்லை?'

'பாவம் தியாகு, அவளுக்கு அவ்வளவாகப் போதாதாம். கொஞ்சம் மெண்ட்டல் கேஸ்.'

'பத்து நாட்களுக்கு முன் மாக்ஸ் முல்லர் பவனில் பெயின்டிங் எக்ஸிபிஷனில் அகஸ்மாத்தாய் சந்தித்த போது கூட இருந்தாளே, அவள்தானே?'

'எஸ், சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசினாளே கவனித்தாயா?'

'மெண்ட்டல் கேஸாக எனக்குத் தோன்றவில்லையே! படிக்காத சாது பெண் மாதிரிதானே இருந்தாள். சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எங்கு பேசினாள்? உன்னை அவன் சரியாகப் ப்ரெயின் வாஷ் பண்ணி இருக்கான்.'

'......'

'மனைவியை கவனிப்பது கிடையாது. மெண்ட்டல் கேஸ் என்று வெளியே சொல்வது. இன்னொருத்தன்

பெண்டாட்டிக்கு புடவை வாங்கி வருவது. பாரதப் பண்பாட்டை கதை எழுதுபவனின் புத்தி எத்தனை வக்ரமாக இருக்கிறது, பார்த்தாயா, மாயூ?'

தியாகுவைத் தம்பியாக சின்னப் பையனாக நினைத்துப் பழகி இருந்த மாயாவுக்கு அவன் இத்தனை கவனிப்புடன் கண்டிப்பாய்ப் பேசுவது அதிர்ச்சியைத் தந்தது.

'கார்த்திக்கின் பார்வையே சரியாக இல்லை மாயூ' எக்ஸ்ரே கண்கள், உடைகளை கண்களால் உரித்துவிட்டு மனதால் ஆளைத் தின்பவன் — இவனெல்லாம் ஒரு ஆணா?'

சத்யா ஒரு நாள்கூட அவள் மனம் நோகும்படி பேசினதில்லை, 'உன் பொறுப்பு உனக்குத் தெரியாதா?' என்று சொல்லுவார்; அவ்வளவுதான்.

இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்?

'கார்த்திக், தாமஸ், ராஜேஷ், இன்னும் இவர்களைப் போன்ற அயோக்கிய ராஸ்கல்கள் பிழைப்பதே உன் போன்ற பெண்கள் காட்டும் தப்பான பரிவால்தான், தெரியுமா? இவன் எதற்கு உனக்குப் புடவை வாங்கித் தர வேண்டும்? நீயும் ஏற்றுக் கொள்கிறாயே மாயூ உனக்கென்னாயிற்று? ஐ காண்ட் அண்டர்ஸ்டாண்ட் ஆல் திஸ்... சத்யாவைப் போல புத்தியும், அவரைப் போல மாசம் ஐயாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் திறமையும், உன் மேல் சத்யா வைத்திருக்கும் கண்மூடித்தனமான காதலும் எத்தனை ஆண்களுக்கு இருக்கிறது. நான் மட்டும் சத்யாவின் இடத்தில் இருந்தால் ஒரு நிமிஷம் என் மனைவியை விட்டுப் பிரிந்து இருக்க சம்மதிக்க மாட்டேன். சத்யா ஏ ஜெண்ட்டில்மேன். உன் மனசு நோகக் கூடாது என்பதற்காகத் தன் விருப்பு, வெறுப்புகளை அடக்கிக் கொள்கிறார். விட்டுக் கொடுக்கிறார். உனக்கு என்று உலகம் புரியும்? ஏன்? சத்யாவையே என்று புரியும் மாயூ?'

'நிறுத்துடா! என்னமோ எனக்குத் தெரியாததை இவன் சொல்ல வந்துவிட்டான். ஐ கான் மானேஜ் மை ஓன் மாட்டர்ஸ்... சும்மா இரு...'

மாயா கத்தினாள்

அன்று இரவு முழுவதும் மாயா தூங்கவேயில்லை.

காம்போஸ் மாத்திரைகள் இரண்டை விழுங்கிவிட்டு அவள் உறங்கத் தொடங்கினபோது மணி காலை மூன்றாகி விட்டது.

25

தூங்கி எழுந்த மாயாவின் கண்கள் 'புஸ்' ஸென்று உப்பி இருந்தன. மண்டை கனத்தது.

பகல் பன்னிரண்டு மணிக்கு மெட்ராஸ் ஷிப்பிங் கம்பெனி சுதர்ஸனோடு மதிய உணவுக்குப் போக வேண்டும்.

'நண்பன் ஒருவன் மூன்று நட்சத்திர ஹோட்டல் கட்டுகிறான். இன்டீரியர் டெகரேஷனை உங்களுக்கு வாங்கித் தருகிறேன்' என்று சொல்லி இருந்தார்.

ஹோட்டல் சோழாவில் மேஜை ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது.

சுதர்ஸனுடன் அவர் நண்பர் —

சாப்பிட்டுக்கொண்டே பேசினார்கள். பம்பாயிலிருந்து இரண்டு டெகரேட்டர்கள் வந்து பேசிவிட்டுப் போயிருக்கிறார்களாம். இந்த வாரக் கடைசிக்குள் முடிவு தெரிந்து விடுமாம். அவர்கள் ரொம்ப அதிகமாகப் பணம் கேட்கிறார்களாம், முப்பத்தைந்து பர்செண்ட் கமிஷன். இது அதிகம் என்று எண்ணுவதால் அந்தப் பேச்சு வார்த்தைகள் முறிந்து போகலாமாம்.

மாயாவின் ஊதியம் மலிவாக இருப்பதாலும், அவன் வேலை தரமாக அமையும் என்பதாலும் இவளுக்கே கொடுக்க ஏற்பாடு பண்ணுவதாக நண்பர் சொன்னார்.

சாப்பாடு ஆகி டெஸர்ட் வந்தபோது 'இன்று மாலை என் மனைவி, நான், இவர் எல்லோருமாக மஹாபலிபுரம் போகிறோம். மிஸ்டர் சத்யகுமார் ஊரில் இல்லையே' உங்களாலும் வரமுடியுமா? இரவு திரும்பி விடலாம் என்றார் சுதர்ஸன்.

சுதர்ஸனுக்கு அவர் மனைவி.

நண்பருக்கு தானா?

'கம்பெனி' கொடுப்பது இன்றைய நாகரிக உலகில் ரொம்ப சர்வசாதாரணமானது என்று மாயாவுக்குத் தெரியும்.

என்றாலும் யாரைக் கேட்பது, என்ற நியதிகூடவா இந்த கோடீஸ்வரர்களுக்கு மறந்துவிடும்?

'உன் நண்பர்களெல்லாம் குடிகாரப் பைத்தியக்காரர்கள் தானா? உனக்கு என்று உலகம் புரியும் மாயூ?'

முதல் நாள் தியாகு கேட்டது ஞாபகம் வந்தது.

'ஐ ஆம் சாரி, எனக்கு வேறு வேலை இருக்கிறது' என்றாள் மெதுவாக.

சுதர்ஸன், அவர் நண்பரின் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

லஞ்ச் முடிந்ததும் மாயா நேராக வீட்டுக்குப் போனாள்! மனசு சரியில்லை.

தியாகு வெளியே போயிருந்தான். அதுவும் நல்லதுக்குத்தான். இல்லாவிட்டால் மாயாவின் வாயைக் கிண்டி, விஷயத்தை வரவழைத்த பிறகு ஊசி குத்துகிற மாதிரி ஏதாவது சொல்லுவான்.

படுக்கையில் போய் படுத்தாள்.

சத்தியாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

போனால் என்ன?

மனசு நொந்திருப்பதற்கு ஒரு இடமாறுதல் தெம்பளிக்கலாமே!

எக்ஸிபிஷன் வேலையில் இவள் பங்கு முடிந்து விட்டது. இன்னும் சில்லறை வேலைகள் தாம்—வேறு வெளி வேலைகள் ஒன்றையும் இன்னும் தொடங்கவில்லை.

போனால் என்ன?

நான்கு மணி அளவிற்கு ராம்நாத் அஸோஸியேட்ஸ் ஆபீஸுக்கு வந்தாள் மாயா.

ராம், தாமஸ், பாஸ்கர் மூவருமே இருந்தார்கள்.

சுற்றி வளைக்காமல் பேசினாள்.

'எனக்கு அவசரமாய் ஊட்டி போக வேண்டிய வேலை வந்திருக்கிறது ராம். என் வேலைகள் ரொம்ப பாக்கி இல்லை—ப்ளீஸ் எனக்காக நீங்கள் பார்த்துக் கொள்ளுங்களேன்—'

வழக்கமாய் குறும்பு கூத்தாட சிரித்து, தலையைச் சாய்த்துத் தோளைக் குலுக்கிக் கலகலப்பாய் பேசும் மாயா அன்று அமைதியுடன் பேசினாள்.

'சத்தியாவிற்கு ஒன்றுமில்லையே—மாயா? ஏன் இந்த திடீர் பயணம்?'

'சத்யாவிற்கு ஒன்றுமில்லை. குடும்ப சமாசாரம்; நான் அவசியம் போக வேண்டும்—ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்.'

அவர்கள் எவ்வளவோ கேட்டும் குறிப்பிட்ட காரணம் ஒன்றையும் சொல்லாமல் அடம் பிடிக்கவே, வேறு வழியில்லாமல் ராம் ஒப்புக்கொண்டான்.

ஆனால் 'கடைசி நிமிஷ ஆலோசனை ஏதாவது தேவைப்படும்—என்ன மாயா? பொறுப்பில்லாமல்?' என்று அவன் சொல்லிக் காட்டவே செய்தான்.

அவன் கவலை அவனுக்கு. மாயா பதில் சொல்லாமல் கிளம்பி விட்டாள்.

மறுநாள் கோயமுத்தூருக்கு பிளேனில் போய் அங்கே ஒருநாள் தங்கிவிட்டு ஊட்டி போகப் போவதாக மாலை தியாகுவிடம் சொன்னாள். அவன் ஆச்சரியமும், சந்தோஷமும் வெளிப்படையாகவே தெரிந்தது.

அன்றுமாலை வீட்டுக்கு வருவதாக தாமஸ், கார்த்திக், பாஸ்கர் இவர்கள் போன் பண்ணின போதுதான் வீட்டில் இல்லை என்று மணியை விட்டுச் சொல்லச் சொன்னாள் மாயா.

அன்று இரவும் மாயாவுக்கு சிவராத்திரியாக அமைந்தது.

நான் செய்வது சரியா?

எதை எதிர்பார்த்து ஊட்டிக்குப் புறப்படுகிறேன்?

பத்து நாட்கள் அங்கிருப்பதற்குள் எனக்கு இருப்புக் கொள்ளாமல் போய் விட்டால் என்ன செய்வது?

சத்யாவுக்கும் எனக்கும் ஒத்து வருமா?

என் மேலும், என் விருப்பு வெறுப்புகளிலும் ஈடுபாடு இல்லாத சத்யாவுடன் என்னால் நிம்மதியாய் வாழ முடியுமா?

ஒரு சமயம் பாஸ்கர் 'உன்னையும் சத்யாவையும் ஜோடி சேர்த்த கடவுள் கருணை அற்றவன்' என்றானே, அது நிஜமா?

எதை எதிர்பார்த்துக்கொண்டு இத்தனையும் விட்டு விட்டு சத்யாவிடம் போகிறேன்?

எனக்குக் கிடைக்கும் பாராட்டுரைகள், புகழ் மாலைகள், பணம் எல்லாவற்றையும் விடுத்து நான் புறப்படுவது சரிதானா?

மாயா மண்டையை உடைத்துக் கொண்டாள்.

எதுவானாலும் சரி, இப்போது ஊட்டிக்குப் போவது சரிப்பட்டு வந்தால், அங்கு ஒரு மாதம், இங்கு ஒரு மாதம் என்று ஓடி ஓடி குடும்பத்தையும் பார்த்துக் கொள்வது, வேலையிலும் ஈடுபாட்டுடன் இருப்பது—

சரிப்பட்டு வராவிட்டால்?

தாமஸ் ஒரு சமயம் சொன்னதுபோல விவாகரத்து தான் இதற்கெல்லாம் விடிவா?

26

செல்வம் மகளையும், மகனையும் அழைக்க ஏர் போர்ட்டுக்கு வந்திருந்தாள்.

மாயா அம்மாவைப் பார்த்து ஒரு வருஷம் ஆகப் போகிறது. நினைத்தால் புறப்பட்டு வரக்கூடிய தூரம் தான்; ஆனால் அப்பாவை விட்டுவிட்டு அம்மா வர மாட்டாள். அப்பாவுக்கும் அது பிடிக்காது; அப்பாவுக்கு கிளினிக்கில் முக்கிய ஆபரேஷன் அது, இது என்று ஏதாவது இருந்து கொண்டே இருக்கும்.

மாயா கல்யாணமாகி சென்னையில் குடித்தனம் போட்ட பிறகு அம்மா அப்பா இரண்டு முறைகளே அங்கு வந்திருக்கிறார்கள். முதலில் ஒரு தடவை நான்கு நாட்கள். பிற்பாடு மாயா வேலைக்குப் போய் பேர் எடுக்க ஆரம்பித்த பிறகு ஒரு தடவை இரண்டு நாட்கள்.

மாயா தன் பங்குக்கு ஒரே ஒரு முறைதான் வந்திருக்கிறாள் தலைத் தீபாவளிக்கு.

வருஷா வருஷம் மாமியார் திவசத்திற்கு திருச்சிக்குப் போவார்கள்; அது தப்பாது. மற்றபடி இரண்டு பேருக்குமே வேலைகள் அதிகமாக இருந்ததால் எங்கும் போக முடியவே இல்லை.

பல நாள் இடைவெளிக்குப் பிறகு அம்மாவைப் பார்த்தது மாயாவுக்கு சந்தோஷமாக இருந்தது. செல்லத்துக்கு வயசு நாற்பத்தி இரண்டு. அவளுக்குப் பதினெட்டு வயசில் மாயா பிறந்தாளாம். இன்னும் அழகு குன்றாமல் ஒரு தலைமுடி நரைக்காமல் மாயாவுக்கு அக்கா என்று சொல்லும்படி செல்லம் இளமையாயிருந்தாள்.

வீட்டு வாசலில் கார் நின்றதுமே அப்பா உள்ளே இருந்து வந்துவிட்டார்.

மகள் வருகிறாள் என்று கிளினிக்கிலிருந்து முன்னதாகவே வந்து விட்டதாகச் சொன்னார்.

'வா மாயா'—என்று வரவேற்ற அப்பாவின் கண்களில் அவள் முதுகில் குட்டையாய் நைலான் கயிறு போட்டுக் கட்டியிருந்த முடிதான் தென்பட்டது.

'என்ன மாயா இது? தலை மயிரை வெட்டிக் கொண்டாயா என்ன?'

அம்மா ஏர்போர்ட்டிலேயே பார்த்துக் கேட்ட விஷயம் தான்.

'இது தானம்மா நாகரிகம், நான் நாலு இடத்துக்குப் போக வேண்டியவள். சாட்டை மாதிரி பின்னித் தொங்க விட்டுக் கொண்டு, போனால் எப்படி? கொண்டை போடுவதும் கஷ்டமாய் இருந்தது—அதனால் இப்படி—'

அம்மாவுக்குத் தைரியமாய் மாயா பதில் சொல்லி விட்டாள். அப்பாவிடம் அப்படி முடியவில்லை.

'சத்யாவுக்குப் பிடித்தது— அதனால் தானப்பா...

அப்பா மாப்பிள்ளையை ஒன்றும் சொல்லமாட்டார் என்று தெரியும். போன வருசத்தில் ஒருநாள் தலைமுடியை சாண் நீளத்துக்கு வெட்டி கொத்தமல்லிக்கட்டு மாதிரி காட்டிக் கொண்டு வந்து சத்யாவின் முன்னின்றது ஞாபகத்துக்கு வந்தது.

'எப்படி சத்யா?'

சத்யா முகம் சுளித்தான்.

'உனக்கு லாங் ஹேர்? நன்றாக இருந்ததே மாயா' இந்தப் பதில் அவள் எதிர்பார்த்தது தான்.

அலுவலகத்தில் எல்லோரும் ஒட்டு மொத்தமாய் 'இந்த ஹேர் ஸ்டைல் உனக்கு ஜோராக இருக்கிறது' என்று ஏற்கனவே பாராட்டிவிட்டதால் அன்று அவள் சத்யாவின் கூற்றைப் பெரிது படுத்தவில்லை.

கோபாலன் மேற்கொண்டு பேசவில்லை.

மாயாவின் பெருமைகளை, அவள் திறமைகளைத் தியாகு மணிக்கணக்கில் சொன்னான்.

அப்பா, அம்மா இருவருக்குமே ஏகப் பெருமை.

'எக்ஸிபிஷனின் பெவிலியன்களில் எது சிறந்ததோ அதற்குப் பரிசு உண்டும்மா... அந்தப் பரிசு கண்டிப்பாய் மாயாவின் டைகர் டார்ச் பெவிலியனுக்குத்தான் என்று பேசிக் கொள்கிறார்கள்.'

தியாகு இவ்வளவெல்லாம் கவனித்திருக்கிறானா?

தடியன்—சும்மா சும்மா என்னை உருட்டிக்கொண்டும் அதட்டிக்கொண்டும் இருக்கத்தான் தெரியும் என்று நினைத்தால்—இத்தனை பெருமையாய்ப் பேசுகிறானே!

மூன்று வருஷங்கள் இன்னும் ஆகவில்லை. ஆனால் அன்றைய மாயாவுக்கும் இன்றைய மாயாவுக்கும் எத்தனை வித்தியாசங்கள்!

அறைக்கு அறை தான் பண்ணி மாட்டியிருந்த ஓவியங்களைப் பரிசீலித்தாள்.

சிலவற்றைப் பார்க்கும்போது இன்னும் நன்றாக பண்ணி இருக்கலாம் என்றும்—இவ்வளவு சிறப்பாகவா என்னால் பெயின்ட் பண்ண முடியும் என்று மீதியைப் பார்த்ததும் நினைத்துக் கொண்டாள்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு நிதானமாய் எண்ணெய் தேய்த்துக் குளித்து மதியம் பூராவும் தூங்கினாள்.

மாலையில் பழைய சிநேகிதி, உறவுக்காரர்கள் எல்லாம் மாயா வந்திருப்பது கேட்டு வீட்டுக்கு வந்து விடவே பொழுது போவதே தெரியவில்லை.

மறுநாள் பிற்பகலில் கிளம்பி ஊட்டிக்கு காரில் தியாகு கொண்டு விடுவதாக ஏற்பாடு.

'வந்ததுதான் வந்தாய்; நான்கு நாட்களாவது இருந்து விட்டுப் போகக் கூடாதா?' என்றாள் அத்தை.

'மாயா எப்போது வருவாள் என்று மாப்பிள்ளை தவிக்கிறார்—நீ என்னக்கா? ஊட்டி எங்கே?—இதோ அறுபது மைலில்...இனிமேல் மாயா அங்குதானே இருக்கப் போகிறாள். நினைத்தால் போகலாம், பார்க்கலாம், அப்புறம் என்ன?'

இவர்கள் எல்லோருமே தான் ஒரு வழியாகக் குடித்தனத்தை மாற்றிக்கொண்டு ஊட்டிக்கு வந்துவிட்டதாகப் பேசுவது, மாயாவுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

எல்லாம் சத்யாவால்—அவர் தானே இந்த மாதிரி ஒரு தவறான செதியைச் சொல்லி இருக்கிறார்?

பளிச்சென்று 'நாங்கள் இரண்டு குடித்தனம் போடப் போகிறோம். இதில் என்ன தவறு?' என்று கேட்டிருந்தால் என்ன?

பூட்டி வைத்திருந்த மாயாவின் பழைய அறையை அம்மா அவளுக்காக சுத்தம் பண்ணித் தயார் செய்திருந்தாள்.

மாயா படுக்கப்போன பிறகு அம்மா வந்து அவள் படுக்கையில் உட்கார்ந்தாள்.

'உன் அப்பாவுக்கு இன்றுதான் முகத்தில் சிரிப்பு வந்திருக்கிறது மாயா.'

'ஏம்மா, என்ன விஷயம்?'

'அப்பா குணம்தான் உனக்குத் தெரியுமே. பெண்கள் எப்படி இருக்க வேணும் என்று நினைப்பவர் என்பதும் உனக்குத் தெரியுமே. நீ வேலை பார்த்ததில் அப்பாவுக்கு அவ்வளவாய் இஷ்டம் இல்லை. அதிலும் சத்யா ஊட்டிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகியும் நீ வேலை, வேலை என்று இருந்தது அவருக்கு வருத்தம். மாப்பிள்ளையைத் தவிக்க விட்டுவிட்டு என்ன வேலை? என்று என்னைக் கோபிப்பார். நான் என்ன பண்ணட்டும்! 'மாப்பிள்ளை அவளுக்கு ரொம்ப இடம் கொடுத்திருக்கிறார்; கூட வா என்று அழைத்துப்போக வேண்டாமோ' என்று புலம்புவார். நேற்று உன்னிடமிருந்து ட்ரங்கால் வந்ததிலிருந்து அப்பாவின் கோபம் போன இடம் தெரியலை.'

மாயா என்ன சொல்லுவாள்? மூன்று வருஷங்களாக சுதந்திரப் பறவையாக இருந்தது என்னவோ நிஜம் தான். ஆனாலும் பெற்றோர்களுக்கு அடங்கின பெண்ணாய் பல வருஷங்கள் வாழ்ந்துவிட்ட பழக்கத்தாலும், சுபாவமாக தூக்கி எறிந்து பேசத் தெரியாததாலும் பேசாமல் இருந்தாள்.

அம்மா அந்தரங்கக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

'குழந்தை வேண்டாம் என்று இருக்கிறீர்களா மாயா?'

ஹூம்... என்று தலை ஆட்டினாள்.

'பின்னே ஏன் இன்னும் வரலை?'

அம்மா தீவிரமாக முகத்தை வைத்துக் கேட்டது இவளுக்குச் சிரிப்பு வந்தது.

'தெரியலையே... முதல் இரண்டு வருஷங்கள் வேண்டாம் என்றுதான் இருந்தோம். இப்போ ஏழு எட்டு மாசமாய் கட்டுப்பாடு ஒன்றும் இல்லை....'

'எல்லாம் வரும்... கவலைப்படாதே... நம்ம வீட்டில் குழந்தை இல்லாதவர்களே கிடையாது... கொஞ்சம் தாமதம் ஆகிறது அவ்வளவுதான்.'

'கவலையா? எனக்கா? குழந்தை வேண்டும் என்றே நினைக்காத மாயாவுக்கு மறுபடி சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

அம்மா போன பிறகு மாயா ரொம்ப நேரத்துக்கு யோசனை பண்ணினாள்.

என் எதிர்காலம் எப்படி இருக்கும்?

சரியான வழியில் போகிறேனா?

எக்ஸிபிஷன் திறக்கப் போகும் சமயத்தில் அங்கு இல்லாவிட்டால் எப்படி?

தியாகு சொன்னது போல சிறந்த ஓவியனுக்கான பரிசு கிடைத்தால் இந்தியா முழுவதும் பேர் பரவும். ஏன்? வெளிநாடுகளில் கூட வேலை செய்ய அழைப்பு வரலாம்.

ஒரு வழியாய் தூங்கிப் போன மாயா, தன்னை அணைத்து லேசாய் உதடுகளில் முத்தமிடும் உணர்ச்சியால் திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

சத்யா!

கட்டிலில் அவளருகில் உட்கார்ந்து தோள்களை அணைத்துக் குனிந்து மீண்டும் முத்தமிட்டான்.

சத்யாவா?—இங்கு எப்படி?

மூன்று மாசங்களாய் பார்க்காமல் இருந்த கணவனை எதிர்பார்க்காமல் கண்டபோது அவளுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

'சத்யா... நீங்கள் எங்கே இங்கு?'

சத்யா பதில் சொல்லவில்லை.

'ஐ மிஸ்ட் யூ மாயா' என்றவன் குனிந்து அவளை மறுபடி முத்தமிட்டு விட்டு 'ஐ லவ் யூ' என்றான்.

அப்போது மணி காலை ஆறு.

மாயாவைப் பார்க்க மதியம் வரைகூட காத்திருக்கப் பொறுமை இல்லாமல், ஊட்டியின் குளிரில் மூன்று மணிக்கு எழுந்து தானே காரை ஓட்டிக் கொண்டு கோயமுத்தூருக்கு வந்திருக்கிறான்.

'இந்த இருட்டில், குளிரில்... எதற்காக சத்யா சிரமப்பட்டீர்கள்?

'சிரமமா? எனக்கா? உன்னைப் பார்க்க வருவதற்கா?' சத்யாவின் அன்பின் தீவிரம் மனசுக்குள் புகுந்து குறுகுறுக்க அவனை இறுக அணைத்துக் கொண்டாள் மாயா.

'சத்யாவை இத்தனை 'மிஸ்' பண்ணி இருக்கிறேனே என்ற எண்ணம் அவளுக்கே ஆச்சரியமாக இருந்ததால் கணவரைப் பார்த்தவுடன் முதல் கேள்வியாய் 'ஏன் இரண்டு குடித்தன தீர்மானத்தைப் பற்றி ஒருத்தரிடமும் சொல்லாமல் மழுப்புகிறீர்கள்?' என்று கேட்க வேண்டும் என்று நினைத்திருப்பது மாயாவுக்கே மறந்து போயிற்று.

27

மதியம் சத்யாவுக்கு ஊட்டியில் வேலை இருந்ததால் இருவரும் காலைச் சிற்றுண்டி முடிந்ததும் காரில் கிளம்பினார்கள்.

கார் கிளம்பும்போது "புறை வேளையில் காபி மாதிரி நான் எதற்கு என்றுதானே நீங்களே பெண்டாட்டியை அழைக்க வந்து விட்டீர்கள்?" என தியாகு கேலி பண்ணினான்.

மேட்டுப் பாளையத்தைத் தாண்டியதும் இயற்கைதன் அழகையெல்லாம் காட்டி நர்த்தனமாடத் தொடங்கியது.

பாக்குமரத் தோப்புகள், வாழைத் தோட்டங்கள் வானுயர்ந்த மரங்கள்—பச்சை, பச்சை மரகதப் பச்சை!

நீலவானம்—சந்தடி இல்லாத காலை.

மாயாவுக்கு இதெல்லாம் புதுமையான அனுபவங்களாக இருந்தன.

இந்த மூன்று மாசத்தில் சத்யா இளைத்துச் சிவந்திருந்தான்.

ஆனால் முகத்தில் சின்னப் பையன் மாதிரி துறுதுறுப்பு.

தள்ளி உட்கார்ந்திருந்த மாயாவின் இடுப்பில் கையை விட்டு அணைத்து தன்னோடு சேர்த்துக் கொண்டு வண்டியை வலது கையால் ஓட்டினான்.

ஆங்காங்கு நிறுத்தி அவளை முத்தமிட்டு வம்படித்தான்.

சத்யாவா? அமைதியான சத்யாவா இப்படி கல்லூரி மாணவன் போல குறும்புடன் நடந்து கொள்கிறார்?

மணமான இந்த ஆண்டுகளில் இந்தக் கோணத்திலிருந்து சத்யாவைக் கண்டவளில்லை மாயா.

சத்யாவின் தவிப்பும் வெளிப்படையாகத் தெரிந்த அன்பும் அவளுக்கு இன்பமாக இருந்தது.

'யாராவது பார்க்கப் போகிறார்கள் சத்யா. இது என்ன நடு ரோட்டில்...?' அவள் விளையாட்டாய் தடுத்தாள்

'பார்த்தால் என்ன? என் பெண்டாட்டியை நான் முத்தமிடுகிறேன் எவனுக்கென்ன?'

'ஊட்டிக் காற்றில் என்ன கலந்து இருக்கிறது சத்யா? மெட்ராஸில் நீங்கள் இவ்வளவு அன்பாக இருந்ததில்லையே!'

மாயா தன் ஆச்சரியத்தை வெளியிட்டு விட்டாள்.

கார் ஏற்றத்தில் ஏற முக்கியது. சத்யா கியரை மாற்றிச் சப்தம் போட்டு வண்டியை மேட்டில் ஏற்றினான்.

'மெட்ராஸிலா? இந்த மாதிரியா? அதற்கெல்லாம் ஏது நேரம்? நாம் தனிமையில் இருந்த நாட்களை தேடித் தேடிப் பார்க்கிறேன். ம்ஹூம், கிடைக்கவில்லை.'

வாஸ்தவம் தானே. முதல் சில நாட்கள் ஹோட்டலில்; பிறகு வீடு பார்த்து அதில் செட்டில் பண்ணுவதில்; அப்புறம் சத்யாவின் அதிகரித்த வேலைகளில். பிறகு மாயாவின் வேலையில்—

பெசன்ட் நகர் வீட்டுக்கு வந்த புதிதில் பீச்சில் நடப்பார்கள். இருட்டாக இருந்து, தனிமை கிடைத்தால் சத்யா வம்பு பண்ணுவதுண்டு. ஆனால் கணவன் மனைவிக்குள் கொஞ்சிக் கொள்வதோ, ஏன் சாதாரணமாய் பேசிக் கொள்வதோ, நாளடைவில் இருக்கவே இல்லையே!

சத்யா பேசினதின் அர்த்தம் மௌனமாய் யோசித்துப் பார்க்கும் போது மாயாவுக்குப் புரிந்தது.

என்றாலும் வேலையையே முழுப் பொறுப்பாக ஒப்புக் கொள்ள அவள் தயாரில்லை மனசில் ஆசை இருந்தால் வழி இல்லாமலா போகும்? மனுஷன் அப்போது இயந்திரமாய் இருந்தார். மூன்று மாதப் பிரிவு... மலைவாசஸ்தலத்தில் குளுமை-எல்லாமாகச்சேர்ந்து இப்போது என்னிடம் இழைகிறாரோ? ஒரு வாரம் போனால் இந்தப் புதுமை, கொஞ்சல், எல்லாம் அவ்வளவுதானோ?

மாயாவுக்கு சந்தேகம் நிறையவே இருந்தது.

28

இல்லை; மாயா தப்புக் கணக்குப் போட்டு விட்டாள் சத்யா அப்படியே புதிதாய் கல்யாணமானவனின் சுறுசுறுப்புடனேயே தொடர்ந்து இருந்தான். இது ஏன் என்று தான் மாயாவுக்குப் புரியவில்லை. அதே சத்யா—அதே நான்—இந்த அன்னியோன்னியம் ஏன் சென்னையில் இல்லை?

ஊட்டிக்கு வந்த முதல் ஒரு வாரம் கம்பெனியின் கெஸ்ட் ஹவுஸில் இருந்தார்கள். அங்கிருந்து 'ஆதித்யா ட்ரக் பாக்டரி' கூப்பிடும் தொலைவு. நினைத்து நினைத்து வீட்டுக்கு வந்து விடுவான் சத்யா. குறிப்பிட்ட நேரம் என்று இல்லை.

ஒரு சமயம் பொறுக்க முடியாமல் மாயா கேட்டு விட்டாள்—

'இப்படி அடிக்கடி வீட்டுக்கு வந்தால் ஆராய்ச்சி என்னாவது சத்யா?'

சத்யா குறும்பாய்ப் புன்னகைத்தான்.

'கோவித்தாதான்— நீ வீட்டில் இருக்கும்போது ஆராய்ச்சியாவது கிராய்ச்சியாவது?'

என்னாயிற்று சத்யாவுக்கு?

பிறகுதான் தெரிந்தது, ஆராய்ச்சியின் முதல் கட்டம் வெற்றிகரமாய் முடிந்தது. முடிவுகளை தன் அமெரிக்க புரொபஸருக்கு சத்யா அனுப்பி இருக்கிறானாம். அவர் பதில் கிடைத்த பிறகு இரண்டாம் கட்டத்தை தொடங்குவானாம்.

இந்த ஓய்வு கிடைப்பதற்கும் மாயா வருகிறேன் என்று போன் பண்ணினதற்கும் சரியாக இருந்ததால் ஐயாவுக்கு குஷி.

மாயாவுக்குக் கேட்டதும் கோபம் வந்தது.

'உங்களுக்கு ஓய்வென்றால் நீங்கள் மெட்ராஸுக்கு வந்திருக்கக்கூடாதா? எனக்குஎக்ஸிபிஷன் சமயமாயிற்றே சத்யா. சேர்ந்திருக்க வேண்டுமென்றால் அப்படிச் செய்திருக்கலாம் இல்லையா?'

'மெட்ரஸுக்கு வரலாம்... ஆனால் இந்த மாதிரி அங்கே சேர்ந்திருக்க முடியுமா—மாயா?'

இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்டு மாயாவின் பலவீனத்தைத் தொட்டு வெற்றி பெற்று விடுகிறான் சத்யா.

இப்படித்தான்—இரண்டு நாட்களுக்கு முன் இவனின் கட்டுக்கடங்காத ஆசையையுணர்ந்து அனுபவித்த மாயா கேட்டாள்— 'என்னை இவ்வளவு மிஸ் பண்ணுவதாகச் சொல்பவர் ஏன் இந்த மூன்று மாதத்தில் ஒரு தடவைகூட அங்கு வரவில்லை?'

சத்யாவின் தோளில் தலையை வைத்துப் படுத்திருந்த மாயா தலையைச் சற்றே நிமிர்த்திக் கணவனைக் கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை

'லொய் சத்யா?'

'வந்திருக்கலாம்... ஆனால் இப்படி இருந்திருக்க முடியுமா? குப்பன், சுப்பன்— ப்ரெண்ட்ஸ்... நமக்கு எங்கே நேரம்?'

சத்யா இந்தக் குப்பனையும், சுப்பனையும் விட மாட்டாரா?

அப்படி என்ன சினேகிதர்கள் இருபத்தி நாலு மணி நேரமுமா வீட்டில் கூடாரமடித்திருந்தார்கள்?

இல்லையே?

மிஞ்சிப் போனால் மாலை ஏழிலிருந்து இரவு பதினொன்று; ஆறு பன்னிரண்டு வரை. அவ்வளவு தானே...

மற்ற சமயத்தில் நாங்கள் என்ன பண்ணினோம் என்று யோசித்தாள் மாயா.

காலை ஏழுக்கு முன் எழுந்திருக்கும் வழக்கம் போய் விட்டது.

எழுந்து குளித்து ரெடியாகி ப்ரேக்ஃபாஸ்ட் சாப்பிட எட்டரை ஆகிவிடும். நடு நடுவில் போன்.

இதற்குள் சத்யா தொழிற்சாலை போய் விடுவான்.

இவள் ஆபீஸ், ஸைட், அல்லது புது பார்ட்டியுடன் டிஸ்கஷன்.

மாலை வீடு திரும்பினால் நண்பர் கூட்டம். அல்லது பார்ட்டிகள், கேளிக்கைகள்.

பகலில் அலைந்ததால் பாதி சமயம் இரவில் தலைவலி

சத்யா சொல்வது சரிதானோ?

ஏன் எனக்கு இதெல்லாம் மெட்ராஸில் தோன்றவில்லை.

29

அன்று மாயாவுக்குப் பிறந்த நாள். பிறந்த நாளுக்கு கணவனுடன் இருக்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டுக் கொண்டு மாயா வரவில்லை. நண்பர்களின் நடத்தையால் மனசில் வேதனை இருந்தது தனிமை உறுத்தியது. கிளம்பி வந்தாள். அவ்வளவுதான்.

ஆனால் சத்யாவுக்கு ஏக சந்தோஷம்.

முதல் நாள் பத்து மணிக்குப் படுத்து, குளிருக்கு அடக்கமாய் ரஜாய் போர்த்தி தூங்கிப்போன மாயாவை நடு இரவு எழுப்பினான்.

மணி பன்னிரண்டு.

'ஹாப்பி பர்த்டே' என்று அணைத்து வாழ்த்தினான்.

எத்தனை ஞாபகமாய் சத்யா வாழ்த்துகிறான்.

அன்று சத்யா வேலைக்குப் போகவில்லை லீவு என்றான்.

காலையில் குளித்துவிட்டு தாஸ்ப்ரகாஷ் ஹோட்டலுக்குச் சென்று சிற்றுண்டி அருந்தினார்கள். செல்லாராம்ஸ் கடைக்கு அழைத்துப் போய் புடவை வாங்கிக் கொள் என்றான்.

வாங்கிக் கொண்டாள்.

பொட்டானிகல் கார்டனில் கையை கோர்த்துக் கொண்டு நடந்தார்கள். அங்கு நடந்த சினிமா ஷூட்டிங்கை நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

ஏரியில் படகில் போனார்கள். கரையில் குதிரை சவாரி செய்தார்கள்.

மாலை மணி நான்கிருக்கும்.

'சத்யா எனக்கு களைப்பாக இருக்கிறது... என் பிறந்த நாள் கொண்டாட்டம் போதும்... ஆளை விடுங்கள்.'

காரில் ஏறியதும் மாயா திருப்தியுடன் பேசினாள்.

'இனிமேல் தானே முக்கிய ஸர்ப்ரைஸ் இருக்கிறது...'

'ஸர்ப்ரைஸா?'

'ம்' என்று சத்யா வண்டியை ஓட்டினான்.

கால்மணியில் வண்டி ஒரு வீட்டின் முன் நின்றது.

அமைதியான சூழ்நிலை.

அழகான வீடு—

மாலைக் கதிரவன் மஞ்சள் பந்தாய் மாறி செடி, கொடி, வீடு, மரங்கள் எல்லாவற்றிற்கும் மஞ்சள் வண்ணத்தைப் பூசி இருந்தான்.

அந்த வீடு சந்தடியிலிருந்து ஒதுங்கி இருந்தது. வீட்டின் கூரையில் ஏறிப் படர்ந்து பூத்திருந்தன சிவப்பு ரோஜா கொடிகள்.

காரிலிருந்து இறங்கி ஐம்பதடி நடந்தால் சரசர வென்று இறங்கும் பள்ளத்தாக்கு—பேரி மரங்கள். சிவப்பு சிவப்பாய் ஆப்பிள் பழங்கள்—மரத்தின் அடித் தண்டு தெரியாமல் அடைத்துக் காய்த்திருக்க அத்தி மரங்கள்.

வாசலில் கலர் கலராய் டேலியா பூக்கள்—

இன்னும் என்ன வேண்டும்?

'எத்தனை அழகான வீடு சத்யா! யாருடையது?'

'வாயேன் — சொல்லுகிறேன்.'

பாக்கெட்டிலிருந்து சாவி எடுத்து பூட்டைத் திறந்து வீட்டினுள் சத்யா நுழைந்தான்.

உள்ளே வெகு பாங்குடன் வீடு அலங்கரிக்கப் பட்டிருந்தது.

'என் வெள்ளைக்கார நண்பனின் வீடு—இங்கிலாந்துக்குப் போயிருக்கிறான்... நான் வாடகைக்கு எடுத்திருக்கிறேன்... உனக்குப் பிடித்திருக்கிறதா மாயா?'

வீடு ரொம்ப பிரமாதம். ஆனால் வீடு எதற்கு?

சென்னையில் இவனும், இங்கு சத்யாவுமாக வாழ முற்பட்டால் வீடு எதற்கு? கெஸ்ட் ஹவுஸ் சௌகரியம் போதுமே!

'எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடித்தது மாயா... எதிரில் பள்ளத்தாக்கு—அதில் கீழே இறங்கிப் போனால் ஒரு சின்ன ஓடை ஓடுகிறது. பிக்னிக் போகச் சிறந்த இடம்... போன மாதம் தியாகு இங்கு வந்து என்னோடு இருந்தான் இல்லையா? அப்போதே பார்த்து தீர்மானித்து விட்டோம்' தியாகுகூடச் சொன்னான்—'மாயா, லக்கி கேர்ள்' என்று. என்ன மாயா?'

சத்யா உற்சாகமாகப் பேசினான்.

இவனிடம் 'எதற்கு வீடு சத்யா?... நான்தான் இங்கு வரப்போவதில்லையே?' என்று இப்போது சொன்னால் நன்றாக இருக்காது. பலூனில் ஊசி குத்தி உடைப்பது போல சத்யாவின் மகிழ்ச்சி வடிந்துவிடும். அதனால் சில நாட்கள் பொறுத்துச் சொல்லலாமா?

அப்பா, அம்மா, தியாகு எல்லோரும் இவன் சீக்கிரமாய் வந்து விட்டதாகப் பேசுவதைச் சொல்லி 'ஏன் சத்யா—நாம் இரண்டு குடித்தனமாய் வாழத் தீர்மானம் பண்ணி இருப்பதை ஏன் சொல்லாமல் இப்படி தவறான கருத்தை வளர்த்திருக்கிறீர்கள்' என்று வெட்டிச்சுக்க வந்த 'நானாய் கேட்க வேண்டும்' என்று மாயா நினைத்தது உண்மைதான். ஆனால் கண்களிலும் மனதிலும் அன்பைத் தாங்கிக் கொண்டு, குழந்தை மாதிரி சத்யாவைக் கண்ட பிறகு ஏனோ அவளுக்கு வாய் எழவே இல்லை.

இருக்கட்டும் பிறகு ஒரு சமயத்தில் ஊருக்குப் போகும் முன் கேட்போம் என்று இருந்தான்.

இப்போது 'வீடு' பிரச்சனையும் சேர்ந்து கொண்டது

அறை அறையாகக் கொண்டு காட்டினான் சத்யா.

'இது உன் வொர்க் அறை. ஏதாவது வேலையை எடுத்துக் கொண்டு அவ்வப்போது சென்னைக்குப் போய் நீ செய்து வரும் சமயத்தில் உனக்கு வேலை பார்க்க என்று ஒரு அறை வேண்டாமா?...இதுதான்.'

ஓஹோ! சத்யா, அவள் வேலையை மறக்க வில்லையா? இங்கு இருந்த வண்ணம் சென்னைக்குப் போய் வேலைகளைக் கவனிக்கலாம் என்று திட்டம் வைத்திருக்கிறாரா? நாட் பேட்... சத்யாவை நான்தான் தவறாக எடை போட்டு விட்டேனோ?

'இங்கே பார் மாயா...' கதவு ஒன்றைத் திறந்தபடி சத்யா பேசினான்.

'எனக்குத் தெரிந்த வரையில் ஏதோ சேகரித்து வைத்திருக்கிறேன்...ஐ ஹோப் திஸ் வில் பி ஆல் ரைட்...'

மாயா பார்த்தாள்.

பெயின்டிங் செய்ய ஈஸில் பல சைஸ்களில் ப்ரஷ்கள், பெரிசும் சிறிசுமாய் வண்ணக் குழாய்கள், கான்வாஸ்... ஓவியம், சிற்பக்கலை சம்பந்தப்பட்ட விலை அதிகமான வெளிநாட்டு புத்தகங்கள். அறையின் ஒரு பக்கச் சுவர்— இரும்பு க்ரில் போடப்பட்டு மூடப்பட்டிருந்தது. க்ரில் இடுக்குகள் வழியாய்ப் பார்த்தால் நேர் எதிரில் பச்சைப் பள்ளத்தாக்கு.

இத்தனை உயர்வாய் ஒரு இடத்தைத் தயாரிக்க சத்யாவுக்கு எப்படித் தெரிந்தது?

'ஓவியமா? வீசை என்ன விலை' என்று கேட்கும் சத்யாவுக்கு இதெல்லாம் யார் கற்றுக் கொடுத்தார்கள்?'

சத்யாவின் ஆங்கில நண்பனுக்கு இதிலெல்லாம் ஈடுபாடு உண்டாம்.

மாயா என்றைக்காவது இங்கு வந்தால் அவளுக்குப் பிடித்தமான விஷயங்களைச் சேர்த்து வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சத்யா நண்பனின் ஆலோசனையுடன் இந்த ஓவிய அறையைத் தயார் பண்ணினானாம்!

இத்தனை ஆசையுடன் சத்யா ஏற்பாடுகளைப் பண்ணி இருப்பதைப் புரிந்து கொண்ட மாயா உடனடியாக ஊருக்குப் போவதைப் பற்றிப் பேசி சத்யாவின் மனசைப் புண்படுத்தக் கூடாது என்று அந்த வினாடியே தீர்மானித்துக் கொண்டாள்.

30

அவள் ஊட்டிக்கு வந்து மூன்று வாரங்கள் ஓடி விட்டன. மாயாவின் பிறந்த நாளன்று வீட்டை சத்யா காட்டி, 'எப்போது குடி வரலாம்?' என்று கேட்டபோது மாயா யோசித்தாள். 'சரி—ஒரு மாதமோ, 'அதற்கு கொஞ்சம் கூடவோ இருக்கப் போகிறோம். சத்யாவின் ஆசையைக் கெடுப்பானேன்' என்று, 'ஆல் ஸான் ஆஸ் பாஸிபிள்' என்றாள். அந்த வீடும், பள்ளத்தாக்கும் அவளைக் கவர்ந்துவிட்டது இன்னொரு காரணம் எனலாம்.

சத்யா எல்லாம் திட்டமிட்டிருப்பான் போலிருக்கிறது.

கம்பெனி ப்யூனை பின் அவுட் ஹவுஸில் குடியேறச் செய்தான். அவன் மனைவியை வீட்டு வேலைக்காரியாக

நியமித்தான் தோட்டக்காரன். எடுபிடிக்கு ஒரு பையன். ஊட்டியிலிருந்து மளிகை சாமான்கள் எல்லாம் ஒரே நாளில் தயார்.

இரண்டாம் நாள் குடியேறி விட்டார்கள்.

ஏற்கனவே ஃபர்னிஷ்ட் ஹவுஸ். அதனால் எதையும் வாங்கவோ, நகர்த்தவோ தேவையே இல்லை.

ப்ரிஜ்ஜில் பாலையும், காய்கறிகளையும் அடுக்கிய மாயா அன்றே சமையலைத் தொடங்கி விட்டாள்.

இத்தனை நாட்களாய் சமைக்காதது முதல் நாள் உப்பு உறைப்பு கூடிப் போயிற்று. மறுநாள் சமாளித்து விட்டாள்.

வெள்ளைக்காரன் பெரிய மின்சார 'குக்கிங்ரேஞ்ச்'ஐ விட்டுப் போயிருந்தான். மேலே நாலு அடுப்புகள், அடியில் கேக், ரொட்டி செய்யும் 'அவன்'

நாலு நாட்களில் பழைய சமையல் உற்சாகம் பெருகி விதவிதமாய் ஜமாய்க்கத் தொடங்கினாள் மாயா.

பகல் நேரங்களில் எடுபிடிப் பையன் பெயிண்டிங் உபகரணங்களைத் தூக்கி வர பள்ளத்தாக்கில் இறங்கிப் போவாள்.

ஓடை, மேயும் ஆட்டுக் கூட்டம், பேரி—ஆப்பிள் மரங்கள், மலைச்சரிவு என்று இயற்கைக் காட்சிகளை பென்ஸிலால் வரை புத்தகத்தில் வரைந்து கொள்வாள். பிறகு அங்கேயே உட்கார்ந்து பெயிண்ட் பண்ணுவாள்.

ஊட்டியில் எப்படிப் பொழுது போகும் என்று மலைத்தவளுக்கு மூன்று வாரங்கள் ஓடியது தெரியவில்லை.

ஏஷியா 76 இறந்தாகி விட்டது. பிரதம மந்திரி வந்து விழா அமர்க்களப்பட்டதாக இவள் பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

திறப்பு விழாவுக்கு தனக்கும், சத்யாவுக்கும் அழைப்பிதழ் ராம்நாத் அனுப்பச் செய்வான் என்று எதிர்பார்த்திருந்த மாயாவுக்கு ஏமாற்றம்.

பத்திரிகைகள் டைகர் டார்ச் பெவிலியனைப் பாராட்டி எழுதியிருந்தன. தனக்கு மிகவும் தடபுடலாய் விளம்பரம் கொடுப்பார்கள் என்று மாயா நம்பியிருந்தது நடக்கவில்லை.

'ராம்நாத் அஸோஸியேட்ஸ், இளம் திறமைசாலிகளைக் கொண்ட ஸ்தாபனம். இவர்கள் அமைத்திருக்கும் மூன்று பெவிலியன்களுமே அற்புதமாக இருக்கின்றன...' என்று கம்பெனி, அதன் மூன்று டைரக்டர்களைப் பற்றி பத்திரிகைகள் விவரித்திருந்த அளவுக்கு மாயாவைப் பற்றி எழுதவில்லை.

ஓரிரு பத்திரிகைகள் 'டைகர் டார்ச்'சின் அழகான படைப்பாளிகளில் மிஸஸ் மாயா சத்யகுமாரும் ஒருவர் என்று எழுதியிருந்தன. கார்த்திக் தன் பத்திரிகையில் இவளுக்கு ஸ்பெஷல் புகழாரங்களை சூட்டி எழுதியிருந்தான். என்றாலும் மாயா எதிர்பார்த்த அளவுக்கு அவளுக்கு விளம்பரம் இல்லை என்பது உண்மைதான்.

மாயாவுக்கு ஏக வருத்தம்.

அவுட் ஆஃப் ஸைட், அவுட் ஆஃப் மைண்ட் என்பார்களே அப்படியா?

மூன்று வாரங்களுக்குள் இவளை நண்பர்கள் மறந்து விட்டார்களா?

சே...சே... இருக்காது.

தாமஸ், பாஸ்கர், ராம், கார்த்திக் என்று ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதி எக்ஸிபிஷனின் நடப்பைத் தனக்கு விவரிக்கும்படி மாயா கேட்டிருந்தாள். அதற்குப் பதிலாய்...

சென்னையிலிருந்து இரண்டு கடிதங்கள்தான் இது வரை வந்திருந்தன.

பாஸ்கர் நாலு வரிகள் எழுதியிருந்தான்.

'எக்ஸிபிஷன் பிரமாதமாய் இருக்கிறது. நம் டெக்னிஷியன்களுக்கு நல்ல பெயர். வரதன் அவர் போர்ட் ரூம் டெகரேஷனை பம்பாய் மிஸஸ் அரோராவுக்குக் கொடுத்து விட்டார். நீ சௌக்யமா?' என்று எழுதி விட்டு...பி.கு. போட்டு 'ராம்நாத்துக்கு உன் மேல் கோபம் என்று நினைக்கிறேன். நீ பொறுப்பில்லாமல் விட்டுப் போய் விட்டாய் என்று கோபம்' என்று எழுதி இருந்தான்.

மிஸஸ் அரோரா வந்து புகுந்து விட்டாளா? போகட்டும். எனக்கொன்றும் நஷ்டமில்லை.

இன்னொரு கடிதம் கார்த்திக்கிடமிருந்து—

'காரணம் சொல்லாமல், நீ திடீர் என்று எப்படிக் கிளம்பிப் போகலாம்? எனக்கு உன் மேல் கோபம். ஊட்டியில் பொழுதை எப்படிக் கழிக்கிறாய்? உன் விஞ்ஞானிக் கணவனுக்கு நீ அருகில் இருப்பதுகூட நினைவிருக்காதே! சுருக்க வந்து விடு' என்ற தினுசில் எழுதி இருந்தான்.

மற்ற இருவர்களும் அதுகூட எழுதவில்லை.

இவள் பின்னால் பூனைக்குட்டி மாதிரி சுற்றின தாமஸ் 'ஹலோ எப்படி இருக்கிறாய்?' என்று எழுதக் கூடாதா?

கார்த்திக் கடிதத்தைப் பார்த்ததும் லேசாய் கோபம் வந்தது. மாயாவுக்கு சத்யா படிக்க மாட்டார் என்ற துணிவில் இப்படி எழுதி இருக்கிறானா? இல்லை இவன் இந்தத் துணிவில் எழுதும் அளவுக்கு நான்தான் இடம் கொடுத்துவிட்டேனா?' என்று நிறைய நாழிகை யோசித்தாள்.

31

இன்று அசோக் தாஸப்பா வருகிறான். 'என் காரிலேயே வருகிறேன்' என்று எழுதி இருந்ததால் எந்த நிமிஷமும் வரலாம்.

அமெரிக்கா வேலையை உதறிவிட்டுத் தாய்நாட்டில் சொந்த பிஸினஸ் ஆரம்பிக்க எண்ணமாம். போன இரண்டாம் மாதம் இந்தியாவுக்கு வந்தானாம். பிஸினஸ் தொடங்கி விட்டால் வெளியூருக்குக் கிளம்ப முடியாது என்று இரண்டு நாட்கள் நண்பனுடன் தங்க வருகிறானாம்.

அசோக் தாஸப்பாவை மாயாவினால் மறக்க இயலுமா?

போன முறை அமெரிக்காவிலிருந்து லீவில் அவன் வந்த போது தானே ராம்நாத்தின் அறிமுகமே உண்டானது! மாயா இன்டீரியர் டெகரேட்டர் என்று சிறப்பாய் பெயர் பெற அந்தச் சந்திப்புதானே உதவியது!

அசோக் வருகையை மாயா ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

மதியம் மூன்று மணி அளவில் அசோக் வந்து சேர்ந்தான்.

அதே சிரிப்பு, பேச்சு, கிண்டல்; ஆள் மாறவே இல்லை.

மாயாவின் சமையலைப் பாராட்டினான். புது ஓவியங்களை விமர்சித்தான். மாயா இது நாள் வரை சென்னையில் செய்திருந்த வேலைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்து வைத்திருந்தான்.

'உங்களுக்கு எப்படித் தெரியும் அசோக்?'

'நீ என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன் புகழ் அமெரிக்காவரை பரவி இருக்கிறதாக்கும்.'

பிற்பாடு சொன்னான்.

இரண்டு வருஷங்களாக சத்யா அவனுக்கு எழுதின கடிதங்களெல்லாம் அவள் புகழ்தான் என்று.

'மாயா அதைச் செய்தாள். இதை நிர்மாணித்திருக்கிறாள், மாயா... மாயா... வேறு ஒன்றும் இருக்காது. நான் கூட ஒரு லெட்டரில் எழுதியிருந்தேன். 'நீ ஆண்டிரேபிஸ் ஆராய்ச்சி பண்ணுகிறாயா? இல்லை, மாயா ஆராய்ச்சியா என்று.'

அசோக்கின் பேச்சிலிருந்து மாயாவுக்கு சத்யாவின் குணத்தின் மற்றொரு கோணம்—அவள் இது நாள் வரை புரிந்து கொள்ளாக் கோணம்—புரியத் தொடங்கியது.

வாய்விட்டுப் பாராட்டினால்தான் பாராட்டு என்று நினைத்திருந்தாளே, அது எத்தனை தவறு? தன்னைப் பற்றியும் அவ்வளவு உயர்வாகவா நினைக்கிறார் சத்யா?

அமெரிக்காவிலிருந்து சத்யாவின் ஆராய்ச்சியைப் பாராட்டி, ஊக்கம் கொடுக்கும் விதத்தில் பதில் வந்து விட்டது. நான்கு நான்கு நாட்களாய் ஆராய்ச்சியின் இரண்டாம் கட்டத்தை சத்யா துவக்கி விட்டதால் நண்பனுடன் நிறைய நேரம் இருக்க முடியாமல் போயிற்று. அவன் வேலைக்குப்போன பிறகு அசோக்கும், மாயாவும் ஓயாது பேசித் தீர்ப்பார்கள்.

தங்களின் அமெரிக்க நாட்களைப் பற்றி அசோக் சொன்னான். போன முறை மாயாவைச் சிறிது நேரமே சந்தித்ததால், சொல்லாமற் போன விஷயங்களையெல்லாம் சொன்னான்.

'சின்ன வயசிலிருந்தே சத்யா உன்மேல் காதல் கொண்டிருந்தான் என்றே நான் நினைக்கிறேன் மாயா.

அமெரிக்கப் பெண்கள் இவன் ஆண்பிள்ளைத்தனமான உடம்புக்கும், தலைமுடிக்கும் ஆசைப்பட்டுப் பின்னால் சுற்றுவார்கள். மனுசன் திரும்பிப் பார்க்கமாட்டான். 'டேட் பண்ணினால் என்ன தப்பு சத்யா' என்பேன். எதற்கு டேட்டிங்? அதில் ஆரம்பித்து உடல் உறவில் கொண்டு விடும். பிறகு இங்கு இருப்பதா, இந்தியாவுக்குப் போவதா—என்றே சந்தேகம் தோன்ற ஆரம்பிக்கும். ஐ லவ் இண்டியா. இங்கே நான் படிக்க, ஆராய்ச்சி அனுபவம் பெற வந்திருக்கிறேன், விளையாட அல்ல' என்பான். ஓ! சத்யாவிடமிருந்து நான் எத்தனை கற்றுக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?

இந்தச் செதியெல்லாம் மாயாவுக்கு ரொம்பப் புதிதாக இருந்தது.

'உன்னை மணக்க அவன் ஆசைப்படுவது எனக்குத் தெரியும் 'என் உறவுப் பெண்—கம்பீரமாய், கலகலப்பாய் ஆனால் பெண்மை நிறைந்தவளாக இருப்பாள், அந்தச் சிறப்பு இந்நாட்டுப் பெண்களுக்கு வருமா?' என்று எத்தனை முறைகள் கேட்டிருக்கிறான் தெரியுமா?'

சத்யா என்னை ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டாரா? ஒரு தடவை சூசகமாய்க் கூட சொன்னதில்லையே?

அசோக் இருந்த இரண்டு நாட்களில் மாயா புது விஷயங்கள் அனேகம் தெரிந்து கொண்டாள்.

அசோக் புறப்படும் தினத்தன்று 'இன்றும் பாக்டரிக்குப் போயாக வேண்டுமா சத்யா—இருங்களேன்—அசோக் ஊருக்குப் போகிறாரே'—என்று மாயா அவனிடம் கேட்ட போது "ஸாரி மாயா. அசோக் வில் அண்டர்ஸ்டாண்ட். எனக்கு வேலை இருக்கிறது-' அவன் புறப்பட்டுவிட்டான்.

அப்போது அசோக் சொன்ன விவரத்திலிருந்து தன் கணவனைப் பற்றின இன்னொரு விஷயத்தையும் மாயா அறிந்து கொண்டாள்.

'சத்யாவுக்கு 'ஆண்டி ரேபிஸ்' கண்டு பிடிப்பதில் உள்ள வெறி நியாயமானதுதானே! யூ. எஸ். ஸிலேயே இந்த ஆராய்ச்சிக்காகப் பாடுபட்டது எனக்கல்லவா தெரியும்' என்றான்.

'சத்யாவுக்கு எதற்காக வெறி?'

அசோக் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

'உனக்குத் தெரியாது மாயா? நிஜமாக?'

'ம்ஹூம்.'

'சத்யாவுக்கு ஒரு தம்பி இருந்தானாமே. அவன் சின்ன வயசில் வெறி நாய் கடித்துத் தவித்து இறந்ததை சத்யா பார்த்திருக்கிறான். அப்போதே தீர்மானித்து விட்டானாம். பெரியவனாகி, டாக்டர் பட்டம் வாங்கி வெறி நாய் கடிக்கு மருந்து கண்டுபிடிப்பேன் என்று. நீ உறவுக்காரி உனக்குத் தெரியாதா மாயா?'

சத்தியமாய் மாயாவுக்குத் தெரியாது. தம்பி துடித்து இறந்த வியாதிக்கு மருந்து கண்டுபிடிப்பது என்ற சத்யாவின் வைராக்யம் மனைவியான அவளுக்குத் தெரியாதது குறித்து வருத்தமாக இருந்தது.

அன்று பிற்பகலில் மாயாவோடு அசோக்கும் கீழே பன்னத்தாக்குக்குப்போய் அவள் பென்ஸிலால்-படம்வரைவதைக் கவனித்தான். நிமிஷத்தில் அவள் மலை, கொடி, செடிகளை தத்ரூபமாய் உருவாக்குவதைக் கண்டு மலைத்தான்

'நீ இத்தனை ஆர்வமாக இருப்பதைக் கண்டுதான் சத்யாவும் ஓவியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முயன்றிருக்கிறான்... நாலைந்து ஓவியப் புத்தகங்கள்

இங்கு கிடைக்கவில்லை என்று எழுதி இருந்தான். நான் வரும்போது கொண்டு வந்துவிட்டு இங்கு போஸ்டில் அனுப்பினேனே...

சில சமயங்கள் மாயாவுக்குத் தெரியும் என்ற நினைப்பில் அசோக் பேசினதை அவளுக்குச் சமாளிப்பது கஷ்டமாக இருந்தது.

வந்த அன்றே 'என்ன மாயா, புக்ஸ், ப்ரஷ் எல்லாம் திருப்திதானா? என்று அவன் வினவவும் அவள் விழித்தாள். சத்யா விழுந்தடித்துக்கொண்டு பின்னே, திருப்தி இல்லாமல்?' என்று சொன்னான்.

அதை அதோடு மறந்துவிட்டாள் மாயா. இன்று புரிந்தது.

இவளின் ஆசைகளை நினைவு வைத்துக் கொண்டு சத்யா நிறைவேற்றி இருக்கிறாரா?

32

தான் மாறி இருப்பது மாயாவுக்கே புரிந்தது.

பதினைந்து நாட்கள் இருப்பதாக தீர்மானித்து வந்தவள் மாதம் ஒன்றரை ஆகியும் இன்னும் ஏன் சென்னைக்குப் புறப்படவில்லை.

வேலை வேலை என்று வாழ்ந்தவள், சத்யா ஜபம் பண்ணிக்கொண்டு நிம்மதியாய் இருக்கிறேனே இது ஏன்?

இப்போதெல்லாம் மாயா ரொம்ப யோசிக்கத் தொடங்கி விட்டாள்.

என் குணம் என்ன! என் சுவாபம்? மனசு எப்படிப் பட்டது? நல்லதா, கெட்டதா? அருவைப்படுவதா?

கல்யாணமாகும் முன் நான் எப்படி இருந்தேன்?

ஆன பிறகு?

வேலையில் சேர்ந்த பிறகு?

இப்போது?

சத்யாவிடம் இன்று எனக்கு இருக்கும் பிரேமை போன இரண்டாம் மாதம் ஏன் இல்லை? போன வருஷம் ஏன் இல்லை?

கல்யாணமானவுடன் இதே காதல் இருந்ததா?

சத்யா என்னைக் கவனிப்பது போதாது, அவருக்கு என் மீது ஈடுபாடு இல்லை. அவருக்கு வாழ்க்கையில், கலைகளில் எதிலுமே சுவாரஸ்யம் இல்லை என்று நினைத்திருந்தேனே! இன்று ஏன் அப்படி நினைக்கவில்லை?

சத்யா கிட்டத்தில் போகாமல் ஒதுங்கின நான், அவர் கை பட்டால் குழைகிறேன், படாதா என்று ஏங்குகிறேனே. இது எதனால்?

அன்று கார்த்திக் போன்ற பல நண்பர்கள் 'நீ அழகு; நீ புத்திசாலி, உன்னைப் பார்க்கா விட்டால் தலை வெடிக்கிறது' என்றெல்லாம்பேசினபோது பாராட்டாகக் கருதி மகிழ்ந்தவளுக்கு, இன்று கார்த்திக 'உன்னைப் பார்க்காமல் கஷ்டமாக இருக்கிறது' என்று எழுதினதைப் படிக்கும் போது அது ரசக் குறைவாகப் படுகிறதே. ஏன்? 'உன் விஞ்ஞானிக் கணவன் உன்னைக் கவனிக்கிறானா?' என்று சத்யாவை மட்டமாய் பேசினால் கோபம் வருகிறதே! ஏன்?

முன்பு பாஸ்கர் உனக்கும், சத்யாவுக்கும் பொருத்தம் கொடுத்த இறைவன் கொடுமையானவன்' என்ற போது நான் 'நீ யாரடா எங்களை விமர்சிக்க' என்று கேட்டேனா? இல்லையே?

தாமஸ் 'ஐ லவ் யூ' என்ற போது சிரித்தேன். கன்னத்தில் அறைந்திருக்க வேண்டாமோ?

என்னைவிட சின்னப் பையன் ராஜேஷ்; அவன் கிழட்டுத் தந்தை வரதன்; அசிங்கமாய் என்னிடம் பேசும்படி ஏன் நான் அனுமதித்தேன்?

இன்னும் எத்தனையோ சினேகிதர்கள் 'இன்னொருத்தர் மனைவி' என்ற கௌரவத்தைக் கொடுக்காமல் புகழ்ந்தும், சிரித்தும், தொட்டும் பேசியதையெல்லாம் நான் எப்படிப் பொறுத்துக் கொண்டேன்?

ஊட்டியின் தனிமையில் அவள் உணரும் பல விஷயங்கள் மாயாவை வெட்கத்தில் ஆழ்த்தின.

நண்பர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களின் மனசில் அசிங்க நோக்கத்துடனேயே தன்னை அணுகி இருப்பது இன்று மாயாவுக்குப் புரியத் தொடங்கியது.

நான் புத்திசாலியானவள் என்று நினைத்த எனக்கு ஏன் நல்லதையும், கெட்டதையும் பிரித்துப் பார்க்கத் தெரியவில்லை?

சமர்த்து, கெட்டிக்காரத்தனம் இருப்பதெல்லாம் எதற்காக?

மாயா தீவிரமாய் தன்னை அலசிக் கொண்டதில் பல விஷயங்களில் அவள் தெளியத் தொடங்கினாள்.

33

மாயா கர்ப்பமாகி இருப்பதை ஊட்டி லேடி டாக்டர் நிச்சயம் பண்ணி விட்டாள்.

முப்பது நாட்கள் மாயாவுக்கு தாண்டியது இல்லை.

முப்பத்தைந்து நாட்களில் வாந்தி தலை சுற்றல் வந்த போது அவளுக்குத் திட்டமாய்த் தெரிந்து போனது.

இன்று சிறுநீரை ஃபாராக் டெஸ்ட் பண்ணியும், 'செக்அப்' செய்தும் லேடி டாக்டர் 'கண்டிப்பாய் ப்ரெக்னென்ஸி' என்று சொல்லி விட்டாள்.

இவள் வாந்தி, மயக்கம் என்று பத்து நாட்களாய் சுருண்டு படுத்தபோது சத்யா என்னவோ ஏதோ என்று பயந்து போனான்.

'மாயா, மாயா என்று கிட்டத்தில் இருந்து உருகிப் போனது மாயாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

'அஜீரணம், இன்று ரொம்ப நாழிகை வெயிலில் இருந்தேன்' என்றெல்லாம் சொல்லி மாயாவைப் சமாளித்தாள் சத்யாவிடம். தன் சந்தேகத்தைச் சொல்லி அவன் சந்தோஷப்பட்டு, பிறகு இல்லை என்று ஆனால் ஏமாற்றம் தானே?

நேற்று அவளாகவே 'டாக்டரிடம் போகலாம், என்ற போது 'எதற்கு மாயா? உடம்பு சரியாக இல்லையா? என்னிடம் ஏன் மறைத்தாய்' எனப் படபடத்தான்.

'லேடி டாக்டர்—சத்யா'

'லேடி டாக்டரா? வந்து...வந்து...'

இத்தனை வெட்கப் படுவாரா சத்யா?

டாக்டர் நிச்சயமாய் சொல்லும் வரை இருவருமே ஒன்றும் பேசவில்லை.

காரில் ஏறினதும் நேராக வீட்டுக்குப் போகாமல் தொட்டபெட்டா சிகரத்துக்கு ஓட்டினான் சத்யா.

மாலைக்குளிர் வெட வெடத்தது.

கண்ணாடி வீட்டிற்குள் யாருமே இல்லை.

மாயாவை அழைத்துக் கொண்டு கைப்பிடிச் சுவரின் அமர்ந்தான் சத்யா.

காலடியில் ஊட்டி பரந்து கிடந்தது.

சத்யா ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார் என்பது மாயாவுக்குப் புரிந்தது.

இரண்டு பேருமே பேசவில்லை.

ஐ லவ் யூ—

நமக்கென்று குட்டிக் குழந்தை—

ஒண்ணா ஆனா என்று வழக்கமாய் பேசும் பேச்செல்லாம், ஒரு வார்த்தை கூட இல்லை, மௌனத்திலேயே சந்தோஷப்பட்டார்கள்.

மறுநாளிலிருந்து சத்யா மாயாவைப் பூப்போலத் தாங்கினான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அம்மா, அப்பா, மாமனாருக்குத் தெரிந்து எல்லோரும் அன்றே காரில் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.

நான் கர்ப்பமானது குறித்து இவர்களுக்கெல்லாம் இத்தனை சந்தோஷமா?

உண்டாகியிருப்பதன் மூலம் இவர்களுக்கெல்லாம் நான் இத்தனை பூரிப்பைக் கொடுக்க முடிகிறதா?

அப்பா மறுநாளே திரும்பிவிட்டார். அம்மா மட்டும் நான்கு நாட்கள் இருந்து நாக்குக்கு ருசியாய்ச் சமைத்துப் போட்டாள் அப்பாவை விட்டு அவள் எத்தனை நாட்கள் இருக்க முடியும். நாலு நாட்களில் மாமனார்; அம்மா புறப்பட்டுப் போனார்கள்.

தியாகுவும் இரண்டு நாட்களுக்கு வந்து சென்றான்.

ஏஷியா 76ல் மாயாவுக்குக் கொடுக்க வேண்டியகவுரத்

தைக் கொடுக்காதது அவனுக்குக் கோபம்.

'இவள் உயிரை விட்டுக்கொண்டு உழைத்தாள் சத்யா.

ஆனால் இப்போது ராம்நாத் எத்தனை பேட்டிகள் கொடுத்திருக்கிறான் தெரியுமா? ஒன்றிலாவது மாயாவை

உயர்வாய் பேசவில்லை. யாரோ கேட்டதற்குக் கூட 'தாங்களெல்லாம் மமாக உழைப்பவர்கள் தனிப்பட்ட எந்த நபரையும் எப்படி உயர்வாகப் பேச முடியும். இந்த பெவிலியன்கள் எல்லாம் கூட்டுமுயற்சிகள்' என்று பேசி யிருக்கிறான். ராம்நாத் நல்லமனிதன் என்று நினைத்தேன். அவனும் இன்று ஒன்று சொல்லி நாளை ஒன்று சொல்லும் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான். முகத்தைப் பார்த்தால் முகஸ்துதி— அந்தப் பக்கம் நகர்ந்து விட்டால் ஆளையே அமுக்கி விடுகிறார்கள். சே... தொண்டையை அறுக்கும் போட்டா போட்டி.'

சத்யாகூட கேட்டார் — 'நீ வேணுமானால் சென்னைக்கு ஒரு ட்ரிப் போய் ராம்நாத்தையும், பத்திரிகைகளையும் நேரில் பார்த்துப் பேசிவிட்டு வருகிறாயா?'

மாயா மறுத்து விட்டாள்.

ராம்நாத் இவள் பேரில் கோபமாக இருக்கிறான். எக்ஸிபிஷன் திறப்பதற்கு முன் வந்தது, முதல் கோபம். இரண்டாவது 'பதினைந்து நாட்களில் திரும்புகிறேன்' என்று சொல்லி வந்தவள் மாசம் ஒன்னரை ஆகியும் திரும்பாதது.

மிஸஸ் அரோராவின் முகஸ்துதியில் அவளது நண்பர்கள் கூட்டம் இறங்கி இருப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

தாமஸ் எழுதியிருந்தான் போனவாரம் — 'மிஸஸ் அரோரா ரொம்ப ஸ்மார்ட் ரொம்ப... ப சோஷியல் புரிகிறதா? ஒரு மாசமாய் சென்னையே இவள் புகழ்தான் பாடுகிறது. விஷயம் தெரியுமா? ராம்கூட மிஸஸ் அரோரா வலையில் விழுந்துவிட்டான். நம் டெகரேஷன் வேலைகளில் அவனுக்கு இரண்டைக் கொடுத்துவிட்டான். கதிர்லைன் மூன்று நட்சத்திர ஓட்டல் வேலையைத் தந்திருக்கிறார். முப்பது பர்செண்ட் கமிஷன் வாங்கினாலும் ராம்நாத்துக்கு பத்து பர்செண்ட் இடது கை மாற்றல் நடக்கிறது என்று பாஸ் சொன்னான். அவள் கெட்டிக்காரி. என்னிடம் அன்பாய் நடந்து கொள்கிறாள்...'

இப்படி.

கதிர்லைனுக்கு 'கம்பெனி' கொடுத்தால் மூன்று என்ன ஐந்து நட்சத்திர ஹோட்டல் வேலையும் கிடைக்கலாம்.

ஆனால் ராம்நாத் கூடவா?

பத்து பர்செண்ட் அதிகப் பணத்துக்கு ஆசைப்பட்டா புது சிநேகிதத்தை வளர்த்துக் கொள்கிறார்?

பேட்டிகளில் என் புகழ் பாடாவிட்டால் போகட்டும்; இத்தனை நாட்கள் உண்மையுடன் உழைத்திருக்கிறேனே அதற்காகவாவது 'என்று வரப்போகிறாய் மாயா? உன் வேலையை தொடரப் போகிறாயா, இல்லை வேறு டெகரேட்டருக்குக் கொடுக்கட்டுமா?' என்று மரியாதைக்குக் கேட்க ராமுக்குக் கூடவா தெரியாது?

இது விநோத உலகம். ஒருவரிடம் காரியம் ஆக வேண்டியிருந்தால் ஸ்துதி பண்ணும், இல்லாவிட்டால் திரும்பிப் பார்க்காத உலகம்.

'உனக்கு என்று உலகம் புரியும் மாயா?' என அன்று தியாகு கேட்டானே, அவன் வாயில் சர்க்கரையைக் கொட்ட வேண்டும்.

உலகத்தை நான் என்று புரிந்து கொள்வேன்?

ஒரு வாரமாய் பள்ளத்தாக்குப் போகாத மாயா அன்றைக்கு ஓவியம் வரைந்தால் என்ன என்ற நினைப்பில் எடுபிடி பையனுடன் கீழே போகக் கிளம்பினாள்.

சத்யா தொழிற்சாலையில் இருந்தான்.

விநோதமான உலகத்தைப் பற்றி எண்ணிக் கொண்டே நடந்த மாயா முதல் நாள் தூற்றலில் தரை சொத சொதத்திருப்பதை உணரவில்லை.

ஒரு இடம் வழுக்கியது.

நிலைகுப்புற பத்து அடிகள் போல சறுக்கி மாயா விழுந்தாள். பாதம் வீங்கி விட்டது.

எலும்பு முறிவா? எழுந்து நடக்கப் பார்த்தாள்.

முடியவில்லை. வலி — வலி.

பையன் ஓடிப் போய் சத்யாவுக்கு போன் பண்ண, இருபது நிமிஷத்தில் தொழிற்சாலையிலிருந்து வீட்டுக்கு விரைந்து பள்ளத்தாக்கில் தாவி ஓடி வந்தான்.

மனைவியை குழந்தை போல அலாக்காய் எடுத்துக் கொண்டு வீட்டை அடைந்தான் சத்யா.

அடுத்த அரைமணியில் மாயாவுக்கு அபார்ஷன் ஆனது.

34

முழங்காலிலிருந்து, விரல்கள் நுனி வரை மாக்கட்டுப் போட்டுவிட்டார்கள்.

கருச்சிதைவு ஆனதாலும், கால் அசைக்க முடியாமல் வலித்ததாலும் மாயாவைப் படுக்கையை விட்டு இரண்டு நாட்களுக்கு எழுந்திருக்கக் கூடாது என்று சொல்லி விட்டார் அப்பா.

கருச்சிதைவு ஆன சேதி கேட்டு, போட்டது போட்ட படியே விட்டுவிட்டு அவள் பெற்றோர் வந்து சேர்ந்தனர்.

எக்ஸ்ரே எடுத்ததில் எலும்பு முறிவு கணுக்காலில் இருப்பது புரிந்தது.

அப்பா கிட்டத்தில் இருந்து டாக்டர்கள் மகளைக் கவனிப்பதைக் கண்காணித்தார்.

அரை நாழிகை தன் க்ளினிக்கை விட்டுக் கிளம்பாதவர் மகளுக்காக நான்கு நாட்கள் கட்டியில் பழிகிடந்தார்.

சிக்கல் ஒன்றும் இல்லை, இனி மாயா வீட்டுக்குள் விந்தி நடக்கலாம் என்று தீர்மானமானதும், அவர் மட்டும் கிளம்பி கோயமுத்தூருக்குப் போனார்.

'மாயாவை எங்களோடு அழைத்துப் போகட்டுமா அங்கு வைத்திய வசதி நன்றாயிருக்கும்; அவளுக்கும் உடம்பு தேறின மாதிரி இருக்கும்.'

சத்யா சம்மதித்து விட்டான்.

ஆனால் மாயா மறுத்துவிட்டாள்.

ஐ ஆம் ஆல்ரைட் அப்பா... மூன்று வாரத்தில் கட்டு பிரிக்கலாம் என்கிறீர்கள். இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். நான் ஜாக்கிரதையாக இருக்கேன்ப்பா...'

அப்பாவுக்கு மனசு கேட்கவில்லை. அம்மாவைவிட்டுப் போனார்.

பெற்றவள் மகளைப் பார்த்துக் கொள்வது ஒன்றும் அதிசயம் இல்லை.

ஆனால் சத்யா?

கண்ணுக்குள் வைத்துக் கொண்டல்லவா கண்காணித்தான்.

அபார்ஷன் ஆன மறுநாள் சத்யாவும் அவளும் தனியாய் இருந்தபோது மாயா அவன் கையை தன் மார்பில் வைத்துக் கொண்டு 'ஸாரி சத்யா' என்றாள்.

'எதற்கு?'

'குழந்தை வேணும் என்ற உங்கள் ஆசையை அழித்து விட்டேனா?'

'ஸில்வி... அசட்டு மாயா...'

அவள் முகத்தைத் தன் கையில் ஏந்தினான் சத்யா.

'அந்த வருத்தம் மட்டும் இல்லையா? துக்கமோ, சந்தோஷமோ, இரண்டு பேருக்கும் சேர்ந்தது இல்லையா மாயா? உனக்குப் பெரிசாய் அடி படாததே எனக்கு சந்தோஷம் தெரியுமா?'

அதன் பிறகு அவர்கள் குழந்தையைப் பற்றிப்பேசவே இல்லை.

வீட்டுக்குள் மாயா பிளாஸ்டருடன் நடக்கத் தொடங்கின பிறகும் சத்யா அவளுக்கு உதவுவதை விடவில்லை.

'குளிக்கும்போது கதவைத் தாள் போடாதே' என்பான். விழுந்து விட்டால் என்ன செய்வது என்ற யோசனை.

எட்டி இருக்கும் பத்திரிகையை எடுக்க எழுந்திருக்க முயற்சிக்கும் முன் இவன் எடுத்துத் தருவான்.

ஒரு பக்கம் சத்யா என்றால் அம்மாவும், மாமனாரும் தியாகுவும் மறுபக்கம். ஒரு வேலை செய்ய அனுமதிக்க வில்லை. அப்பா தினம் ராத்திரி போன் பண்ணி உடல் நிலையை விசாரிப்பார்.

தன்னைச் சுற்றிலும் இருக்கும் உள்ளங்களின் தேங்கிக் கிடந்த அன்பின் ஆழம் புரியத் தொடங்கியபோது மாயா அதைத் தாங்க முடியாமல் திக்கு முக்காடிப் போனாள்.

ஏனோ அவளுக்கு தன் சொந்த வாழ்க்கை நாட்களெல்லாம் நினைவில் வந்து சதா கூத்தாடின.

பிள்ளை இறந்ததனால் தாமஸின் மனைவி ஸில்வியா உடைந்து போனபோது, கணவன் என்ற முறையில்

தாமஸ் அவளுக்கு எந்த விதத்தில் உதவினான்? 'அவள் அழுத மூஞ்சியும் முகரையும் 'எனக்கு வேண்டி இருக்க வில்லை'—என்றான் அல்லவா?

குடித்துவிட்டு தாமஸ் செய்த அக்கிரமங்கள்தான் எத்தனை? மனைவியை நாலு பேர்கள் முன்பு கண்ணிய மாக நடத்தியிருக்கிறானா?

பார்ட்டிகளில் குடித்து ஆட்டி அடிப்பதை சகிக்காத ஸில்வியா 'வீட்டுக்குப் போகலாம்' என்று கெஞ்சினால் எனக்கா புத்தி சொல்கிறாய்? உனக்குத் திமிர் அதிகம் ஜனங்களுடன் பழகத் தெரியாத மூடம்' என்று அவன் ராசாபாசமாய் கத்தி மாயா கேட்டிருக்கிறாளே?

...ஏன்? ஒரு சமயம் இவர்கள் வீட்டில் பார்ட்டி—லேட்டாய் தாமஸ் மனைவியுடன் வந்து சேர்ந்தபோது போதை ஏறியிருந்தது. ட்ரேயோடு உள்ள வடையை சமையற்காரப் பையன் எல்லோரிடமும் நீட்டியபோது தாமஸ் என்ன செய்தான்? நாலு வடைகளைச் சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டானே! எல்லோருக்கும் அவன் தமாஷ் பண்ணுவது போலச் சிரிப்பு—ஸில்வியா மட்டும் அவமானத்தால் குன்றினது மாயாவுக்கு அன்று புரியவில்லை. இன்று நிதானமாய் யோசிக்கையில் விளங்குகிறது.

இவையெல்லாம் ஒரு கனவனா?

இவன் கொடுத்த புகழாரங்களின் போதை என் கண்களை மறைக்க விட்டுவிட்டு நான் சும்மா இருந்தேன்?

'மூளை சரியில்லாதவள் என் மனைவி' என்று அப்பட்டமாகப் பொய்யைச் சொல்லி, படிக்காத மனைவியை ஒதுக்கிவிட்டுப் பிற ஆடவனின் மனைவியோடு உறவு கொள்ள முயற்சித்த கார்த்திக் மனுஷன் தானா?

'மஹாபலிபுரத்துக்குக் கம்பெனி கொடு'—என்று பகிரங்கமாய்க் கேட்கும் லட்சாதிபதி சுதர்ஸன் எதில் சேர்த்தி?

விவரம் புரியாமல், உலக அனுபவம் இல்லாமல் இருந்த என் போன்ற பெண்களைத் தன் கவர்ச்சியான பேச்சால் பாராட்டுக்களால் கவர முயற்சிக்கும் பாஸ்கர்-?

இன்னும் எத்தனை எத்தனை?

கட்டின மனைவியைக் கவனிக்க, அவளின் சொந்த மனசுக்கு ஆறுதல் அளிக்க, அவளுடைய சுக துக்கங்களில் பங்கு ஏன்—குடும்பப் பொறுப்புகளையே ஏற்க மறுக்கும் ஆண்களெல்லாம் அன்று எனக்கு உயர்வாகத் தோன்றினார்களே!

ஆனால் சத்யா?

என் சத்யா?

'நான் ஒரு வீட்டுப் பறவை' என்று திருமணத்துக்கு முன்பே அவர் என்னிடம் சொல்லி இருந்தும், அதைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு நாகரிக சமூகப் பெண்களில் நானும் ஒருத்தியாக மாறினபோது அதை எத்தனை பரந்த மனசுடன் ஏற்றுக் கொண்டார்?

வெளிப்படையாக அவர் பாராட்டினதில்லை. என்றாலும் 'நீ இதைச் செய்யாதே' என்று தடுத்ததுண்டா?

ம்ஹூம்... சத்தியமாய் இல்லை.

அன்றொரு நாள் அவர் டெல்லியிலிருந்து வீடு திரும்பியபோது நான் இல்லை. பாஸ்கர் என்னை வீட்டில் இறக்கினான்; மணி இரவு ஒன்பது.

'எங்கே போய் வருகிறாய் இந்நேரத்தில்?' என்று கடுமையாய் ஒரு வார்த்தை?

'போன காரியம் என்னாயிற்று மாயா?' 'ஹாட் எ நைஸ் டைம்?' என்றாரே!

சத்யா—

என் சத்யா—

உங்கள் பரந்த மனம், யதார்த்தமான எண்ணங்கள் மனைவியை மதிக்கும் குணம் இதெல்லாம் எனக்கு ஏன் அன்று புரியவில்லை?

முட்டிக்கொண்டு காரணத்தைத் தேடினாள் மாயா யோசிக்க யோசிக்க அவைகளும் புரியத் தொடங்கின.

குழந்தைப் பருவத்திலிருந்து மாயா கட்டுப்பாடாய் வளர்ந்தவள். ஆண்கள் சகவாசமே கிடையாது. ஒரு தம்பி! அவனுடைய நண்பர்களுடன்கூட சேர்ந்து விளையாடியதில்லை. பெரியவளானதும் இந்தக் கண்டிப்பு அதிகம் ஆனாலும், அப்பாவுக்கு வசதி இருந்ததால், ஆசைப்பட்ட சௌகரியங்களெல்லாம் அவளுக்குக் கிடைக்கவே செய்தன.

கல்யாணமாகி கணவனைச் சரியாகப் புரிந்து கொள்ளும் முன்னரே அவள் பாதை, வேலை என்ற ரூபத்தில் பிரியத் தொடங்கியது.

விதவிதமாய் ஆண்கள்—சமூகத்தின் பணக்காரர்கள்... தொழிலதிபர்கள்... அந்த ஆண்கள் இவள் பெண்மையில் மயங்கி இவள் புத்திக்கும், இவளுக்கும் ஏராளமான பாராட்டுகளைக் கொடுத்தார்களே, அதை அதுநாள் வரை மாயா அனுபவித்ததில்லை—அல்லவா?

ஆப்போசிட் செக்ஸ்—

அவர்கள் புகழ்ச்சியின் போதை—

இதில் நன்றாய் மூழ்கிப் போனாள் மாயா.

நல்லது எது, கெட்டது எது, நிஜம் எது, போலி எது என்று புரிந்துகொள்ள முடியாதபடி மூழ்கிப் போனாள்.

பொத்திப் பொத்திப் பெற்றோர்களால் வளர்க்கப் பட்ட பெண். பரந்த மனப்பான்மை கொண்ட புருஷனை அடைந்தும், அவன் குணாதிசயங்களைக்கூட அறிந்து

கொள்ள முடியாதபடி அவளின் திடீர் சுதந்திரம் அவளை மயக்கியது.

பட்டிக்காட்டான் பட்டணத்தைக் கண்டு பிரமிப்பது போலவா?

குருடன் கண் வந்து யானையைப் பார்த்து மகிழ்வது போலவா அவளும் நடந்து கொண்டாள்?

கட்டுப்பாடான குடும்பச் சூழ்நிலையிலிருந்து 'தொம்!' என்று நாகரிகச் சூழலில் அவள் குதித்தபோது அது சிக்க வைக்கும் சுழல் என்று அவளுக்குப் புரியவில்லையோ!

அந்தச் சூழலில் அமுங்கி, சத்யாவின் அன்பை இழந்து மண்ணோடு மண்ணாகப் போக வேண்டியவள் இன்று எப்படி தப்பித்து வந்தாள்? ஏன் தப்பித்தாள்?

தியாகு என்ன கேட்டான்?

'உன் நண்பர்களெல்லாம் குடிகார பைத்தியங்கள் தானா'—என்றுதானே?

இல்லை—விவரம் புரியாத பெண் எப்போது மயங்கி விழுவாள்—உயிருடனே கொத்தலாம் என்று வட்டமிடும் கழுகுகளா?

இல்லை—இல்லை—அனாதரவாகக் கடலில் நீந்த வரும் பெண்களை, பையப்பையப் பாய்ந்து புரட்டிக் கடித்துக் கொன்று தனக்குத் தீனியாக்கும் சுறாமீன்களா!

மாயா ஊட்டிக்கு வந்து இரண்டு மாதங்கள் பூர்த்தி ஆவதற்குள் யார் செய்த புண்ணியத்தாலோ, பூரணமாய்த் தெளிந்து போனாள்.

27856
434633

35

கால் கட்டைப் பிரித்த அன்று சொல்லாமல் கொள்ளாமல் கார்த்திக் வந்து நின்றான்.

இவன் எதற்கு வந்தான்?

'யார் வந்திருக்கிறார்கள் என்று பார் மாயா!' உற்சாகத்துடன் சத்யா அழைத்தான்.

கொஞ்ச நாளாக மாயாவிடம் முன்பிருந்த குறுகுறுப்பு துறுதுறுப்பு, சிரிப்பு இவைகள் குறைந்து போய் விட்டதே என்று வேதனை கொண்டிருந்த சத்யாவுக்கு பழைய நண்பனைப் பார்த்தால் தெம்பு வருமோ என்று நினைத்து மாயாவைக் கூப்பிட்டான்.

அவன் எதிர்பார்த்ததுபோல மாயா கலகலக்கவில்லை.

'என்னாயிற்று மாயா? இளைத்து, வாடிப் போய்—என்னாயிற்று?''

ஏதோ மாயாவைப் பற்றி தனக்குத்தான் கவலை என்பது போலக் கார்த்திக் பேசினான்.

மரியாதைக்குப் பத்து நிமிஷம் பேசினாள் மாயா.

ஆளைக் கூப்பிட்டு கார்த்திக்கு பலகாரமும் காபியும் கொடுக்கச் சொல்லிவிட்டு இவள் உள்ளே போய் விட்டாள்.

கோயம்புத்தூரில் வேலை இருந்ததாம். மாயா நினைவு வந்து வந்தானாம்—

தியாகு அன்று சொன்னது சரிதான்.

கார்த்திக்கின் கண்கள் எக்ஸ்ரே கண்கள். இவளை உரித்துப் பார்ப்பது போன்ற பார்வை இன்று புரிந்தது.

நினைப்பே கசந்தது.

கார்த்திக் என்ன எதிர்பார்த்து வந்தானோ? மாயாவின் மௌனத்தில் என்ன புரிந்து கொண்டானோ?

'மாயாவுக்கு உடம்புக்கு ஒன்றும் இருப்பதாக நான் நினைக்கவில்லை டாக்டர் சத்யகுமார்....அங்கே எத்தனை வேலை? என்ன மாதிரியான வாழ்க்கை? நூறு ஆண்களை சமாளிக்கும் திறமைசாலி! இங்கு செய்வதற்கு ஒன்றுமில்லாமல் மனசுக்குள் ஒடுங்கிவிட்டாளே என்றே நான் நினைக்கிறேன்...இளைத்து, முகம் சோர்ந்து மௌனமாய் இருப்பதிலிருந்து ஏதோ மெண்ட்டல் டிப்ரஷன் என்று புரிகிறது. மறுபடி மெட்ராஸ் லைஃப்புக்கு வந்தால் எல்லாம் சரியாகிவிடும். வொய் டோண்ட் யூ ட்ரை இட்?'

கார்த்திக் தனக்குத்தான் மனோதத்துவம் தெரிந்தமாதிரி பேசிவிட்டுப் போய்ச் சேர்ந்தான்.

வேலைக்குச் சென்று சீக்கிரமாய்த் திரும்பிய சத்யா ஏதோ யோசனையாய் இருந்ததை முகம் காட்டியது.

லானில் அமர்ந்து டீ சாப்பிட்டார்கள்—இவள் அவன் தோளில் கையை ஊன்றிக் கொள்ள கொஞ்ச நேரம் நடந்தார்கள்.

'மாயா—'

'ம்?...'

'வந்து...நீ உன் வேலைகளைப் பற்றி ஏன் பேசுவதே இல்லை மாயா? மறுபடி ராம்நாத்தைக் காண்ட்டாக்ட் செய்து வேலை இருக்குமா என்று கேளேன்—கால் சரியானதும் மெட்ராஸுக்குப் போகலாமா? நானும் வருகிறேன்.'

என்ன சொல்லுவாள் மாயா?

'வேண்டாம் சத்யா?'

'வொய்?'

"சும்மா—எனக்குப் பிடிக்கவில்லை—"

"ஏன் பிடிக்கவில்லை? எனக்கு நம்பக் கஷ்டமாக இருக்கிறது—மாயா?"

"வேண்டாம் சத்யா—எனக்கு இஷ்டமில்லை—டோண்ட் ஃபோர்ஸ் மீ..."

"ஏன் மாயா? நீ இங்கே வரணும் என்று நான் ஆசைப்பட்டதுண்டு. அதற்காக உன் மனத்திருப்தியைப் பணயமாக வைக்க நான் சம்மதிக்க மாட்டேன்..."

மாயா பதில் சொல்லவில்லை.

உள்ளே போகத் திரும்பி விட்டான்.

அதன் பின் ரொம்பவும் பேசாமல் சாப்பிட்டுப் படுத்தார்கள்.

புரண்டு படுத்துத் தூக்கத்திலிருந்து விழித்த மாயா, சத்யாவின் படுக்கை காலியாக இருப்பதை உணர்ந்து கண்களைத் திறந்தாள்.

மணி என்ன? இரவு பதினொன்று.

சத்யா எங்கே போனார், இந்த வேளையில்?

எழுந்து பார்த்தாள்.

லைப்ரரி அறைக்கதவு சாத்தி இருந்தது.

தள்ளினாள்—திறந்தது.

சத்யா போனில் பேசிக் கொண்டிருந்தான்.

"இல்லை...என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. அதனால் தான்...சென்னைக்குப் போனால் தேவலை என்று நினைக்கிறேன்—ஆராய்ச்சியா? ஐ ஆம் ஸாரி—என் மனைவியின் உடல்நிலை எனக்கு அதைவிட முக்கியம்...

டாக்டர்களை அனுப்புங்கள். முடிந்தவரை பார்க்கட்டும்—என் நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்... ப்ளீஸ்...'

ஓ! மாயா மறுபடி வேலைக்குப் போக மறுத்து விட்டதால் தன் வேலையை மாற்ற முயலுகிறாளோ?

சத்யா—

எனக்காகவா?

போனை வைத்துவிட்டுத் திரும்பிய சத்யா, மாயாவை எதிர்பார்க்கவில்லை

மாயா மெல்ல உள்ளே போனாள்.

சத்யா உட்கார்ந்திருந்த நாற்காலியின் கீழ் அமர்ந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

அவன் முழந்தாளில் முகத்தைப் பதித்தாள்.

பிறகு பேசினாள்—

''சத்யா. எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. சத்யா. ...முன்பு உலகம் புரியாமல் இருந்தேன்... உங்களை, உங்கள் அன்பான உள்ளத்தை அறிந்து கொள்ளாத மூடமாய் இருந்தேன்... பேரும், புகழும், போலியான பாராட்டுரைகளும், சாஸ்வதமென்றும், வஞ்சக நண்பர்களெல்லாம் உண்மையானவர்கள் என்றும் எண்ணி நான் ஏமாந்த வாழ்க்கை போதும் சத்யா. அருவி கொட்டும் போது தான் ஆர்ப்பரிக்கும். நான் அருவியாக ஆர்ப்பரித்துக் கொட்டி இன்று அமைதியான நதியாகி விட்டேன்... வாழ்க்கையின் அர்த்தம்...உண்மை நெஞ்சின் மதிப்பு எல்லாம் புரிந்து, நிம்மதியாய் வாழக் கற்றுக் கொண்டு விட்டேன். என்னை மறுபடியும் சென்னைக்குக் கூட்டிப் போய் பழைய நரகத்தில் தள்ளி, எப்போது இவள் நழுவி விழுவாள் என்று என்னைச் சுற்றி வட்ட மடித்த சுறா

மீன்களுக்கு என்னை இரையாக்காதீர்கள் சத்யா—சத்யா—நான் சொல்லுவது புரிகிறதா? சத்யா — ஆ! சத்யா'

விசித்து விசித்து தான் உணர்ந்த நெஞ்சத்து உண்மையைக் கண்களின் வழியாகக் கண்ணீராகக் கொட்டும் அன்பு மனைவியைப் பார்த்தான் சத்யா.

குனிந்து அவளைத் தூக்கி மடியில் உட்கார வைத்துக் கொண்டு அழும் குழந்தையைச் சமாதானம் செய்வது போல ஆதரத்துடன் அணைத்து மெல்லத் தட்டிக் கொடுத்தபோது தன் உணர்ச்சிகளைச் சரியாகக் கணவர் புரிந்து கொண்டது மாயாவுக்குப் புரிந்தது.

முற்றும்

27856
434633

என் குறிப்பு

மாயாவை எனக்கு நன்றாகத் தெரியும். வெகுகாலமாக நான் அவளை அறிவேன். அவள் மலர்ந்ததும், மகிழ்ந்ததும், வால் நட்சத்திரமாய் உயர்ந்ததும், தன்னை மறந்து சிலிர்த்ததும், பின்பு தெளியத் தொடங்கியதும் எனக்குப் பூரணமாய்த் தெரியும். 'குழம்பி இருந்த நான் இன்று அமைதியான வாழ்க்கை வாழ்கிறேன். என் கதையை எழுது' — என்று அவள் கேட்டுக் கொண்டதன் பேரில் 'சுறாமீன்களை' எழுதியிருக்கிறேன் — மாயாவுக்கு நன்றி!

— சிவசங்கரி